பக்கங்கள் - 24
விலை - 30ரூபா

# உதயன்

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

சுடர் 34 கதிர் 242 ஆடி 13 ஆம் நாள் திங்கட்கிழமை 29 ஜூலை 2019 வள்ளுவர் ஆண்டு 2050



Now in JAFFNA
Dip/HND in
Business Management
Leading to BBA Hons
BLC CAMPUS
0777 174 443
4th Lane, Brown Road, Jaffna.
T : 021 493 5555, 021 493 6666
E : info@blccampus.edu.lk
www.blccampus.edu.lk


# தமிழ் மக்களின் பேரம் பேசும் சக்தியாக மாற்று அணி கட்டியெழுப்பப்படவேண்டும்

## மக்கள் நன்மைக்காக பலத்தை பிரயோகிக்காதது தவறு: கூட்டமைப்பு இதை உணர்ந்திருக்கும் என்கிறார் விக்னேஸ்வரன்

கிளிநொச்சி, ஜூலை 29

இதுவரை இருந்த பலத்தை எமது மக்களின் நன்மைக்காகப் பாவியாது விட்டமை எவ்வளவு பெரிய தவறு என்பதை தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு இப்போது உணர்ந்திருக்கும் என்று நம்புகின்றேன். ஆகவேதான் தமிழ் மக்களின் பேரம் பேசும் சக்தியாக, கட்சி பேதங்கள் இன்றி ஒரு மாபெரும் மாற்று அணியைக் கட்டியெழுப்ப வேண்டிய காலத்தின் கட்டாயம் இன்று எழுந்திருக்கின்றது. அவ்வாறானதொரு அரசியல் கூட்டிணைவை விட எம்மை காக்கப்போவது வேறொன்றுமில்லை. இவ்வாறு இணைவதானால் கட்சிகள் சுயநலம் களைவது அவசியம். கட்சிகளின் சுயநல சிந்தனைகள் தமிழ் மக்களின் விடிவுக்கு இடம்கொடுக்கமாட்டா என்பதை நாம் புரிந்து கொள்ள வேண்டும். இவ்வாறு வடக்கு மாகாண முன்னாள் முதலமைச்சர் சி.வி.விக்னேஸ்வரன் தெரிவித்தார். 19

## சிறுவர்களின் கல்லெறிகள் பாதிக்க மக்கள் அனுமதியார்

விக்னேஸ்வரன் குத்தல் பேச்சு

கிளிநொச்சி, ஜூலை 29

ஒரு சிலரின் தனிப்பட்ட அரசியல் நலனுக்காக என்மீது நேரடியான போர் ஒன்று தொடுக்கப்பட்டுள்ளதை நான் நன்கறிவேன். இது பற்றி நான் சலனப்படப் போவதில்லை. பயணம் பக்குவ 07

## 7ஆம் திகதி பேரணி பேரவை அழைப்பு

யாழ்ப்பாணம், ஜூலை 29

வடக்கு - கிழக்கு உள்ளிட்ட தமிழர் தாயகம் தழுவியதாக எதிர்வரும் செப்ரெம்பர் மாதம் 7ஆம் திகதி, யாழ்ப்பாணத்தில் மாபெரும் மக்கள் எழுச்சிப் பேரணி இடம்பெறவுள்ளதாக தமிழ் மக்கள் பேரவை அறிவித்துள்ளது.

தமிழ் மக்கள் பேரவையின் மையக் குழுக் கூட்டம் 19

## மாவிட்டபுரத்தில் கைக்குண்டு மீட்பு

தெல்லிப்பழை, ஜூலை 29

மாவிட்டபுரம் கந்தசுவாமி கோவிலுக்கு அண்மித்த வீதி 19

## நெல்லியடியில் 2 கிலோ கஞ்சா நேற்று மீட்பு

சந்தேகத்தில் இருவர் கைது

வடமராட்சி, ஜூலை 29

வடமராட்சி, நெல்லியடி நகரப்பகுதியில் 2 கிலோ கஞ்சாவை உடைமையில் வைத் 19

## தண்டனைகள் கடுமையானால் தவறுகள் குறைவடையும்

கூறுகிறார் சட்டமா அதிபர்

கொழும்பு, ஜூலை 29

தவறு இழைக்காதிருப்பதற்கு மனிதர்களிடையே அச்சத்தை ஏற்படுத்த வேண்டும். தற்போது காணப்படும் செயற்பாடுகள் அவ்வாறு பயத்தை ஏற்படுத்துவதாக இல்லை. இவ்வாறு சட்டமா அதிபர் தப்புல டி லிவேரா தெரிவித் 07

மன்னார்

## பிரதேச சபை அடையாளப்படுத்திய இடத்திலேயே திருக்கேதீச்சர வளைவு

இந்து மக்கள் நேற்றுத் தீர்மானம்

மன்னார், ஜூலை 29

மாந்தைச் சந்தியிலிருந்து 300 அடி தூரத்தில் அல்லது லூர்து மாதா ஆலய முடிவில் திருக்கேதீச்சர ஆலய வளைவு அமைக்கப்பட வேண்டும் என்ற கத்தோலிக்க மக்களின் கோரிக்கையை 02

## தந்தை வழியில் பயணித்தால் சஜித்துக்கும் அதோ கதிதான்

எச்சரிக்கிறார் மகிந்த ராஜபக்ச

கொழும்பு, ஜூலை 29

தந்தையின் வழியிலேயே தானும் பயணிக்கவுள்ளதாக சஜித் பிரேமதாச கூறி வருகின்றார். அவ்வாறானால் அவருக்கும் அதோகதிதான். தயவு செய்து அவரது தந்தையின் வழியில் செல்ல வேண்டாம் என்று 19

கைகள் பின்புறம் கட்டப்பட்ட நிலையில்

## வடமராட்சியில் மீட்கப்பட்ட பெண் தவறான முடிவு எடுத்தே சாவு

உடற்கூற்றுப் பரிசோதனையில் தெரிவிப்பு

யாழ்ப்பாணம், ஜூலை 29

பின்புறம் கைகள் கட்டப்பட்ட நிலையில் வடமராட்சிப் பகுதியில் 07



## ஒட்டுசுட்டானில் டிப்பர் மோதியதில் 12 எருமை மாடுகள் உயிரிழப்பு

முல்லைத்தீவு, ஜூலை 29

மாங்குளம் - ஒட்டுசுட்டான் வீதியில் வேகமாகப் பயணித்த டிப்பர் வாகனம் 12 எருமை மாடுகளை மோதித் தள்ளியதில் அவை அந்த இடத்திலேயே உயிரிழந் 19

## அரச வேலை தேடும் பட்டதாரிகளால் யாழ்ப்பாணத்தில் இன்று கவனவீர்ப்பு

கொடிகாமம், ஜூலை 29

அரச வேலை தேடும் பட்டதாரிகளின் கவனவீர்ப்பு போராட்டமும் நியமனம் கிடைக்காதவர்களுக்கான பதிவுக 07

## அரச தலைவர் தேர்தலை பாதிக்கப் போகும் மழை

கொழும்பு, ஜூலை 29

அரச தலைவர் தேர்தல் பரப்புரைகள், மோசமான காலநிலையால் பாதிக்கப்படக்கூடும் என்று வளி 07


வெளிநாடுகளுக்கான துரித தபால்கள்
பொதிகள் சேவை
COURIER Services
ஆகாய, கடல்மார்க்கமாக அதிவிரைவான பொதிகள் சேவை
பால்மா, கடலுணவு, இறைச்சி வகைகள், எண்ணெய் வகைகள், மருந்துப் பொருட்கள், பழவகைகள், குறுகிய வாழ்நாள் காலம் உள்ள உணவுப் பொருட்கள் அனைத்தையும்
அதிகுறைந்த கட்டணத்தில் அதிவிரைவான சேவை
20 வருடகால அச்சுத்துறை அனுபவம்
இன்று முதல் புலம்பெயர் உறவுகளுடன் உறவுப் பாலமாக...
ஹரிகணன்
வடக்கின் அச்சகதாரர்
021 222 2737

# ஒழுக்கம் பேணுவோம்

*ஒழுக்கம் விழுப்பம் தரலான் ஒழுக்கம்*
*உயிரினும் ஓம்பப்படும்*

என்பது வள்ளுவர் வாக்கு. ஒழுக்கத்தால் மட்டுமே விழுப்பம்(சிறப்பு)வந்து சேரும். ஆதலால் ஒழுக்கத்தை நாம் உயிரினும் மேலாகக் கருதிக்கண்ணெனப் போற்றுதல் எம் கடமையாகும். ஒருவரைப் போற்றுதல் எம் கடமையாகும். ஒருவருக்குப் பல்வேறு திறமைகள் இருக்கலாம். ஆனால் அவரிடம் ஒழுக்கம் இல்லை என்றால் எதுவுமே இல்லை எனலாம். மாணவர்களுக்கு ஒழுக்கமே தலை சிறந்ததாக வேண்டப்படுகிறது.


மகாத்மா காந்தியடிகள் மனிதருள் மாணிக்கம் எனப் போற்றப்படுவர். அவர் மாணவர்களுக்குப் பின்வருமாறு கூறுகிறார். நீங்கள் கீதை சுலோகங்களை மனப்பாடம் செய்வதால் மகிழுந்து விடமாட்டேன். வரலாறு,சமஸ்கிருதம் முதலியவற்றைக் காற்றாலும் - கற்கா விட்டாலும் எனக்குக் கவலை இல்லை. முக்கியமாக ஒழுக்கம் பயில வேண்டும். காந்தியடிகளின் இக்கூற்று நமக்கு எதனை உணர்த்துகிறது. ஒழுக்கம் பேணுதலே எமது தலையாய கடமை என்பதை உணர்த்துகிறது. 'தன் ஆசிரியரை உதாசீனப்படுத்துபவன் எவ்வளவு பெரிய அறிவாளி ஆனாலும் அவன் கல்வி வீணாகிவிடும்"என்று அவர் சுட்டிக்காட்டுகிறார். இன்றைய மாணவரே நாட்டின் வருங்காலத் தலைவர்கள்.

ஏடு தூக்கிப் பள்ளியில்
இன்று பயிலும் சிறுவரே
நாடு காக்கும் தலைவராய்
நாளை விளங்கப்போகிறார்"என்கிறார் குழந்தை கவிஞர் அழ.வள்ளியப்பா.

நாளைய தலைவர்களாக விளங்கப் போகும் இன்றைய சிறுவர்கள் ஒழுக்கமுள்ள ஒரு சமுதாயமாக வளர்த்தெடுக்கப்படல் வேண்டும். உலகத்தோடு ஒட்ட ஒழுகுதலும் தீய சொற்களைப் பேசாதிருப்பதும் ஒழுக்கத்தின் பாற்படும். பெரியோரை மதித்து நடத்தல் தன் கொள்கையில் மாறாது நிற்றல், பிறருக்கு உதவுதல், அறத்தின் வழியில் பொருள்சேர்த்து மகிழ்ந்து வாழல், மடமையைப் போக்குதல், பிறர் குறிப்பறிந்து நடத்தல் ஆகிய குணாங்கள் சேர்ந்தே ஒரு மனிதனின் ஒழுக்கத்தை நிர்ணயிக்கின்றன. மனிதன் மனிதனாக வாழ்வதே தலைசிறந்த ஒழுக்கம் எனலாம்.

"நன்றும் தீதும் பிறர்தர வாரா" நன்மையும் தீமையும் கைகளிலேயே தங்கியிருக்கின்றன. எனவே மாணவர்களாகிய நாம் ஒழுக்கத்தை உயிர் மூச்சாகக் கருதிப்பேண வேண்டும். ஒழுக்கம் பேணி உயர்வடைதலே எமது குறிக்கோளாக அமைதல் வேண்டும்.

# கர்வம் பிடித்த நரி



ஓர் அடர்ந்த காட்டில் கர்வம் பிடித்த நரி ஒன்று வாழ்ந்து வந்தது. அந்த நரி ஒரு நாள் காலையில் உணவைத்தேடி வேட்டைக்கு மேற்கு நோக்கி கிளம்பியது. அப்போது கிழக்கே இருந்து எழுந்த சூரிய ஒளியால் நரியின் நிழல் மிகப் பெரியதாகத் தெரிந்தது.

தனது நிழலைப் பார்த்த நரிக்கு ஒரே சந்தோசம். "நான் மிகவும் பெரிய ஆள். அதுவும் இந்தக் காட்டின் ராஜாவாக உள்ள சிங்கத்தை விடவும் பெரியவனாக நான் உள்ளேன் என நினைத்துக்கொண்டே வேட்டைக்குச் சென்றது. செல்லும் வழியில் நரி ஒரு சிங்கத்தைக் கண்டது. சிங்கமோ சற்று முன்னர் தான் ஒரு மானை வேட்டையாடி அதை உண்ட களைப்பில் மெதுவாக நடந்து வந்து கொண்டிருந்தது. நரியும் தன்னுடைய நிழல் சிங்கத்தைவிடவும் பெரியதாக இருப்பதாக நினைத்துக் கொண்டு சிங்கம் வரும் வழியில் நடந்து சென்றது. சிங்கமும் உண்ட களைப்பில் இருந்ததால் நரியை ஒன்றும் செய்யாமல் கடந்து சென்றது.

நரிக்கோ ஒரே குஷி. நாம் சிங்கத்தை விடவும் பெரியதாக இருப்பதனால் சிங்கம் என்னைக் கண்டு பயந்து சென்றது என நினைத்து க் கொண்டு அன்று மாலை தன்னுடைய வீட்டுக்குச் சென்றது.

மாலை வீட்டுக்குச் சென்றதும் காட்டில் உள்ள மிருகங்களை எல்லாம் நரி அழைத்தது. அனைத்து மிருகங்களும் நரியின் கூட்டத்துக்கு வருகை தந்தன. நரி அனைத்து மிருகங்களிடமும் "இனிமேல் இந்த காட்டுக்கு நான்தான் ராஜா"என்றது.


யானையோ இதை நாங்கள் ஏற்க முடியாது" என்றது. உடனே நரி காலையில் நடந்த சம்பவத்தைக் கூறி "சிங்கமே என்னைப் பார்த்துப் பயந்து சென்றது"என்றது. கூட்டத்தில் இருந்த மானோ "சிங்கத்தை உன் முன் மண்டியிடச் சொல். பிறகு உன்னை இந்தக் காட்டுக்கு ராஜாவாக்குகிறோம்"என்றது.

அடுத்த நாள் நரி அந்தச் சிங்கத்தைப் பார்த்து நரி "என் முன்னால் மண்டியிட்டுச் சொல்"என்று கூறியது. சிங்கமோ மிகவும் கோபத்துடன் தரக்குறைவாகப் பேசிய நரியைப் பார்த்து "உன்னை மன்னித்து விடுகிறேன் உடனே இங்கிருந்து ஓடிவிடு" என்றது.

நரியோ சிங்கம் தன்னைக் கண்டு பயந்து விட்டது என நினைத்து "முடியாது"என்று பதில் கூறிக்கொண்டே தன்னுடைய நிழலைப் பார்த்தது. அது மதிய நேரம் என்பதால் நரியின் நிழல் உண்மையான அளவில் இருந்தது. சூரிய ஒளியில் தன்னுடைய நிழல் பெரிதாக இருந்தது என்பது அப்பொழுதுதான் நரிக்குப் புரிந்தது.

இதனைப் பொறுத்துக்கொள்ள முடியாத சிங்கம் நரியை ஒரு அடியில் அடித்துக்கொன்று தின்றது.

# வர்ணம் தீட்டுவோம்



## பிரதேச...

ஏற்க முடியாது. மாந்தைச் சந்தியிலிருந்து 85 அடி தூரத்தில், மன்னார் பிரதேச சபை அடையாளப்படுத்திய இடத்திலேயே திருக்கேதீச்சர வளைவு அமைக்கப்பட வேண்டும். இவ்வாறு இந்து மக்கள் நேற்றுத் தீர்மானித்துள்ளனர்.

திருக்கேதீச்சர அலங்கார வளைவு தொடர்பான கூட்டம் மன்னார் மாவட்டச் செயலகத்தில் இன்று இடம் பெறவுள்ளது. இதன்போது அலங்கார வளைவு சந்தியிலிருந்து எவ்வளவு தூரத்தில் அமைக்கப்பட வேண்டும் என்று கருத்தறியும் சந்திப்பு நேற்று இடம்பெற்றது. திருக்கேதீச்சரத்தின் சம்பந்தர் மடத்தில், திருக்கேதீச்சர திருப்பணிச் சபையின் இணைச் செயலர் எஸ்.இராமகிருஷ்ணன் தலைமையில் இடம்பெற்றது.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

சிவராத்திரி தினத்துக்கு முதல் நாள் திருக்கேதீச்சர ஆலயத்தின் அலங்கார வளைவு கத்தோலிக்க மக்கள் சிலரால் பிடுங்கி எறியப்பட்டது. இது தொடர்பான வழக்கில் இரு தரப்பினரும் பேசி உடன்பாட்டுக்கு வருமாறு நீதிமன்றம் கட்டளை பிறப்பித்திருந்தது. மன்னார் பொலிஸ் அத்தியட்சகர், மன்னார் மாவட்டச் செயலர் தலைமையில் கடந்த சில வாரங்களாக கத்தோலிக்க மதத்தினருக்கும் இந்து சமய தலைவர்களுக்கும் இடையில் பேச்சுக்கள் நடைபெற்றன. இணக்கப்பாடு எட்டப்படவில்லை.

சந்தியிலிருந்து 300 மீற்றருக்கு அப்பால் அல்லது மாந்தை லூர்து மாதா ஆலயம் முடிவடையும் இடத்தில் வளைவு கட்டலாம் என்று கத்தோலிக்க மக்கள் சார்பில் கருத்து தெரிவிக்கப்பட்டுள்ளது. மன்னார் மாவட்டச் செயலகத்தில் நாளை (இன்று) நடைபெறும் கூட்டத்தில், அலங்கார வளைவு எவ்வளவு தூரத்தில் அமைக்கப்படும் என்பது தொடர்பில் மக்களின் கருத்தை அறிய விரும்புகின்றேன் என்றார்.

'வளைவு மாந்தைச் சந்தியில் அமைக்கப்பட வேண்டும். சந்தியிலிருந்து 85 அடி தூரத்தில் அமைக்குமாறு பிரதேச சபைத் தவிசாளர் கேட்டுக் கொண்டதற்கு அமைவாக கேதீச்சர ஆலய நிர்வாகத்தினர் அதனை ஏற்றுக் கொண்டார்கள். லூர்து மாதா ஆலயத்துக்காகவும், கத்தோலிக்க மக்களுக்காகவும் நாங்கள் எவ்வளவோ விட்டுக் கொடுப்புக்களைச் செய்துவிட்டோம். கத்தோலிக்க மக்கள்தான் தமது நல்லெண்ணத்தைக் காட்டவேண்டும். பிரதேச சபையால் கூறப்பட்டதைப் போன்று 85 அடியில் அமைக்கும்போதுதான், கத்தோலிக்க மக்களுக்கும், இந்து மக்களுக்கும் இடையில் புரிந்துணர்வு ஏற்படும்' என்று மக்கள் தெரிவித்தனர்.

'நானாட்டான் பிரதேசத்தில் இந்து ஆலயங்களில் சூலாயுதங்களை பிடுங்கி எறிந்தவர்களைப் பொலிஸார் கைது செய்தனர். நாம் நல்லெண்ணத்தின் அடிப்படையில் அவர்களுக்கு தண்டனை வழங்கப்படாமல் காப்பாற்றியுள்ளோம். நானாட்டான் மகா வித்தியாலயம். இந்து, முஸ்லிம், கத்தோலிக்க மாணவர்கள் கற்கும் பாடசாலை. மூன்று மாதங்களுக்கு முன்னர் டிலாசால் கல்லூரி என்று கிறிஸ்தவப் பெயரை மாற்றினார்கள். நாம் அதனையும் விட்டுக் கொடுத்தோம். பெயர் மாற்றம் செய்வதற்கு அரசியல் செல்வாக்கை கிறிஸ்தவ மக்கள் பயன்படுத்தியுள்ளார்கள்' என்று மக்கள் மேலும் தெரிவித்தனர்.

திருக்கேதீச்சர திருப்பணிச் சபையின் இணைச் செயலர் எஸ்.இராமகிருஷ்ணன் இறுதியாக கருத்துத் தெரிவிக்கையில், மன்னார் இந்து மக்களின் கருத்துத்தான் எனது கருத்தும். கனவான் ஒப்பந்தத்தை கத்தோலிக்க மக்கள் மீறியுள்ளார்கள். திருக்கேதீச்சரம் தமிழரின் அடையாளம். ஆயர் இல்லம் மதிப்பளித்து மன்னார் பிரதேச சபை சட்டபூர்வமாக வழங்கிய 85 அடி தூரத்தில் வளைவு அமைக்க மனப்பூர்வமான சம்மதத்தை தெரிவிக்கவேண்டும், - என்றார். இந்தக் கலந்துரையாடலில் மன்னார் மாவட்ட இந்து ஆலயங்களின் ஒன்றியத் தலைவர் கதிர்காமநாதன், திருக்கேதீச்சர முதன்மைக் குரு கருணானந்த குருக்கள், சித்தி விநாயகர் பாடசாலையின் முன்னாள் அதிபர் தயானந்தராஜா, திருக்கேதீச்சரத்தின் நம்பிக்கை நிதியப் பொறுப்பாளர் பிருந்தாவன நாதன், சட்டத்தரணி தாமராஜ் வினோதன், மன்னார் இந்து மக்கள் பேரவைத் தலைவர் மகாதர்மகுமார குருக்கள் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர். (இ.5.213)

**வேலையாள் தேவை**

முகமாலையில் உள்ள பண்ணை ஒன்றிற்கு வேலையாள்கள் தேவை.
(ஆண்.பெண் இருபாலாரும் தேவை)
கவர்ச்சிகரமான சம்பளம் வழங்கப்படும்.
தொடர்புகளுக்கு:- 077 639 0032, 076 430 9652

## கண்ணீர் அஞ்சலி



வேலணை மேற்கு 8ஆம் வட்டாரத்தைப் பிறப்பிடமாகவும் லண்டனை வசிப்பிடமாகவும் கொண்ட

**திருமதி தையல்நாயகி மணிவாசகம்பிள்ளை**

**(மணி ரீச்சர்)**

*(ஓய்வு பெற்ற ஆசிரியர் - வேலணை மத்திய கல்லூரி)*

அவர்கள் 25.07.2019 அன்று காலமானதையிட்டு துயருற்றிருக்கும் அன்னாரின் குடும்பத்திற்கு ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக்கொள்வதுடன் அன்னாரின் ஆத்மா சாந்தியடைய எல்லாம் வல்ல முடிப்பிள்ளையாரின் பாதங்களை வேண்டி நிற்கின்றோம்.

(CS 27007)(4.17)

**வேலணை மேற்கு, 8ஆம் வட்டாரம்.**

பிரிவால் துயருறும் :
**திருமதி இ.நாகரெத்தினம் குடும்பத்தினர்.**

## குற்றங்களைத் தடுப்போம்




**Home CCTV Systems**
**AHD 4CH 1.3MP Outdoor CCTV**
Package Includes
1x DVR 4 Channel KKBRO
1x 1TB Hard Drive
4 x KKBRO 1.3MP Cameras
1x 100m BNC + Power cable
1x Power supply
Rs 29,900/-

**Home CCTV Systems**
**AHD 8CH 1.3MP Outdoor CCTV**
Package Includes
1x DVR 8 Channel KKBRO
1x 1TB Hard Drive
8 x KKBRO 1.3MP Cameras
1x 200m BNC + Power cable
1x Power supply
Rs 49,000/-




MICRO PC SYSTEMS
Micro Power Co Systems
021 222 5893 / 077 742 5973
077 396 3280 / 071 328 5260
218, Hospital Road, Jaffna.
email: jaffna@micropcsystems.com

## மரண அறிவித்தல்

### திருமதி பரமேஸ்வரி இராசதுரை



மண்ணில் 14.02.1950 விண்ணில் 27.07.2019

யாழ்ப்பாணம். தெல்லிப்பளையை பிறப்பிடமாகவும் வவுனியா வெளிக்குளத்தை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி பரமேஸ்வரி இராசதுரை 27.07.2019 காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சிதம்பரப்பிள்ளை - பொன்னுப்பிள்ளை தம்பதி களின் ஐந்தாவது மகளும் காலஞ்சென்றவர்களான சங்கரப்பிள்ளை - சின்னம்மா தம்பதிகளின் பாசமிகு மருமகளும் காலஞ்சென்ற இராசதுரையின் (இ.போ.ச முன்னாள் ஊழியர்) அன்பு மனைவியும் அனுஷா (வெளிக்குளம்). பிரேம்குமார் (நெதர்லாந்து). முகுந்தகுமார் (சுவிசர்லாந்து) ஆகியோரின் பாசமிகு தாயாரும் திலகேந்திரன் (வெளிக்குளம்). சன்ஜா (நெதர்லாந்து). லாவண்யா (சுவிசர்லாந்து) ஆகியோரின் அன்பு மாமியாரும் தர்சிகா. இலக்கிகா. கோசிகா ஆகியோரின் பாசமிகு அம்மம்மாவும் அவனிஸ்(நெதர்லாந்து). அஸ்மிதா (நெதர்லாந்து). ஜெயான் (சுவிசர்லாந்து). டிரோன் (சுவிஸர்லாந்து) ஆகியோரின் பாசமிகு அப்பம்மாவும் இராசமலர் (கனடா). பூமலர் (கனடா). கமலமலர் (கனடா) காலஞ்சென்ற இலக்குமனாதன் (கனடா) மற்றும் அம்பிகைபாகன் (பிரான்ஸ்). சந்திரன் (நெதர்லாந்து). செல்வராணி (பிரான்ஸ்) ஆகியோரின் அன்புச் சகோதரியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (30.07.2019) செவ்வாய்க் கிழமை நண்பகல் 12.00 மணியளவில் அன்னாரின் இல்லத்தில் இடம்பெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக பிற்பகல் 2.00 மணியளவில் வெளிக்குளம் இந்துமயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார். உறவினர். நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

**வெளிக்குளம், வவுனியா.**

(NE 848)(14.17)

தகவல்
**குடும்பத்தினர்.**

**024 205 2029**

## கண்ணீர் அஞ்சலி



தோற்றம் 30.09.1959 மறைவு 28.07.2019

வேலணை பிரதேச செயலகத்தில் கிராம உத்தியோகத்தராக கடமை யாற்றும் **வ.கோகுலதாஸ்** அவர்களின் அன்புத் தந்தையார்

**பரமசாமி வடிவேலு**

அவர்களின் மறைவையிட்டு துயருற்றிருக்கும் குடும்பத்தினருக்கு ஆழ்ந்த அனுதாபங்களைத்தெரிவிப்பதோடு அன்னாரின் ஆத்மா சாந்திடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

*ஓம் சாந்தி! சாந்தி! சாந்தி!*

(CS27103)(17.15)

**பிரதேச செயலாளரும் உத்தியோகத்தர்களும்**
**உத்தியோகத்தர் நலன்புரிச்சங்கம்**
**பிரதேச செயலகம், வேலணை**

## மரண அறிவித்தல்



தோற்றம் 07 . 11 . 1961
மறைவு 27 . 07 . 2019

### இலட்சுமணர் ரெட்டியார் இராஜகோபால்

யாழ்ப்பாணம் வெள்ளாந்தெருவைப் பிறப்பிடமாகவும், கச்சேரியடியை வசிப்பிடமாகவும் கொண்ட இலட்சுமணர் ரெட்டியார் இராஜகோபால் 27.07.2019 காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான இலட்சுமணர் ரெட்டியார் - சுப்புலட்சுமி தம்பதிகளின் அன்புப் புதல்வரும், காலஞ்சென்றவர்களான மகாலிங்கம் - சற்குணேஸ்வரி தம்பதிகளின் அன்பு மருமகனும், பர்மிலாவின் பாசமிகு கணவரும், கௌஷிகன், லோபிகா (கௌஷிகா), விவேகா ஆகியோரின் பாசமிகு தந்தையும், நாகேஸ்வரி (பூரணி), காலஞ்சென்ற சரஸ்வதி, மற்றும் விக்கினேஸ்வரி, முருகமூர்த்தி ஆகியோரின் பாசமிகு சகோதரனும், பிறேமிலா, குணலிங்கம், சர்மிலா, காலஞ்சென்ற ஜெயலிங்கம் ஆகியோரின் மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (30.07.2019) செவ்வாய்க் கிழமை அவரது இல்லத்தில் முற்பகல் 10 மணியளவில் இடம்பெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக கோம்பயன்மணல் இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**261/2, கண்டி வீதி, கச்சேரியடி, யாழ்ப்பாணம்.**

தகவல்:
**மனைவி.பிள்ளைகள்.**

**0768489672**

(J10314)(16.17)

## ஓராண்டு நினைவஞ்சலி

*அம்மா! உமையிழந்து ஆண்டொன்று ஆனதுவோ?*



மலர்வு 19 . 10 . 1963
உதிர்வு 07 . 08 . 2018

### அமரர் திருமதி பிறேமா இந்திரன்

**திதி:** அபரபக்க துவாதசி (29.07.2019)

**அம்மா!**
உமையிழந்து ஆண்டொன்று ஆனதுவோ?
ஆசைமுகம் மறைந்து அவலம் தான் சூழ்ந்ததுவோ?
செம்மையாம் சிரிப்பு செந்தளிப்பாம் பூவதனம்
சேர்ந்து மகிழ்ந்திருந்த செய்தியெல்லாம் மறைந்திடுமோ?
உம்மைக் காக்க உழைத்தோம் முடியவில்லை.
ஒவ்வோர் பொழுதுமிங்கு உம் நினைவில் வாடுகின்றோம்.
எம் வீட்டு நாயகியே!
என்றென்றும் நாம் மறவோம்!
இறைவன் தாள் மலரில் நீரமரப் பிரார்த்திப்போம்.
—ஓம் சாந்தி—

**வராஹி கோவிலடி, கொக்குவில் மேற்கு, கொக்குவில்.**

**ஆறாத வடுதனில், குடும்பத்தினர்**

CS27001 (16:17)

# விடுகதைகள்

1. கறுப்பாக இருக்கும் வரை இவனுக்கு கம்பீரம். அது என்ன?
2. கண்ணிற்குக் கறுப்பழகி. நாவிற்கு இனிப்பழகி அது என்ன?
3. கண்ணிற்கு வடிவானவன்; பார்வைக் குத் தெளிவானவன் அது என்ன?
4. காட்டில் கிடைத்த கட்டை கானமழை பொழிகிறது. அது என்ன?
5. சட்டை அவிழ்க்க அவிழ்க்க மறுசட்டை வந்து கொண்டே இருக்கும். அது என்ன?
6. சிறு சிறு கதவுகள் செய்யாத கதவுகள் திறக்க அடைக்க சப்தம் இல்லாத கதவு கள் அவை எவை?
7. சின்ன மீசைக்காரன் 'மியாவ் மியாவ்' ஓசைக் காரன். யார்?
8. சாத்திய கதவிருக்க, ஏற்றிய விளக்கி ருக்க, இரவில் வந்தது யார்? குருதி யைக் குடித்தது யார்?
9. செடிக்கு கீழ் வரும் கிழங்கு; செழும் யாக இருக்கும் பெண்மைக்கு இது பெருமை. அது என்ன?
10. செக்கச் சிவந்திருப்பாள் செட்டியார் மகள். நாளைச் சந்தைக்கு வருவாள். நாத்தியார் மகள். அது எது?

## விடை

1. தலைமுடி 2. நாவற்பழம்
3. கண், கண்ணாடி 4. மூங்கில்
5. வெங்காயம் 6. கண் இமைகள்
7. பூனை 8. நுளம்பு
9. மஞ்சள் 10. மிளகாய்

**வகுப்புகள்**

**Excel, Word, Power Point, Access** மற்றும் **O/L, A/L, ICT** வகுப்புக்கள் விரைவில் ஆரம்பமாகின்றன.

**IOFM Building**
125 பிரதான வீதி, யாழ்ப்பாணம்.
076 698 0531/ 077 732 8434

**வேலையாள்கள் தேவை**

கட்டைப்பிராயிலுள்ள **ஹாட்வெயார் கடைக்கு**
**ஹாட்வெயார்** வேலை மற்றும் **பெயின்ற்**
வேலை தெரிந்த வேலையாள்கள் தேவை.
**077 968 1095, 021 223 0202**

**PERSONAL CLASS**

தனியார் குழு வா

தரம் 03 முதல் O/L வரையான மாணவர்களுக்கு அனைத்து பாடங்களும் & A/L மாணவர்களுக்கு பௌதீகவியல், இரசாயனவியல், பொருளியல், வணிகக்கல்வி உட்பட அனைத்து பாடங்களும் வீடுகளில் வந்து கற்பிக்கப்படும். எமது கல்வி நிலையத்திலும் வந்து கற்கலாம்.

T.P-**076 016 1172**

**வேலைவாய்ப்பு**

யாழ்ப்பாணம், பிறவுண் வீதியில் (கலட்டிச் சந்திக்கு அருகில்) இயங்கும் மிருக வைத்திய சத்திரசிகிச்சை நிலையத்துக்கு பெண் உதவியாளர் உடன் தேவை.

(J 10408)(14.17)

**077 263 9573**

**விற்பனைக்கு உண்டு**

தேங்காய் எண்ணெய் அரைக்கும் இயந்திரம் 2 விற்பனைக்கு உண்டு.

(CS 26975)(14.17)

**077 841 1969**

**வீடு உடனடி விற்பனைக்கு**

கொக்குவில் கிழக்கு Technical College சுற்றாடலில், Railway Station இற்கு முன்பாக அறிவுத்திருக்கோயிலுக்கு அருகில் 1 ¾ பரப்புக் காணியுடன் கூடிய 3 அறைகள் கொண்ட வீடு உடனடி விற்பனைக்குண்டு. வாங்க விரும்புபவர்கள் நேரடியாகத் தொடர்புகொள்ளவும். (தரகர்கள் தேவையில்லை)

**Siva - 075 248 0527**
**Vicky - 077 780 2492**

## பாராட்டி வாழ்த்துகின்றோம்



**சுப்பையா மோகனராஜன்**
(J.P)
Justice of the peace
(Whole Island)

**(B.A.HONS (ECON) PGDE, M.Ed, PGDEM, SLPS - 1)**

எமது வித்தியாலயத்தின் முதல்வர் **சுப்பையா மோகனராஜன்** அவர்கள் **24.07.2019** ஆம் திகதி மேல் நீதிமன்ற நீதிபதி உயர்திரு.அன்னலிங்கம் பிறேம்சங்கர் முன்னிலையில் தீவு முழுவதுக்குமான சமாதான நீதவானாக சத்தியப்பிரமாணம் செய்து கொண்டார். இவர் மேலும் பல பட்டங்களும் பதவிகளும் பெற்று நீடூழி வாழ வாழ்த்துகின்றோம்.

**வாழ்த்துவோர் :- ஆசிரியர் நலன்புரிசங்கம்,**
**யா/அச்செழு சைவப்பிரகாச வித்தியாலயம், நீர்வேலி.**

(CS/7726981)
(11,17)

**ES Printers**
357, கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம்.
021 492 7471, 021 492 7472
esprintersjaffna@gmail.com

## UNIVERSITY OF JAFFNA FACULTY OF GRADUATE STUDIES POSTGRADUATE DEGREE PROGRAMME – 2019/2020

The Faculty of Graduate Studies, University of Jaffna calls applications from eligible candidates for the following Postgraduate two Degree Programmes.

**Master of Clean Energy Technologies- 2019/20 (Batch I)**
**(1 year) [Sri Lanka Qualification Framework (SLQF) Level 9]**
Thisdegree programme consists of taught courses only.

**and**

**Master of Science in Clean Energy Technologies – 2019/20 (Batch I)**
**(2 years) [Sri Lanka Qualification Framework (SLQF) Level 10]**
This degree programme consists of a research project of one-year duration,in addition to the taught courses of the **Master of Clean Energy Technologies**

**These programmes shall be conducted during the weekends.**
**Admission Requirements (For Both Degree Programmes):**

(a) BSc Honours degree in Chemistry / Physics
(b) BSc degree in Engineering
(c) BSc General Degree with Physics/Chemistry as a subject with at least one year of proven research / professional experience in physical science / technological discipline .
(d) Any other equivalent qualifications acceptable to the Board of Study in Physical Sciences of Faculty of Graduate Studies, University of Jaffna.

| Description | Master of Clean Energy Technologies | Master of Science in Clean Energy Technologies |
|---|---|---|
| Medium | English | English |
| Duration | 01 Year | 02 Years |
| Tuition Fee | Rs.150,000.00 | Rs.200,000.00 |
| Other fee | Rs. 50, 000.00 | Rs. 150,000.00 |
| Type of Selection | Written Test + Interview | Written Test + Interview |

The tuition fee can be paid in full or in two installments (50% at the registration and 50% at the beginning of the second semester) or in three installments (40% at the registration, 30% after 4 months from the date of registration and 30% after 8 months from the date of registration).

- The students who perform well in their first year of the study programme may get an opportunity to get trained at the Western Norway University of Applied Sciences, Norway or Coimbatore Institute of Technology, India for a short period.

For detailed curriculam of the above degree programmes, please visit http://project.jfn.ac.lk/hrncet/.

**Closing date for Application:30/08/2019**
**Duly completed applications should reach the Assistant Registrar of Faculty of Graduate Studies on or before 30/08/2019.**
**Application Fee: 1500/=**

Relevant information and prescribed application forms could be obtained from the Assistant Registrar, Faculty of Graduate Studies, University of Jaffna (T.P. : 021 222 3608) either in person or by post,on production of receipt in support of the payment of Rs. 1500/= per application form to the University Account Number **162-1-001-8-0000902** at the People's Bank.

Those who wish to obtain the application form by post are requested to send a money order for Rs.1500/= per application form drawn in favour of the **Bursar, University of Jaffna** together with a **self-addressed envelope** 22.5 × 10 cm ( 9" × 4" ) in size.

Application forms and other relevant details are also available in the **Faculty of Graduate Studies website www.grad.jfn.ac.lk** Those who apply in the downloaded application form should attach a money order for drawn in favour of the **Bursar, University of Jaffna** or the receipt in support of the payment of Rs.1500/= to the University Account Number **162-1-001-8-0000902** at the People's Bank.

Duly completed applications should be sent to the Assistant Registrar, Faculty of Graduate Studies, University of Jaffna, Thirunelvely by registered post or by hand **on or before the closing date of application**. Theprogrammme applied for should be indicated as **"Application for MSc in Clean Energy Technologies – 2019"** or **"Application for Master of Clean Energy Technologies – 2019"** on the top left-hand corner of the envelop accordingly.

**Incomplete, illegible or late applications will not be considered.**
Registrar

## மரண அறிவித்தல்கள்



தோற்றம்
22 . 12 . 1974

மறைவு
28 . 07 . 2019

### மயில்வாகனம் சிவராசா முருகபிரான்

(System Engineer, Malabar Gold, Dubai)

கரவெட்டி மத்தியைப் பிறப்பிடமாகவும் கொழும்பு , டுபாயை வசிப்பிடமாகவும் கொண்ட மயில்வாகனம் சிவராசா முருகபிரான் நேற்று (28.07.2019) ஞாயிற்றுக்கிழமை காலை இறைபதமடைந்தார்.


அன்னார் மயில்வாகனம் சிவராசா (முன்னாள் முரசெர்லி அதிபர்), பாலாம்பிகை தம்பதியினரின் அன்பு மகனும் உமாவின் பாசமிகுகணவரும் சௌமியாவின் அன்புத்தந்தையும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் (30.07.2019) செவ்வாய்க்கிழமை காலை 8.00 மணியளவில் பொரளை ஜெயரத்ன மலர்ச்சாலையில் அஞ்சலிக்காக வைக்கப்பட்டு பிற்பகல் 2.00 மணியளவில் இறுதிக்கிரியை நடைபெற்று மாலை 4.00 மணியளவில் கனத்தை இந்துமயானத்தில் தகனக்கிரியைகள் நடைபெறும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர் நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**ரவி றவல்ஸ் அபார்ட்மண்ட்,**
**இல 9 - 2/1 உருத்திரா மாவத்தை,**
**வெள்ளவத்தை.**

**தகவல்: மயில்வாகனம் சிவராசா**
**(தந்தை) 011 250 6773**

(CS23985) (17,15)



### பரமசாமி வடிவேலு

வேலணை துறையூர் 4 ஆம் வட்டாரத்தைச் சேர்ந்த பரமசாமி வடிவேலு நேற்று (28.07.2019) ஞாயிற்றுக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற பரமசாமி பொன்னரியம் தம்பதியினரின் அன்பு மகனும் பழனி காலஞ்சென்ற பராசக்தி தம்பதியினரின் அன்பு மருமகனும் அரச கேசரியின்பாசமிகுகணவரும்கிருஷாந்(கூட்டுறவுஅபிவிருத்திஉத்தியோகத்தர்), கோகுலதாஸ் (கிராமசேவகர் J/28, J/32 புங்குடுதீவு), நிரோஷன் (கமநல உத்தியோகத்தர், வேலணை) கிருஷிகா, துளசிகா ஆகியோரின் அன்புத் தந்தையும் இராசதுரை, புஸ்பராணி, காலஞ்சென்ற யோகம்மா மற்றும் குசேலராசா, சாரதாம்பாள், தனபாலசிங்கம் காலஞ்சென்ற விஜேந்திரன் மற்றும் அருளையா தம்பித்துரை, விமலாதேவிஆகியோரின்பாசமிகுசகோதரனும்சசிகலா(ஆசிரியர் சிவபுரம் அ.த.க பாடசாலை, வவுனியா), சண்ஜா (ஆசிரியர், நயினாதீவு மகாவித்தியாலயம்) , இருதயராசா ஆகியோரின் மாமனாரும் கனிஸ்ரிகா, கபிலாஸ் ஆகியோரின் பாசமிகு பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (29.07.2019) திங்கட்கிழமை அன்னாரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக பி.ப 1.00 மணிக்கு தாளையங்காடு இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

**077 285 2750**
**077 308 6910**

**தகவல்:**
**குடும்பத்தினர்.**

(CS10318) (17,15)

புளியங்கூடல் மைந்தனின்

# முதலாம் ஆண்டு நினைவலைகள்



தோற்றம்
16
.
09
.
1942

மறைவு
08
.
08
.
2018

## அமரர் காசிநாதர் பாலகிருஷ்ணன்

(முன்னாள் பிரதித்திட்டப் பணிப்பாளர், யாழ்ப்பாணம் மாவட்டச் செயலகம்)

**திதி: துவாதசி**

வரதராஜப் பெருமானின் கருணையினால்
வந்துதித்த மணிரங்கத்தின் கிருஷ்ணனே!
தீர்க்கதரிசியாய் நின்று மக்களுக்கு
சேவையாற்றி மனம் நிறைந்த தேவனே!
குடும்பத்திற்கும் உறவுகளுக்கும்
உறுதுணையாய் இருந்து வாழ்ந்தீர்கள்
நீங்கள் இறைவன் பாதம் புகுந்து
ஆண்டொன்று ஆனதை
நம்பத்தான் முடியவில்லை ஐயா!
மீண்டும் மணிரங்கத்தில் வந்துதித்திடக்
காத்துக் கிடக்கின்றோம், இறைவனை
இறைஞ்சுகின்றோம்.

மணிரங்கம்,
41, கேசாவில் பிள்ளையார் வீதி,
யாழ்ப்பாணம். (cs 27004) 13.17)

உங்கள் நினைவுகளைச் சுமந்துநிற்கும்
**குடும்பத்தினர்.**
**021 222 2684**

---

ஓம் விராட் விஸ்வப்பிரமனே நமஹ

# மரண அறிவித்தல்

## திருமதி அன்னலிங்கம் பாக்கியவதி



தோற்றம் 1937.11.20
மறைவு 27.07.2019

யாழ்ப்பாணத்தைப் பிறப்பிடமாகவும் மன்னாரை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி அன்னலிங்கம் பாக்கியவதி 27.07.2019 சனிக்கிழமை இறைபதம் அடைந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான வெள்ளையப்பாபத்தர் சுப்பம்மா தம்பதிகளின் அன்பு மகளும் காலஞ்சென்றவர்களான சின்னத்தம்பி செல்லம்மா தம்பதிகளின் பாசமிகு மருமகளும் காலஞ்சென்ற அன்னலிங்கத்தின் (உரிமையாளர் - Iron Work Shop) அன்பு மனைவியும் காலஞ்சென்றவர்களான சண்முகநாதன் (P.V.S நாதன் ஜீவலரி) பழனிவேல் பரமேஸ்வரி. நாகேஸ்வரி மற்றும் மகேஸ்வரி ஆகியோரின் சகோதரியும் காலஞ்சென்றவர்களான விநாயகமூர்த்தி. வேலாயுதம் அமரசூரிய மற்றும் தங்கம்மா. பரஞ்சோதி. யோசப்பின் ஆகியோரின் மைத்துனியும் கணேசலிங்கம் (Australia). நாகநாதன்(London).நாகநந்தினி (India). பிரபாகரன் (Italy). லதானி (Mannar) ஆகியோரின் பாசமிகு தாயாரும் சந்திரவதனா. மங்களேஸ்வரி. நளினி. சந்திரதாஸ் காலஞ்சென்ற ரவிக்குமார் ஆகியோரின் மாமியாரும் காலஞ்சென்ற கரிஸ்மா மற்றும் ஆதித்தியா. சாம்பவி. பைரவி. கோகிலன். வினியா. ஹேமபவளா. புகழலோஜினி. கிரிசாந்தன் ஆகியோரின் பேர்த்தியும் விநாயக்கின் அன்புப் பூட்டியுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (30.07.2019) செவ்வாய்க்கிழமை மு.ப 11.00 - மணியளவில் நடைபெற்று தகனக்கிரியைக்காக பூதவுடல் மன்னார் பொதுமயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

**19/1, Convent Road,**
**Mannar.** (CS 27002)(14.17)

தகவல்
**குடும்பத்தினர்.**
**076 216 5323**

---

# ஏக வற்சர பூர்த்தி நினைவுகள்



குவலயத்தில்
14
.
09
.
1971

சிவமயத்தில்
09
.
08
.
2018

## அமரர்
## கனகசபாபதி சுரேந்திரன்

(முன்னாள் பொது முகாமையாளர் - ப.நோ.கூ.சங்கம். செட்டிகுளம்)

**திதி: அபரபக்க திரயோதசி**

அன்பினாலுயர்ந்த ஆருயிர் தந்தையே
இன்பமாய் இணைந்த இனிய நம் வாழ்வினில்
துன்பமாய் ஆன உம் பிரிவினால் துவழ்கின்றோம் !
உங்களைப் போலொரு உறவினி யெமக்கேது ?

அன்பும் அரவணைப்பும் மிகுந்த உங்கள்
ஆன்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.
ஓம் சாந்தி ! சாந்தி ! சாந்தி !

**அன்பு மறவாத மனைவி, பிள்ளைகள்.**


பிரதான வீதி,
ரணேஸ் ஒழுங்கை,
மகாரம்பைக்குளம், வவுனியா.

கலாசாலை வீதி,
திருநெல்வேலி வடக்கு,
யாழ்ப்பாணம்.

(CS 26864)(04.17)

---

# மரண அறிவித்தல்



தோற்றம்
08
.
10
.
1938

மறைவு
25
.
07
.
2019

## திருமதி அன்னலட்சுமி குலசிங்கம்

யாழ். சாவகச்சேரியைப் பிறப்பிடமாகவும் முகமாலையை வசிப்பிடமாகவும் பிரான்சை தற்காலிக வதிவிடமாகவும் கொண்ட திருமதி அன்னலட்சுமி குலசிங்கம் 25.07.2019 வியாழக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான தில்லையம்பலம் - வள்ளிப்பிள்ளை தம்பதிகளின் அன்பு மகளும் காலஞ்சென்றவர்களான சிதம்பரப்பிள்ளை - அன்னப்பிள்ளை தம்பதிகளின் ஆசை மருமகளும் காலஞ்சென்ற குலசிங்கத்தின் அன்பு மனைவியும் பேரின்பநாதன் (நாதன்). சுலோசனா. விஜயகுமாரி (சாந்தி). யோகராணி (யோகம் - பிரான்ஸ்). சொர்ணலிங்கம் (ரவி - பிரான்ஸ்). நடேச ஈஸ்வரி (ஈசு - பிரான்ஸ்). கிருபாஸ்கரன் (கண்ணன்). அன்னகிருபா (கிருபா - பிரான்ஸ்). குலகேதீஸ்வரி (செல்வி - பிரான்ஸ்) ஆகியோரின் அன்புத் தாயாரும் காலஞ்சென்ற சின்னத்துரை. தவமணிதேவி ஆகியோரின் அன்புச் சகோதரியும். காலஞ்சென்ற அமிர்தாம்பிகை. குலமணி. குலராசமணி. சவுந்தரிபிள்ளை. காலஞ்சென்ற மனோன்மணி கணேசு ஆகியோரின் அன்பு மைத்துனியும். சிவபாலன். காலஞ்சென்ற சந்திரகுமார்(குமார்). நற்குணசீலன் (அன்ரன் - பிரான்ஸ்). சிவகுமாரன் (ஞானம்- பிரான்ஸ்). தேவசீலன (ரஞ்சன்- பிரான்ஸ்). புஸ்பராஜா (புஸ்பா- பிரான்ஸ்). காலஞ்சென்ற சிவமலர். ஜீவகி (ஜீவா- பிரான்ஸ்). வடிவேற்கரசி (குயிலி) ஆகியோரின் அன்பு மாமியாரும் குகன்- கலா. கௌரி - மயூரன். ரகு. ரொசான். கெங்கா. பிருந்தா. கோபி - லவன். நிரோன். அபிராமி. கோமதன். ரவினா. யூலியன். ஆதவன். தரணிகா. டயானா. அனுஸ். திவ்வியா. யூலி. சில்வி. வெர்ஜினி ஆகியோரின் அன்புப் பேர்த்தியும். கெவின். நிவேக். அபிரா. அர்ஷித். டிலுக்சன். வர்சன். அஷ்வின். ஆகியோரின் அன்புப் பூட்டியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் 01.08.2019 வியாழக்கிழமை பிரான்சில் நடைபெறும். இந்த அறிவித்தலை உற்றார். உறவினர். நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**கிருபாஸ்கரன் (கண்ணன்)**
**021 222 6356** (CS 27006)(14.17)

தகவல்
**குடும்பத்தினர்.**




## மரண அறிவித்தல்



தோற்றம் 24 . 06 . 1981 — மறைவு 27 . 07 . 2019

### திருமதி அந்திவண்ணன் ஜெயலட்சுமி

(தெல்லிப்பழை மகாஜனாக்கல்லூரி ஆசிரியை)

துர்க்காபுரம் தெல்லிப்பழையை பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி அந்திவண்ணன் ஜெயலட்சுமி 27.07.2019 சனிக்கிழமை இறைபதம் அடைந்தார்.

அன்னார் இராமச்சந்திரா லீலாவதி தம்பதிகளின் அன்பு மகளும் மகாலிங்கம் புஸ்பமலர் தம்பதிகளின் அன்பு மருமகளும் சிறிகுமரன் ரெக்ஸ் உரிமையாளர் அந்திவண்ணனின் அன்பு மனைவியும் திருவருட்செல்வி (சுவிஸ்), அருந்ததி(லண்டன்), விக்கினேஸ்வரன்(லண்டன்), பிரியதஷ்னி (கொமர்ஷல் வங்கி - யாழ்ப்பாணம்) ஆகியோரின் அன்புச் சகோதரியும் நேமிநாதன் (சுவிஸ்), கலைச்செல்வன் (லண்டன்), பானுகா(லண்டன்), ரமேஸ் (செலான் வங்கி - யாழ்ப்பாணம்) ஆகியோரின் அன்பு மைத்துனியும் அபிநயன், சைந்தவி, சாங்கவி, கஜந்தினி, அஸ்விகா, நிகேஸ் ஆகியோரின் சிறிய தாயாரும் அத்விகன், அதிருஸ்டன் ஆகியோரின் மாமியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (29.07.2019) திங்கட்கிழமை காலை 10.00 மணியளவில் அன்னாரின் இல்லத்தில் (துர்க்காபுரம் - தெல்லிப்பழை) நடைபெற்று பூதவுடல் கட்டுப்பிட்டி இந்துமயானத்தில் தகனம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்
குடும்பத்தினர்.
077 636 7393

(C 10809)(14.17)

## மரண அறிவித்தல்



### திருமதி புஸ்பதேவி மகாதேவன்

கரவெட்டி துன்னாலை மேற்கு இலக்குமி வாசாவை பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி புஸ்பதேவி மகாதேவன் நேற்று (28.07.2019) ஞாயிற்றுக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான ஆழ்வார்ப்பிள்ளை இலக்குமிப்பிள்ளை தம்பதியரின் அன்பு மகளும் காலஞ்சென்றவர்களான கதிர்காமு பத்தினி தம்பதியரின் அன்புமருமகளும் சி.க.மகாதேவன் (இளைப்பாறிய அஞ்சல் அதிபர், வடமராட்சி தெற்கு மேற்கு மத்தியஸ்த சபை உறுப்பினர் - இலக்கம் 254) அவர்களின் அன்பு மனைவியும் மகாகேதீஸ்வரன் (அதிபர் , யா/விக்கினேஸ்வரா ஆரம்ப பாடசாலை) அவர்களின் பாசமிகு தாயாரும் திருமதி சிவனேஸ்வரி (ஆசிரியை, யா/நெல்லியடி மெதடிஸ்தமிசன் தமிழ்க்கலவன் பாடசாலை) அவர்களின் அன்பு மாமியும் காலஞ்சென்ற வள்ளிப்பிள்ளை முருகேசு மற்றும் வெற்றிவேலு காலஞ்சென்ற இலட்சுமிப்பிள்ளை கந்தசாமி மற்றும் சிதம்பரம் கார்த்திகேசு காலஞ்சென்றவர்களான அருளம்பலம், தில்லையம்பலம் ஆகியோரின் மைத்துனியும் காலஞ்சென்ற வள்ளிராணி நவரட்ணத்தின் சகோதரியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (30.07.2019) செவ்வாய்க்கிழமை காலை 9.00 மணியளவில் அவரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைகளுக்காக வேரூண்டை இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

"இலக்குமி வாசா,
துன்னாலை மேற்கு, கரவெட்டி.
021 226 5792

தகவல்: மகாகேதீஸ்வரன் (மகன்)
077 670 3891, 077 929 5961

(Cs 23981) (17,15)

## தண்டனைகள்....

தார். கண்டி புனித அந்தோனியார் கல்லூரியில் இடம்பெற்ற நிகழ்வில் பங்கேற்று உரையாற்றுகையிலேயே மேற்கண்டவாறு கூறினார். போதைப்பொருள் குற்றங்களைக் குறைப்பதற்கு, போதைப் பொருள் கடத்தல் குற்றவாளிகளுக்கு சாவுத் தண்டனை விதிக்கப்பட வேண்டும் என்று அரச தலைவர் மைத்திரிபால சிறிசேன தொடர்ச்சியாக வலியுறுத்தி வரும் நிலையிலேயே, சட்டமா அதிபர் மேற்கண்டவாறு கூறியுள்ளார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

தவறிழைக்காமல் இருப்பதற்கு மனிதர்களிடையே அச்சத்தை ஏற்படுத்தும் இந்தச் செயற்பாடு நீண்ட காலமாக செயலிழந்துள்ளது. தண்டனை கடுமையாக்கப்பட வேண்டும். இதனை முன்னெடுக்க முடியும். சட்டவாட்சி இல்லை என்றால் ஜனநாயகம் இருக்காது. தமது பணியை உரிய வகையில் மேற்கொள்ளும் நிறுவனங்கள் மாத்திரமே, சட்டவாட்சியை உறுதிப்படுத்தி, சட்டத்தை நடைமுறைப்படுத்துகின்றன. எனது நிறுவனத்தை தூய்மையாக்குவதே என்னுடைய முதற் கடமையாகும். இலங்கையின் அனைத்து குடிமக்களும் சமமாக நடத்தப்பட்டால் தான் நாட்டில் சட்டவாட்சி உறுதிப்படுத்தப்படும். அது இலகுவான விடயமல்ல என்றாலும், நான் பதவியில் இருக்கும் வரை அந்தச் செயற்பாட்டை விரைவுபடுத்த நடவடிக்கை எடுப்பேன் - என்றார். (ஒ.5)

## சிறுவர்களின்...

மாகத் தொடரும். சிறுவர்களின் கல்லெறிகள் எம்மைப் பாதிக்க எம் மக்கள் விட மாட்டார்கள். இவ்வாறு வடக்கு மாகாண முன்னாள் முதலமைச்சர் சி.வி.விக்னேஸ்வரன் தெரிவித்தார். வடக்கு மாகாண முதலமைச்சர் சி.வி.விக்னேஸ்வரன், தமிழ் மக்கள் கூட்டணியை நிறுவி அதனுடன், தமிழ் மக்கள் பேரவையில் அங்கம் வகித்த கட்சிகளை இணையுமாறு அழைப்பு விடுத்திருந்தார். தமிழ் மக்கள் கூட்டணியில், சுரேஷ் பிரேமசந்திரன் தலைமையிலான ஈ.பி.ஆர்.எல்.எவ். இடம்பெறுமாக இருந்தால், அதில் இணையப் போவதில்லை என்று தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் தலைவர் கஜேந்திரகுமார் பொன்னம்பலம் கூறியிருந்தார். ஆனால் முதலமைச்சர் விக்னேஸ்வரன், மாற்று அணி பற்றி தொடர்ச்சியாக வலியுறுத் வந்தார். கட்சிகளின் கடந்த காலம் பற்றி ஆராயாமல் காலத்தின் தேவை கருதி கட்சிகள் ஒன்றிணைய வேண்டும் என்று கூறி வந்தார். ஆனால் கஜேந்திரகுமார் பொன்னம்பலம், சுரேஷ் பிரேமசந்திரன் இணைந்தால் தான் ஒரு போதும் விக்கியின் கூட்டில் இணையப் போவதில்லை என்று மீண்டும் தெரிவித்திருந்தார். இதனால் இரு தரப்பினருக்கும் இடையிலான கூட்டுக்கான பேச்சும் முறிந்திருந்தது. இதன் பின்னர் இரு தரப்பினரும் ஒருவர் மீது ஒருவர் குற்றச்சாட்டுக்களை முன்வைத்திருந்தனர். இவ்வாறானதொரு நிலையிலேயே, வடக்கு மாகாண முன்னாள் முதலமைச்சர் விக்னேஸ்வரன், கிளிநொச்சியில் வைத்து மேற்கண்டவாறு கூறியுள்ளார். 'நான் முதலமைச்சராக இருந்த காலத்தில் கூட எம்முடன் இணைந்து அரசியல் செய்த ஒரு தரப்பினர், தங்கள் அனைத்துப் பலங்களையும் பாவித்து என்னைத் துரத்துவதற்குப் பிரயத்தனம் செய்தார்கள். அந்தச் சதி முயற்சி எம் மக்களின் சக்தியால் முறியடிக்கப்பட்டது. அந்த மக்களின் நம்பிக்கைக்குப் பாத்திரமாக, நேர்மையான, விலைபோகாத, மக்களுக்கான அரசியலை முன்னெடுப்பதில் நான் உறுதியாக உள்ளேன் என்பதை இங்கு கூறி வைக்கின்றேன்.

உயிர்க்கொடை என்பது கொடைகளில் மிக உயர்ந்த கொடை. சாதாரண மனிதர்களால் அதை நினைத்துக் கூடப் பார்க்க முடியாது. எமது இனத்துக்காகத் தமது இன்னுயிர்களைத் தியாகம் செய்தவர்களை நாம் எந்தக் காலத்திலும் மறத்தலாகாது. எமது நன்மைக்காக உயிர் நீத்த உத்தமர்களின் தியாகங்களை கொச்சைப்படுத்த வேண்டாம் என்று அனைத்துத் தரப்பினரிடமும் நான் உரிமையுடன் வேண்டி நிற்கின்றேன்' என்று மேலும் தெரிவித்தார். (ஒ.5)

## வடமராட்சியில்...

கிணற்றிலிருந்து மீட்கப்பட்ட குடும்பப்பெண் தனது உயிரைத் தானே மாய்த்துக் கொண்டுள்ளார் என்று மருத்துவ அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது. தான் தப்பித்துவிடக் கூடாது என்பதற்காக அந்தப் பெண்ணே தனது கைகளை வாயால் கயிறு கொண்டு கட்டி காலின் கீழாக கைகளை பின்புறம் எடுத்துக் கொண்டு கிணற்றுக்குள் குதித்துள்ளார், இதனால் இறப்பு சம்பவித்திருக்கின்றது என்று மருத்துவ அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது. வடமராட்சி தம்பசிட்டியில் கிணற்றிலிருந்து பின்புறம் கைகள் கட்டப்பட்ட நிலையில் பெண் ஒருவரின் சடலத்தை பருத்தித்துறைப் பொலிஸார் மீட்டனர். ஜெயநாதகுரு கிருபாலினி என்ற பெண்ணை நேற்று முன்தினம் அதிகாலையில் இருந்து காணவில்லை என்று தேடப்பட்டு வந்த நிலையிலேயே அந்தப் பெண் கிணற்றிலிருந்து சடலமாக மீட்கப்பட்டார். அவரது கைகள் பின்புறம் கட்டப்பட்டிருந்ததால், யாராவது கொலை செய்துவிட்டு சடலத்தை கிணற்றில் வீசியிருக்கலாம் என்று சந்தேகம் கொண்ட பொலிஸார் சடலத்தை உடற்கூற்றுப் பரிசோதனைக்காக யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனைக்கு அனுப்பிவைத்தனர்.

உடற்கூற்றுப் பரிசோதனையை யாழ்ப்பாணம் சட்ட மருத்துவ அதிகாரி மயூரன் மேற்கொண்டிருந்தார். உடற்கூற்றுப் பரிசோதனையில், பெண் தனது உயிரை தானே மாய்த்துக்கொண்டார் என்பது தெரிய வந்துள்ளது. (ஒ.5,21,26)

## அரச வேலை தேடும்...

ளும் இன்று திங்கட்கிழமை காலை யாழ்ப்பாணம் மாவட்ட செயலகம் முன்பாக நடைபெறவுள்ளது. 2012ஆம் ஆண்டில் இருந்து இன்றுவரை நியமனம் கிடைக்காத உயர் தொழில்நுட்ப கல்லூரி மற்றும் வெளிவாரிப் பட்டதாரிகள் சம்பந்தப்பட்ட பதிவுகள் காலை 9.30 மணியிலிருந்து மேற்கொள்ள விருப்பதால் அனைத்துப் பட்டதாரிகளையும் சமுகம் தருமாறு அறிவிக்கப்பட்டுள்ளது. நேற்றைய பதிப்பில் மேற்படி போராட்டம் 'நாளை திங்கட்கிழமை' என்று குறிப்பிடுவதற்குப் பதிலாக 'இன்று திங்கட்கிழமை' என்று தவறுதலாகக் குறிப்பிடப்பட்டுள்ளது. தவறுக்காக வருந்துகிறோம். (ம-159)

## அரச...

மண்டலவியல் திணைக்களப் பணிப்பாளர் அத்துல கருணாநாயக்க தெரிவித்துள்ளார்.

செப்ரெம்பர் தொடக்கம் நவம்பர் வரை, இடைப் பருவமழைக் காலமாகும். இந்தக் காலத்தில் பெரும்பாலும் மாலை நேரங்களில் மழை பெய்யும். நாட்டின் மழைவீழ்ச்சியில் 30 சதவீதம், இந்த இடைப் பருவநிலைக் காலத்திலேயே கிடைக்கிறது.

பூகோள காலநிலைப் போக்கின் அடிப்படையில் செப்ரெம்பருக்கும் நவம்பருக்கும் இடைப்பட்ட இந்தக் காலப்பகுதியில் மழைவீழ்ச்சி அதிகரிக்கவோ, குறையவோ கூடும் என்றும் அவர் கூறினார்.

அதேவேளை, மழை காலமாக இருந்தாலும் தேர்தல் பணிகளை மேற்கொள்ள மாவட்ட மற்றும் பிரதேச செயலர்களின் உதவியுடன் முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளை மேற்கொள்வதாக மேலதிக தேர்தல் ஆணையர் ரசிக பீரிஸ், தெரிவித்தார். ஏதேனும் பேரழிவு நிலமை ஏற்பட்டால், கடற்படை மற்றும் இடர்முகாமைத்துவ அதிகாரிகளின் உதவியைக் கோரப் போவதாகவும், அவர் கூறினார். (ஒ.5)



## 31ஆம் நாள் நினைவஞ்சலியும் வீட்டுக்கிருத்திய அழைப்பும்

### அமரர் குமாரசாமி செல்வராசா



தோற்றம் 1947.04.13 மறைவு 2019.06.29

கடந்த 2019.06.29 சனிக்கிழமை சிவபதமடைந்த எமது குடும்பத் தலைவர் **குமாரசாமி செல்வராசா** அவர்களின் வீட்டுக் கிருத்திய கிரியைகள் இன்று (29.07.2019) திங்கட்கிழமை முற்பகல் 11 மணியளவில் அன்னாரின் இல்லத்தில் நடைபெறவுள்ளதால் அத்தருணம் தாங்கள் தங்கள் குடும்ப சகிதம் வந்து அன்னாரின் ஆத்ம சாந்திப் பிரார்த்தனையிலும் அதனைத் தொடர்ந்து நடைபெறும் மதிய போசனத்திலும் கலந்துகொள்ளுமாறு உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

சென்-செபஸ்ரியன் வீதி,
பெற்றா, மன்னார்.

குடும்பத்தினர்.

J10315 (16:17)

## மரண அறிவித்தல்

பிறப்பு 06 . 01 . 1934



இறப்பு 28 . 07 . 2019

### திருமதி மேரி அக்னஸ் இரட்ணராணி ஜெயசிங்கம்

(ஓய்வு பெற்ற ஆசிரியர், இருபாலை சீ.சீ.த.க. பாடசாலை)

இருபாலையைப் பிறப்பிடமாகவும் கோப்பாய் மத்தியை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி இரட்ணராணி ஜெயசிங்கம் நேற்று (28.07.2019) ஞாயிற்றுக்கிழமை கர்த்தருக்குள் நித்திரையடைந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான T.A யோசேப், கிறிஸ்ரீனா பரஞ்சோதி தம்பதிகளின் அன்பு மகளும், காலஞ்சென்றவர்களான J.K.நெல்லிநாத பிள்ளை,ஹரியட் கனகம்மா தம்பதிகளின் அன்பு மருமகளும் N.ஜெயசிங்கம் (முன்னை நாள் நிர்வாக உத்தியோகத்தர், நெற் சந்தைப்படுத்தும் சபை) அவர்களின் அன்பு மனைவியும், J.B.நிமல்ராஜ் (ஆசிரியர் , சென்ஜோன்ஸ் கல்லூரி) பியட் ரிறிஸ் நிமலினி(ஆசிரியர், வட்டுக்கோட்டை யாழ்ப்பாணக் கல்லூரி) கொட்சன் நிமல்டேவ் (கனடா) ஆகியோரின் அன்புத்தாயாரும் மீரா நிமல்ராஜ்(ஆசிரியர், சென்ஜோண்ஸ் கல்லூரி), பென்சமின் லூவிஸ் மோகனக்குமார்(Physical Director, வட்டுக்கோட்டை யாழ்ப்பாணக்கல்லூரி), மேரி துஷாந்தினி(கனடா) ஆகியோரின் அன்பு மாமியாரும் எமன்டா நிஸ்றின், ஜெரமி தேவறூபன், கிறிஸ்ரீணா தேவறூபி, இமல்டா யஸ்மின், டியோனி அக்னஸ், டிவானி லூஷியா.டேவிட்சன் அல்பேட், டெபோரா ஆகியோரின் அன்புப்பேர்த்தியும், காலஞ்சென்றவர்களான யோதிமலர், புஸ்பமலர், அன்ரனிராஜ் ஆகியோரின் சகோதரியுமாவார்.

அன்னாரின் நல்லடக்க ஆராதனை இன்று(29.07.2019) திங்கட்கிழமை பி.ப 4 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் நல்லடக்கத்திற்காக கோப்பாய் பரி. கன்னிமரியாள் சேமக்காலைக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

**கோப்பாய் மத்தி,**
**கோப்பாய்.**

தகவல்:
**குடும்பத்தினர்.**
**மகன் 077 990 0070**
**மகள் 077 711 1686**

## இந்திய விபூதி விற்பனைக்கு

எம்மிடம் இந்திய ஸ்ரீ சக்தி விலாஸ் **ஜவ்வாது வாசனை விபூதியை (1kg )** மொத்தமாகவும் **(ரூபா 100)**, சில்லறையாகவும் **(ரூபா 110)** பெற்றுக்கொள்ளலாம்.

**சிவா நறுமணப்பூங்கா**
இல.288, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.
(சத்திரச்சந்திக்கு அருகில்)
**021 222 2567**
(IN/10801) (11,17)

## கண்ணீர் அஞ்சலி



எம்முடன் கடமையாற்றும் சக உத்தியோகத்தரான **வடிவேலு நிரோசன்** அவர்களின் பாசமிகு தந்தையார் **பரமசாமி வடிவேலு** அவர்கள் 28.07.2019 அன்று இறைபதம் அடைந்தார்.

அன்னாரின் பிரிவால் துயருற்றிருக்கும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களை தெரிவித்துக்கொள்வதோடு அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம். (CS27009)(17,15)

**விவசாய ஆராய்ச்சி உற்பத்தி உதவியாளர்கள்,**
**கமநல அபிவிருத்தி திணைக்களம், யாழ்ப்பாணம்**

## கண்ணீர் அஞ்சலி



வேலணை கமநல சேவைகள் நிலையத்தில் பணிபுரியும் எமது சக உத்தியோக்தரான **வடிவேலு நிரோசன்** அவர்களின் பாசமிகு தந்தையார் **பரமசாமி வடிவேலு** அவர்களின் மறைவால் துயருற்றிருக்கும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களை தெரிவித்துக்கொள்வதோடு அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம். (CS27010)(17,15)

**கமநல சேவைக்குழுவும் கமநலசேவைகள்**
**நிலைய உத்தியோகத்தர்களும், வேலணை.**

உதயன்
மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

தலைமையகம்: 361, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்

செய்தி : 021 493 0000
விளம்பரம் : 021-493 1111
விநியோகம் : 021-493 2222, 021 - 492 7450

செய்தி : uthayanprint@gmail.com கருத்து: comments@uthayan.com
விளம்பரம்: advt@uthayan.com

# முட்டுச் சந்தில் சிக்கியுள்ள தமிழர் தீர்வு முயற்சிகள்

அண்மைக்கால அரசியல் நிகழ்வுகள் தமிழ் மக்களுக்குத் திருப்தி தருவனவாக இல்லை. தமிழர்கள் பெரிதும் எதிர்பார்த்திருந்த புதிய அரசமைப்பு உருவாக்கம் சாத்தியமில்லை என்ற நிலை தற்போது உருவாகியுள்ளது. இந்த விடயத்தை முன்னகர்த்திச் செல்வதற்குரிய ஆயத்தங்கள் எதுவும் இல்லாது, அடுத்து என்ன நகர்வை மேற்கொள்வது என்பது தெரியாது தமிழ் அரசியல் தலைவர்கள் முட்டுச் சந்தில் சிக்கிக்கொண்ட நிலையிலேயே உள்ளமையை அவர்கள் அண்மைக்காலமாகத் தெரிவித்து வரும் கருத்துக்கள் எடுத்துக்காட்டுகின்றன.

புதிய அரசமைப்பு உருவாக்கம், தமிழர் பிரச்சினைக்குத் தீர்வு என்ற கோசங்களுடன் மைத்திரி– ரணில் தலைமையிலான அரசு 2015ஆம் ஆண்டு ஆட்சிக்கு வந்தது. நம்பிக்கையின் அடிப்படையில் தமிழ் அரசியல் பிரதிநிதிகள் அந்த அரசுக்கு ஆதரவு வழங்கினர். அப்போது அரசுடன் எழுத்துமூலமான உடன்படிக்கையைத் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு மேற்கொள்ளவில்லை என்ற விமர்சனங்கள் எழுந்தபோது, இதயபூர்வமான உடன்படிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது, இந்த அரசு ஏமாற்றாது என்று தமிழ் அரசியல் பிரதிநிதிகள் அதீத நம்பிக்கை வெளியிட்டிருந்தனர்.

அதன்பின்னர் அரசமைப்பு உருவாக்கப் பணிகள் மேற்கொள்ளப்பட்டபோதும், அது தற்போது இடைநடுவே நிறுத்தப்பட்டது. அதைவிடவும் காணி விடுவிப்பு, அரசியல் கைதிகள் விடுவிப்பு என்பன போன்ற விடயங்களுக்கும் தீர்வு காணப்படாத நிலைமையே காணப்படுகின்றது. தற்போதைய அரசிலும் தமிழர் நிலங்கள் அபகரிப்பு, பௌத்த மயமாக்கல் என்பனவும் கட்டவிழ்த்து விடப்பட்டுள்ளன.

தற்போதைய அரசு பல தடவைகள் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் உதவியுடன் தப்பிப் பிழைத்துள்ளபோதும், அந்தச் சந்தர்ப்பங்களில் தனது அதி உச்ச பேரம் பேசும் திறனைத் தமிழ்த் தேசியக் கூட்டமைப்புப் பிரயோகித்ததா என்பது கேள்விக்குட்படுத்தும் விடயமாகவே உள்ளது. தற்போது அரசமைப்பு உருவாக்கம் சாத்தியமில்லை என்பது தெளிவாகத் தெரியும் நிலை ஏற்பட்டுள்ளது. எதிர்க்கட்சித் தலைவர் மகிந்த ராஜபக்ச முதல் தெற்கில் உள்ள பெரும்பான்மையான அரசியல் கட்சிகள் அரசமைப்பு உருவாக்கத்துக்கு எதிரான கருத்துக்களையே முன்வைத்து வருகின்றன. அவர்கள் அரசமைப்பு உருவாக்கத்துக்கு ஆதரவளிக்கப் போவதில்லை. தமிழ்த் தேசியக் கூட்டமைப்பில் உள்ள அரசியல் கட்சிகளின் தலைவர்களும் இதைத் தற்போது வெளிப்படையாகக் கூறத் தொடங்கியுள்ளனர்.

தேசியக் கூட்டமைப்பின் ஆதரவுடன் தற்போது அரசு பதவியில் இருந்தாலும் தமிழர்கள் தீர்வு விடயத்தில் அது கொண்டுள்ள மனநிலை கடந்த வாரம் நாடாளுமன்றில் அரசமைப்பு உருவாக்க முன்னகர்த்தல் தொடர்பில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு கொண்டு வந்த தீர்மானத்தின்போது தெளிவாக வெளிவந்துள்ளது. தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவர் இரா.சம்பந்தன் தீர்மானம் தொடர்பாக உரையாற்றும்போது நாடாளுமன்றில் ஆளும், எதிரணி உறுப்பினர்கள் இருக்கவில்லை. இதை தமிழர்களின் பிரச்சினையைத் தீர்ப்பதில் அவர்கள் கொண்டுள்ள மனநிலையின் வெளிப்பாடாகவே பார்க்க வேண்டும்.

இந்த அரசைக் கொண்டு தீர்வைப் பெற்றுக்கொள்ள முடியும் என்று தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு இனியும் நம்பிக்கை கொள்வது ஏற்கத்தக்கதா என்பது கேள்விக்குரியதே. இவ்வாறான தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு அண்மைக்கால நகர்வுகள் காலத்தை இழுத்தடித்துச் செல்லும் வகையில் அமைந்திருக்கின்றதா என்ற சந்தேகம் மக்கள் மத்தியில் எழுகின்றமையும் தவிர்க்க முடியாது. எந்த எதிர்காலத் திட்டங்களும் இல்லாது கண்மூடித்தனமான நம்பிக்கையின் அடிப்படையில் சிங்கள அரசுக்கு ஆதரவு வழங்கித் தற்போது முட்டுச் சந்தில் முட்டிக் கொண்ட நிலையிலேயே தமிழ் தலைவர்கள் உள்ளனரா என்ற சந்தேகத்தையும் தற்போதைய நிலமைகள் ஏற்படுத்துகின்றன.

காலத்தை இழுத்துச் செல்லும் நோக்குடன் தமிழ் அரசியல் தலைவர்கள் செயற்படுவார்களேயானால் அது மக்கள் மத்தியில் பெரும் விமர்சனத்தை ஏற்படுத்தும். அது எதிர்காலத்தில் தமிழர்களின் பலத்தில் பாதிப்பை ஏற்படுத்தும் என்பதில் எந்தச் சந்தேகமும் இல்லை. தமிழ் அரசியல் தலைவர்கள் அதை உணர்ந்து வெளிப்படையாக, தமிழர் தீர்வு தொடர்பான முயற்சிகளை முன்னெடுப்பதே சாலவும் சிறந்தது.

# அரசியல் வாதிகளின் தேர்தல் நாடகங்கள்!

இந்துமதி

வடக்கிலும் கிழக்கிலும் வாழ்கின்ற தமிழ் மக்கள் தொடர்பாக தெற்கு அரசியல்வாதிகள் நீலிக் கண்ணீர் வடிப்பதைப் பார்க்கும்போது வேடிக்கையாகவுள்ளது. இந்த மக்கள் மோசமான அவலங்களை எதிர்கொண்ட போது இவர்களின் கண்களுக்கு அவை தெரியவில்லை. ஆனால் தேர்தல்கள் நெருங்கி வருகின்ற போது மட்டுமே இவர்களது கண்கள் அகலத் திறக்கின்றன.



**கூட்டமைப்பினருக்கு எதிரான விமர்சனம்**

மகிந்த அணியில் இணைந்து கொண்டவரும் அமைச்சர் மனோ கணேசனின் சகோதரருமான பிரபா கணேசன் தாம் தமிழ் மக்கள் மீது அக்கறை காட்டுவதாகக் காட்டிக்கொள்ள முயல்கிறார். இவரும் கூட்டமைப்பைக் குற்றஞ் சாட்டுவதில் தம்மை ஈடுபடுத்திக்கொள்கின்றார். கூட்டமைப்பினர் அபிவிருத்தியில் மட்டுமே கவனத்தைக் காட்டுவதாகவும் தமிழர்களின் பிரச்சினைகள் தொடர்பாக அக்கறை காட்டுவதில்லையெனவும் அவர் கூறியிருக்கிறார். இதைக் கூறுவதற்கு இவருக்கு என்ன அருகதையுள்ளது? தமது சொந்தச் சகோதரனின் தயவால் அரசியலில் உயர்ந்து பதவியைத் தேடிக்கொண்ட இவர், பின்னர் அவருக்கே துரோகம் புரிந்ததை அனைவரும் அறிவார்கள். சலுகைகளை எதிர்பார்த்தே இவர் மகிந்தவுடன் ஒட்டிக் கொண்டார். தன்னைச் சகல வகையிலும் உயர்ந்த நிலைக்குக் கொண்டு சென்ற இவர் தாம் சார்ந்த மக்களுக்கு எதைச் செய்தார் என்பதையும் ஒரு கணம் சிந்தித்துப் பார்க்க வேண்டும். இவர் வடக்குக் கிழக்கில் வாக்குகள் திரட்டுவதென்பது வேறு விடயம். ஆனால், அதற்காகக் கூட்டமைப்பு மீதுகுற்றம் சாட்டுவது நல்லதல்ல. அதற்கான தகுதியும் இவரிடம் கிடையாது. இதைப்போன்று மனோ கணேசனின் கட்சியைச் சேர்ந்த ஒருவர் வன்னியில் வைத்து கூட்டமைப்பின் மீது குறை கூறியுள்ளார். இவருக்கு இது தேவைதானா? கூட்டமைப்பை உடைத்து வாக்குச் சேகரிக்கின்ற இவர்களது திட்டம் ஒருபோதுமே நிறைவேறப்போவதில்லை. வடக்கிலும் கிழக்கிலும் வாழ்கின்ற தமிழ் மக்கள் இதை எந்த வகையிலும் அனுமதிக்க மாட்டார்கள்.

**மகிந்தவை மறவார்கள் தமிழ் மக்கள்**



மகிந்த ராஜபக்ச என்ற பெயரைக் கேட்டாலே தமிழ் மக்கள் அச்சப்படுவார்கள். அந்த அளவுக்கு அவரது ஆட்சியில் தமிழர்கள் பாதிக்கப்பட்டார்கள். இறுதிப் போரின்போது இடம்பெற்றவற்றைத் தமிழர்கள் எவ்வாறு எளிதில் மறந்துவிட முடியும்? ஆனால், அவர் இதையெல்லாம் மறந்தவர் போன்று, தமிழர்கள் மீது அக்கறை கொண்டவர் போன்று தம்மைக் காட்டிக்கொள்கின்றார். அவரது கட்சியைச் சேர்ந்த பெருமளவு நாடாளுமன்ற உறுப்பினர்கள் வட பகுதிக்கு வருகை தந்து இங்குள்ள மக்களுடன் கலந்துரையாடவுள்ளதாகத் தகவல்கள் தெரிவிக்கின்றன. அரச தலைவர் தேர்தல் நெருங்குவதால் மகிந்த தரப்பின் நாடகமே இதுவென்பதைப் புரிந்துகொள்ள முடியாத அளவுக்கு இங்குள்ள மக்கள் முட்டாள்களல்லர். கல்முனை மற்றும் கன்னியா விவகாரங்களில் நீதியானதொரு தீர்வைப் பெற்றுக்கொடுக்க முடியாத தென்பகுதி அரசியல்வாதிகள் வடக்குக் கிழக்கில் தமது அரசியல் தேவைகளை மட்டுமே நிறைவேற்றிக்கொள்வதற்காக அங்குள்ள மக்களை ஏமாற்ற முயல்வது கடைந்தெடுத்த அயோக்கியத்தனமாகும்.

இதேவேளை - தமிழர்களை இனியும் எவருமே ஏமாற்ற முடியாதென்றும் தமிழர்கள் ஏமாறுவதற்குத் தயாரில்லையெனவும் கூட்டமைப்பின் தலைவர் சம்பந்தன் நாடாளுமன்றத்தில் காட்டமாகக் கூறியதை நாம் நினைவில் கொள்ளவேண்டும். ஆட்சிக்கு வருவதற்கும் ஆபத்து வேளைகளில் தப்பித்துக்கொள்வதற்கும் வாக்குறுதிகளை அள்ளி வீசுகின்ற தென்பகுதி அரசியல்வாதிகள் பின்னர் அவற்றை விரைவிலேயே மறந்து விடுகிறார்கள். தமிழர்களை ஏமாற்றுவது சுலபமென இவர்கள் நினைப்பதாகத் தெரிகின்றது.

தாம் இனிமேல் வடக்குக் கிழக்கிலுள்ள தமிழர்களின் விவகாரங்களில் தலையிடப்போவதில்லையென அமைச்சர் மனோ கணேசன் கூறியதாகத் தெரியவருகின்றது. இவர் வடபகுதிக்கு வரும்போதெல்லாம் தமிழர்கள் அனைவரும் பிரதேச ரீதியான பேதங்களை மறந்து, ஒன்றுபட்டுச் செயற்பட வேண்டுமெனக் கூறிவந்தார். இவர் அண்மையில் மட்டக்களப்புக்குச் சென்று சிறையிலிருக்கும் கிழக்கு மாகாண முன்னாள் முதலமைச்சரான பிள்ளையானைச் சந்தித்துப் பேசியதாகத் தகவல் வெளியாகியுள்ளது.

வடக்குக் கிழக்கில் வாழ்கின்ற தமிழர்களின் பிரச்சினைகள் ஏனைய பகுதிகளில் வாழ்கின்ற தமிழர்களுடன் ஒப்பிடும்போது வேறுபட்டதாகவே காணப்படுகின்றது. இங்குள்ள தமிழர்கள் பலமானதொரு அமைப்பின்கீழ் ஒன்று திரண்டு செயற்படுகின்றனர். அந்த அமைப்பின் தலைமை அவர்களை ஒருபோதுமே கைவிட்டுவிடாது. இந்த நிலையில் வெளியாள்களின் போலித்தனமான அனுதாபமும் அக்கறையும் அவர்களுக்குத் தேவையில்லை. இதை அவர்கள் உணர்ந்து கொள்ள வேண்டும்.

மகிந்த ராஜபக்ச என்ற பெயரைக் கேட்டாலே தமிழ் மக்கள் அச்சப்படுவார்கள். அந்த அளவுக்கு அவரது ஆட்சியில் தமிழர்கள் பாதிக்கப்பட்டார்கள். இறுதிப் போரின்போது இடம் பெற்றவற்றைத் தமிழர்கள் எவ்வாறு எளிதில் மறந்துவிட முடியும்? ஆனால் அவர் இதையெல்லாம் மறந்தவர் போன்று, தமிழர்கள் மீது அக்கறை கொண்டவர் போன்று தம்மைக் காட்டிக்கொள்கின்றார். அவரது கட்சியைச் சேர்ந்த பெருமளவு நாடாளுமன்ற உறுப்பினர்கள் வட பகுதிக்கு வருகை தந்து இங்குள்ள மக்களுடன் கலந்துரையாடவுள்ளதாகத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

# தமிழர்கள் வீட்டுக் கூரைக்கு மேலாக எல்லையைக் கேட்பது போர் புரியவா?

## *கல்முனை விவகாரத்தில் சீண்டுகிறார் முன்னாள் அமைச்சர் அதாஉல்லாஹ்*

கொழும்பு, ஜூலை 29

தமிழர்கள் கல்முனை பிரதேச செயலகம்தான் கேட்கிறார்கள். ஆனால் தமிழ் மக்களுக்கு தேவை பிரதேச சபை. அவர்கள் அதைக் கேட்கவில்லை. கல்முனையில் நான்கு உள்ளூராட்சி சபை உருவாக்கப்பட வேண்டும் என்று கேட்டேன். அதனை சம்பந்தன் ஏற்றுக்கொள்ளவில்லை. ஆனால் இன்று தமிழர்கள் வீட்டு கூரைக்கு மேலாக எல்லையைக் கேட்பது போர் புரிவதற்கா என்ற கேள்வி எங்கள் மத்தியில் எழுகின்றது.

இவ்வாறு தேசிய காங்கிரஸ் கட்சியின் தலைவரும் முன்னாள் அமைச்சருமான அல்ஹாஜ் ஏ.எல். எம். அதாஉல்லாஹ் தெரிவித்துள்ளார்.

தேசிய காங்கிரஸின் கல்முனை மாநகர சபை புதிய உறுப்பினராக தெரிவாகிய சப்றாஸ் மன்சூரின் மதிப்பளிப்பு விழா நேற்றுச் சனிக்கிழமை மாலை 8 மணியளவில் கல்முனை முதன்மை வீதி நகர மண்டபத்துக்கு அருகாமையில் இடம்பெற்றது. இதில் தலைமை விருந்தினராக கலந்துகொண்டு உரையாற்றிய போதே மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

இனப் பிரச்சனை தீர்க்கப்பட வேண்டும். முஸ்லிம் மக்களோ, தமிழ் மக்களோ தனியான அலகுகோரி நிற்கவில்லை. இந்த நாட்டில் 75 வீதமான சிங்கள - பௌத்த மக்கள் இருக்கிறார்கள். 25 விதமாக சிறுபான்மை தமிழ், முஸ்லிம் மக்கள் இருக்கிறார்கள். 25 வீதமாக இருக்கின்ற சிறுபான்மை மக்களை வாழ வைப்பதற்கான பொறிமுறைகளை உருவாக்க வேண்டும்.

இலங்கை ஒரு சிறிய நாடு. இங்கு 9 மாகாணங்களும் கூட்டாட்சி (சமஷ்டி) கோரி நின்றால் இந்த நாடு பாதாளத்துக்குச் செல்லும். இதனால் தான் சிங்கள மக்களும் முஸ்லிம் மக்களும் கூட்டாட்சியை எதிர்க்கின்றனர். ரவூப் ஹக்கீம் நாடு கடந்த தமிழ் ஈழ அமைப்புகளின் ஊதுகுழலாக கூட்டாட்சியைக் கோரி செயற்படுகின்றார். தமிழ் மக்களுக்கும் முஸ்லிம் மக்களுக்கும் எந்த ஒரு பிரச்சினையும் இல்லை - என்றார். (ஒ.5)

## யாழ்., கிளி. மாவட்ட ஒருங்கிணைப்பு கூட்டம் இன்று

யாழ்ப்பாணம், ஜூலை 29

யாழ்ப்பாணம் மற்றும் கிளிநொச்சி மாவட்டங்களின் ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டம் மாவட்டச் செயலகங்களில் இன்று நடைபெறவுள்ளது.

யாழ்ப்பாண மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டம் இன்று மு.ப 10 மணிக்கும், கிளிநொச்சி மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டம் பி.ப. 2 மணிக்கும் நடைபெறவுள்ளது.

இதேவேளை, வவுனியா மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டம் எதிர்வரும் முதலாம் திகதி நடைபெறவுள்ளது. (ஒ.5,105)

## இந்திய மீனவர்கள் 7பேர் கைது

யாழ்ப்பாணம், ஜூலை 29

எல்லை தாண்டி மீன் பிடித்ததாகக் கூறி இராமேஸ்வரம் மீனவர்கள் 7 பேரை கடற்படையினர் கைது செய்துள்ளனர். இராமேஸ்வரம் பகுதியில் இருந்து நூற்றுக்கணக்கான மீனவர்கள் நேற்று அதிகாலை கச்சத்தீவு அருகே மீன்பிடித்துக் கொண்டிருந்தனர். அப்போது அந்தப் பகுதியில் சுற்றுக் காவல் சென்ற கடற்படையினர் எல்லைத்தாண்டி மீன்பிடித்ததாகக் கூறி இராமேஸ்வரம் மீனவர்கள் 7 பேரை கைது செய்தனர். மீனவர்கள் படகையும் அவர்கள் பறிமுதல் செய்தனர். கைது செய்யப்பட்ட 7 மீனவர்க ளையும் மன்னார் கடற்படை முகாமில் ஒப்படைத்தனர். (ஒ.5)

*மிலேனியம் சவால் நிதியம்*

## மைத்திரியை தலையிட கோருகிறது அமெரிக்கா



கொழும்பு, ஜூலை 29

மிலேனியம் சவால் நிதிய உடன்பாட்டுக்கு ஒப்புதலை அளிக்கும் விடயத்தில் தலையிடுமாறு அரச தலைவர் மைத்திரிபால சிறிசேனவுக்கு, அமெரிக்க தூதுவர் அலய்னா ரெப்லிட்ஸ் அவசர கடிதத்தை அனுப்பியுள்ளார்,

இந்த உடன்பாட்டின் சில உட்பிரிவுகள் தொடர்பாக எழுப்பப்பட்ட குற்றச்சாட்டுகள் மற்றும் கவலைகளைத் தொடர்ந்து, அரச தலைவர் மைத்திரிபால சிறிசேன, இந்த உடன்பாட்டுக்கு அனுமதியளிக்க மறுத்திருந்தார். முன்மொழியப்பட்டுள்ள உடன்பாட்டில் சில சர்ச்சைக்குரிய பிரச்சினைகள் தொடர்பாக, அவசரக் கடிதத்தில், அமெரிக்க தூதுவர் ரெப்லிட்ஸ் தெளிவுபடுத்தியுள்ளார்.

இந்த உடன்பாடு வெளிப்படையானது என்றும், இலங்கை மக்களுக்கு செழிப்பை ஏற்படுத்துவதற்காக வடிவமைக்கப்பட்டுள்ளது என்பதையும் அவர் உறுதிப்படுத்தியுள்ளார்.

40 ஆண்டுகளுக்கும் மேலான அரசியல் அனுபவம் உள்ள அரச தலைவர், பத்தாண்டுகளாக இலங்கையின் வளர்ச்சியில் அமெரிக்காவின் முதலீடுகளின் பங்களிப்பு குறித்து நன்கு அறிந்திருப்பார் என்பதையும் அமெரிக்க தூதுவர் தனது கடிதத்தில் நினைவுபடுத்தியுள்ளார்.

இந்த உடன்பாட்டின் மூலம் வழங்கப்படவுள்ள 480 மில்லியன் டொலர் அமெரிக்க மக்களிடமிருந்து இலங்கைக்கு கிடைக்கும் ஒரு பரிசு என்றும் அது கடன் அல்ல என்றும் அவர் வலியுறுத்தியுள்ளார்.

இந்தக் கடிதத்தில் மிலேனியம் ,சவால் நிதியத்தின் கொடையால் ஏற்படக் கூடிய பயன்கள் குறித்தும், அதில் எந்த தலையீடுகளும் இருக்காது என்பதை உறுதிப்படுத்தும் வகையில் விரிவான விளக்கம் அளிக்கப்பட்டுள்ளது. (ஒ.5)

## மகிந்தவின் பதவிக்கு காத்திருக்கும் ஆபத்து

கொழும்பு, ஜூலை 29

எதிர்க்கட்சித் தலைவர் மகிந்த ராஜபக்சவின் சிறிலங்கா சுதந்திரக் கட்சியின் உறுப்புரிமையையும் நாடாளுமன்ற உறுப்பினர் பதவியையும் இல்லாமல் செய்ய திட்டமிடப்பட்டுள்ளதாக தகவல் வெளியாகியுள்ளது.

எதிர்வரும் 11ஆம் திகதி நடைபெறவுள்ள பொதுமக்கள் முன்னணியின் கட்சி மாநாட்டின் தலைமைத்துவத்தை மகிந்த ஏற்றுக் கொள்வாராக இருந்தால், இந்த நடவடிக்கை எடுக்கப்படவுள்ளது.

மகிந்த ராஜபக்ச பொது மக்கள் முன்னணியின் உறுப்புரிமை பெற்றால் சிறிலங்கா சுதந்திரக் கட்சி பயனற்று போய்விடும் என்ற காரணத்தால் அரச தலைவர் மைத்திரிபால சிறிசேன இந்த நடவடிக்கையை மேற்கொண்டுள்ளார். (ஒ.5)

## மோதல் பிரதேசங்களில் பணியாற்றிய அமெரிக்க அதிகாரி இலங்கையில்

கொழும்பு, ஜூலை 29

ஆப்கானிஸ்தான், ஈராக், கொசோவோ ஆகிய மோதல் பிரதேசங்களில் பணியாற்றிய அமெரிக்க இராணுவத்தைச் சேர்ந்த லெப்.கேணல் ட்ராவிஸ் கொக்ஸ், இலங்கையில் உள்ள அமெரிக்க தூதரகத்தில் புதிய பாதுகாப்பு ஆலோசகராக நியமிக்கப்பட்டுள்ளார்.

அமெரிக்க தூதரகத்தில் புதிய பாதுகாப்பு ஆலோசகராக நியமிக்கப்பட்டுள்ள லெப்.கேணல் ட்ராவிஸ் கொக்ஸ், கடந்தவாரம் பாதுகாப்பு அதிகாரிகளின் பிரதானி அட்மிரல் ரவீந்திர விஜேகுணரத்னவைச் சந்தித்தார். அவருடன், பிரதி பாதுகாப்பு ஆலோசகர் கரின் கிளெய்ஸ்னரும் இந்தச் சந்திப்பில் பங்கேற்றார். இரு அதிகாரிகளும் பரஸ்பர நலன்களுடன் தொடர்புடைய விவகாரங்கள் குறித்து பேச்சுக்களை நடத்தியிருந்தனர். (ஒ.5)



## யாழ்ப்பாண இளைஞன் சுவிசில் உயிரிழப்பு

யாழ்ப்பாணம், ஜூலை 29

யாழ்ப்பாணம் திருநெல்வேலி பாற்பண்ணையடியைச் சேர்ந்த சயந்தன் சுவிற்சர்லாந்தின் சொலத்தூண் பகுதியிலுள்ள ஆற்றில் மூழ்கி உயிரிழந்துள்ளார் என்று பொலிஸார் அறிவித்துள்ளனர். இவர் சொலத்தூண் மாநிலத்தின் பாஸ்த்தால் பகுதியில் வசித்து வந்துள்ளார். இரு நண்பர்களோடு ஆற்றுக்குச் சென்ற வேளையிலேயே கால் தவறி பாறையுள்ள பகுதியில் நீரில் மூழ்கி உயிரிழந்துள்ளார். (ஒ.5)-

## முகநூலுக்காக பெயர் மாற்றும் ஞானசார தேரர்

கொழும்பு, ஜூலை 29

பொதுபல சேனவின் பொதுச் செயலர் கலகொட அத்தே ஞானசர தேரர் தனது பெயரை மாற்ற வேண்டியிருக்கிறது என்று பொதுபல சேனவின் தலைமை நிர்வாக அதிகாரி டிலந்த விதானகே தெரிவித்துள்ளார்.

முகநூல் நிறுவனம் ஞானசாரரின் பெயருக்கு கட்டுப்பாடு விதித்துள்ளதே இதற்கு காரணம். முகநூல் பக்கங்களில் கலகொட அத்தே ஞானசாரர் குறிப்பிடப்படும் போது அவரது பெயர் தடுக்கப்படுவதால் இந்த முடிவு எடுக்கப்பட்டுள்ளது. ஞானசார தேரர் எதிர்காலத்தில் ஏப் ஹம் தூருவூ (எங்கள் துறவி) என்ற புனைப்பெயரைப் பயன்படுத்துவார் என்று டிலந்த கூறினார். (ஒ.5)

# யாழ். பல்கலையில் பொலித்தீன் தடை!

**யாழ்ப்பாணம், ஜூலை 29**

**யாழ்ப்பாணப் பல்கலைக்கழக வளாகத்தில் பொலித்தீன் பாவனையை தடை செய்யத் தீர்மானிக்கப்பட்டுள்ளது. அடுத்த மாதம் 15ஆம் திகதி முதல் இந்தத் தடை நடைமுறைக்கு வருகின்றது.**

இது தொடர்பில் கல்விச் சமூகத்தினர் தெரிவித்ததாவது:

உக்கக்கூடிய பொருள்களை பயன்படுத்துவதன் மூலம் சூழல் சமநிலையைப்பேண முடியும். இதன் மூலம் உள்ளூர் உற்பத்திகளை ஊக்குவிக்க முடியும். அத்துடன் பொலித்தீன் பாவனையைக் குறைக்கமுடியும்.

இந்தச் செயற்பாடு பல்கலைக்கழக மாணவர் மட்டத்தில் இருந்து பழக்கத்தில் இருந்தால் எதிர்காலத்தில் பொலித்தீன் பாவனையை முற்றாகக் கட்டுப்படுத்தமுடியும். பொலித்தீன் பாவனையைக் கட்டுப்படுத்தும் முகமாக யாழ்ப்பாணப் பல்கலைக்கழக சிற்றுண்டிச்சாலைகளில் அடுத்த மாதம் 15ஆம் திகதி முதல் இந்தத் தடை நடைமுறைக்கு வருகிறது. பதிலாக வாழையிலை மற்றும் தாமரை இலையில் உணவு பரிமாறப்படும் - என்றனர். (ம-7)

---

வரணியிலுள்ள கோவிலில்

## சீமெந்து அறை உடைத்து இறைக்கும் இயந்திரம் திருட்டு

கொடிகாமம், ஜூலை 29

தென்மராட்சி வரணி கரம்பைக் குறிச்சி கிழக்கு ஆழ்வார் மடம் ஆலயத்தில் பொருத்தப்பட்டிருந்த தண்ணீர் இறைக்கும் இயந்திரம் திருடப்பட்டுள்ளது என்று கொடிகாமம் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு பதிவு செய்யப்பட்டுள்ளது.

கடந்த வெள்ளிக்கிழமை இரவு திருட்டு இடம்பெற்றுள்ளது. மறுநாள் காலை கோவிலுக்குச் சென்றவர்கள் இதனைக் கண்டுள்ளனர்.

ஆலயக் கிணற்றுக்கு அருகில் சிறிய அறை கட்டி அதில் இயந்திரம் வைக்கப்பட்டிருந்தது. அந்த அறையின் மேற்பகுதியை உடைத்து இயந்திரம் திருடப்பட்டுள்ளது என்று முறை யிடப்பட்டுள்ளது. இது பற்றி கொடிகாமம் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.

இந்த விசாரணை தொடர்கின்றது என்று பொலிஸார் தெரிவித்தனர். இதுபோன்று முன்னரும் சில கோவில்களில் திருட்டு இடம்பெற்றுள்ளது. எனவே திட்டமிட்டுச் செயற்படுத்தப்படும் இதுபோன்று திருட்டுக்களுக்குப் பொலிஸார் உரிய நடவடிக்கை எடுக்கவேண்டும் என்று கோவில் தரப்பினர் கோரியுள்ளனர். (த-159)

---

## சிறப்புற நடைபெற்றது யாழ். பண்பாட்டு விழா

யாழ்ப்பாணம், ஜூலை 29

வடக்கு மாகாணப் பண்பாட்டலுவல்கள் திணைக்களம், கலாசார அலுவல்கள் திணைக்களம் ஆகியவற்றின் அனுசரணையுடன் யாழ்ப்பாணப் பிரதேச செயலகமும், பிரதேச கலாசாரப் பேரவையும் இணைந்து நடத்திய பண்பாட்டுப் பெருவிழா யாழ்ப்பாணம் ஒஸ்மானியாக் கல்லூரி மண்டபத்தில் கடந்த வெள்ளிக்கிழமை இடம்பெற்றது.

யாழ்ப்பாணப் பிரதேச செயலர் சாம்பசிவம் சுதர்சன் தலைமையில் இடம்பெற்ற நிகழ்வில் கரகம், காவடி, கோலாட்டம், மயிலாட்டம், மீனவ நடனம் ஆகியவற்றுடனான பண்பாட்டு ஊர்வலம் இடம்பெற்றது. அதனைத் தொடர்ந்து சர்வமதக் குருமாரின் ஆசியுடன் மண்டபத்தில் பல்வேறு கலை நிகழ்வுகளும் நாடகமும் பரிசளிப்பு மற்றும் மதிப்பளிப்பும் இடம்பெற்றன.

இலக்கியம், நாட்டியம், நாடகம், நாட்டுக்கூத்து, மேடையமைப்பு மற்றும் ஒப்பனைத்துறை சார்ந்த எட்டு மூத்த கலைஞர்களுக்கு யாழ்ப்பாணப் பிரதேச கலாசாரப் பேரவையால் 'யாழ். ரத்னா' விருதும் இளங்கலைஞர்களுக்கு விருதுச் சான்றிதழ்களும் வழங்கப்பட்டன.

"யாழ் பாடி' கலாசார மலரும் வெளியீடு செய்யப்பட்டது.

முதன்மை விருந்தினராக யாழ்ப்பாண மாவட்டச் செயலர் நா.வேதநாயகன் கலந்து கொண்டார். (ம)





---




அல்லாரை அ.த.க. பாடசாலை மாணவர்களின் ஆங்கிலப் பட்டறைப் பாடசாலை மண்டபத்தில் அண்மையில் இடம்பெற்றது. அதிபர் ஐ.தேவாஈஸ்வரன் தலைமையில் நடைபெற்ற இந்த நிகழ்வில் ஆசிரியர்கள், மாணவர்கள் எனப் பலரும் கலந்து கொண்டனர். (ம-159)

---

## நிறுவுநர் தினமும் பெற்றோர் தினமும்

யாழ்ப்பாணம், ஜூலை 29

யாழ்ப்பாணம் ஈவினை அரசினர் தமிழ்க் கலவன் பாடசாலையின் நிறுவுநர் தினமும், பெற்றோர் தினமும் நாளை கொண்டாடப்படவுள்ளன.

பாடசாலை அதிபர் சோ.சிறீ கிருஸ்ணா தலைமையில் இந்த நிகழ்வுகள் இடம்பெறவுள்ளன. நாடாளுமன்ற உறுப்பினர் த. சித்தார்த்தன் முதன்மை விருந்தினராகக் கலந்து கொள்ளவுள்ளார். யாழ்ப்பாண மாவட்டச் செயலக இடர்முகாமைத்துவப் பிரிவு உதவிப் பணிப்பாளர் ச.ரவி, உடுவில் கோட்டக்கல்விப் பணிப்பாளர் த.மாதவன் சிறப்பு விருந்தினர்களாகவும், வயாவிளான் றோ.க.த.க. பாடசாலை ஆசிரியர் வ.சிவானந்தம், பழைய மாணவி த.சிவபதிமலர், சமாதான நீதிவான் மு.புவீஸ்வரன் ஆகியோர் மதிப்புறு விருந்தினர்களாகவும் கலந்து கொள்ளவுள்ளனர். (ம)

---

## வல்வெட்டி நகர எல்லைக்குள் உணவக சுகாதாரச் சீர்கேடுகள்

*22 நிலையங்கள் மீது வழக்கு*

பருத்தித்துறை, ஜூலை 29

வல்வெட்டித்துறை நகர எல்லைப் பகுதிக்குள் சுகாதாரச் சீர்கேட்டுடன் காணப்பட்டன என்று 22 உணவு கையாளும் நிலையங்களை அடையாளப்படுத்தியுள்ளோம் என்றும் - அவற்றின் நடத்துநர்களுக்கு எதிராகச் சட்ட நடவடிக்கை எடுக்கப்படவுள்ளது என்றும் சுகாதாரப் பகுதியினர் தெரிவித்தனர்.

பிராந்திய சுகாதார சேவைகள் திணைக்கள உணவுகள் மருந்துகள் பரிசோதகர்கள் வல்வெட்டித்துறை பிரிவு மற்றும் பருத்தித்துறை சுகாதார திணைக்களப் பொது சுகாதாரப் பரிசோதகர்களுடன் இணைந்து கடந்த திங்கட்கிழமையும் புதன்கிழமையும் இந்தச் சோதனையில் ஈடுபட்டிருந்தனர்.

கொத்து ரொட்டிக் கடைகள், உணவகங்கள், பேக்கரிகள், பலசரக்குக் கடைகள், இனிப்பு விற்பனை நிலையங்கள் உட்பட 46 வர்த்தக நிலையங்களில் பரிசோதனைகள் நடத்தப்பட்டன. அவற்றில் 22 நிலையங்களுக்கு எதிராகச் சட்ட நடவடிக்கை எடுக்கப்படவுள்ளது என்று மேலும் தெரிவிக்கப்பட்டது. (த-9)

---

## ஆக்கத்திறன் போட்டிகளை இந்த மாதம் முடிவுறுத்தவும்

யாழ்ப்பாணம், ஜூலை 29

பாடசாலை மாணவர்களுக்கிடையில் நடத்தப்படும் ரோபோ ஆக்க திறன் போட்டிகளை இந்த மாதத்துக்குள் நிறைவு செய்ய வேண்டும் என்று கல்வி அமைச்சு தெரிவித்துள்ளது.

இது பற்றி மேலும் தெரிவிக்கப்பட்டதாவது:

கல்வி அமைச்சின் ஆலோசனைக்கு அமைவாக இந்த வருடம் தொடக்கம் பாடசாலை மாணவர்களுக்கு இடையில் ரோபோ ஆக்கப் போட்டிகள் நடத்துவதற்கு ஒழுங்குகள் மேற்கொள்ளப்பட்டன.

மாணவர்களின் ஆக்கத் திறனை ஊக்குவிப்பதன் ஊடாக எதிர்காலத்தில் தொழில் நுட்ப உலகத்தில் மாணவர்கள் வெற்றி கரமாக வாழ முடியும் என்ற நோக்கில் 'ரோபோ' ஆக்க திறன் போட்டிகள் நடத்தப்படவுள்ளன.

உற்பத்தி கைத்தொழில், கல்வி, சுகாதாரம், களியாட்டம், பொறியியல் துறை ஆகியவற்றில் பிரகாசிக்க ரோபோக்களை மாணவர்கள் உருவாக்க வேண்டும். பாடசாலை மட்டத்திலிருந்து தேசிய மட்டம் வரை இந்த போட்டிகள் நடைபெறும். பாடசாலை மட்டப்போட்டிகள் ஜூலை மாதம் 30ஆம் திகதிக்குள் முடிவுறுத்தப்பட வேண்டும் என்று தெரிவிக்கப்பட்டது. பாடசாலை மட்டத் தெரிவுகள் நிறைவு பெற்றதும் அடுத்த கட்ட போட்டிக்கான தெரிவுகள் இடம்பெறும் என்று மேலும் தெரிவிக்கப்பட்டது. (த-7)

---

## யாழ்ப்பாணத்தில் ஓகஸ்ட் இறுதியில் புத்தகக் கண்காட்சி

யாழ்ப்பாணம், ஜூலை 29

யாழ்ப்பாணத்தில் அடுத்த மாதம் புத்தகக் கண்காட்சி ஒன்று நடைபெறவுள்ளது. இலங்கை நூல் விற்பனையாளர்கள் ஏற்றுமதி - இறக்குமதி சங்கத்தின் ஏற்பாட்டில் இந்தக் கண்காட்சி நடைபெறவுள்ளது.

வடக்கு மாகாண ஆளுநரின் எண்ணக்கருவுக்கு அமைவாகவே மேற்படி புத்தக விற்பனை மற்றும் கண்காட்சி எதிர்வரும் ஓகஸ்ட் மாதம் 27ஆம் திகதி முதல் செப்ரெம்பர் மாதம் முதலாம் திகதி வரை யாழ்ப்பாணம் வீரசிங்கம் மண்டபத்தில் நடைபெறவுள்ளது. இதில் உள்ளூர், வெளியூர் என்று அனைத்து எழுத்தாளர்களின் படைப்புக்களும் காட்சிப்படுத்தப்படவுள்ளன. (ம-7)

---

## மக்கள் தொடர்பாடல் பிரதிநிதிகளை நியமிக்கும் நடவடிக்கைகள் ஆரம்பம்

யாழ்ப்பாணம், ஜூலை 29

அரச தலைவர் செயலகத்தால் மக்கள் தொடர்பாடல் தன்னார்வப் பிரதிநிதிகளைப் பிரதேச செயலர் பிரிவில் நியமிக்கும் நடவடிக்கை முன்னெடுக்கப்பட்டுள்ளது என்று தெரிவிக்கப்பட்டது.

அரச தலைவர் மைத்திரிபாலவின் எண்ணக்கருவில் கிராம மட்டத்தில் முன்னெடுக்கப்படும் செயற்பாடுகளை யாழ்ப்பாண மாவட்டத்தில் சிறப்பாக ஒழுங்குபடுத்தவும், ஒருங்கிணைக்கும் செயற்பாட்டை மேற்கொள்ளுவதற்கும் சமூக சேவையில் ஆர்வம் உள்ளவர்கள், சமூக மட்டத்தில் மக்கள் தொடர்பாடல்களை சிறப்பாக மேற்கொள்ளக்கூடியவர்கள் இவ்வாறு தொடர்பாடல் பிரதிநிதிகளாக இணைக்கப்பட்டுள்ளனர்.

அவர்களுக்கான நியமன கடிதங்கள் அரச தலைவர் செயலகத்தில் இருந்து பிரதிநிதிகளுக்கு தபால் மூலம் அனுப்பி வைக்கப்பட்டுள்ளது. அதன் பிரதி பிரதேச செயலருக்கும் அனுப்பி வைக்கப்பட்டுள்ளது. (ம-7)

# கோபத்தில் எடுக்கும் தீர்மானம் மீள அழிவுக்கு இட்டுச் செல்லும்

## மாவை எம்.பி. தெரிவிப்பு

**யாழ்ப்பாணம், ஜூலை 29**

**குட்டிமணி, தங்கத்துரை உட்பட இலட்சக்கணக்கான மக்களின் உயிர்களைப் பறிகொடுத்துக் கவலைப்பட்டுக்கொண்டிருக்கின்ற எங்களுடைய மக்கள், இன்று மிகவும் ஏமாற்றமடைந்துள்ளனர். நாங்கள் ஏமாற்றம் அடைகிறோம் என்று சொன்னாலும், கோபம் கொள்கிறோம் என்று சொன்னாலும், நாங்கள் ஒரு தீர்மானத்தை எடுக்கின்றபோது நிதானத்தை இழந்துவிடக்கூடாது.**

கோபத்திலும், விரக்தியிலும், வெறுப்பிலும் நாங்கள் எடுக்கின்ற தீர்மானங்கள் எமது இனத்தை மீண்டும் அழிவுக்குள் இட்டுச்செல்வதாக அமைந்துவிடும்.

இவ்வாறு தமிழ் அரசுக் கட்சியின் தலைவரும் நாடாளுமன்ற உறுப்பினருமான மாவை சோ. சேனாதிராசா தெரிவித்தார். வெலிக்கடைச் சிறைச்சாலையில் படுகொலை செய்யப்பட்ட 53 பேரின் 36 ஆவது நினைவஞ்சலி பொதுக்கூட்டம் புதுக்குடியிருப்பு மத்திய கல்லூரி பொன்விழா மண்டபத்தில் நேற்றுமுன்தினம் நடைபெற்றது.

அதில் அவர் மேலும் தெரிவித்ததாவது:

இரு சக்திகளும் ஒன்றுபட்ட தீர்மானத்தை எடுப்பதன் மூலமே ஒரு கதவை மூடி மறுகதவைத் திறப்பதற்கு வழிவகுக்கும்.

ஐ.நா மனித உரிமை சபையில் இந்த நாடு தொடர்பாக எடுக்கப்பட்ட தீர்மானங்கள் நிறைவேற்றப்படவேண்டும் என்ற அடிப்படையில் எங்கள் இனம் விடுதலை பெறும் சந்தர்ப்பத்தை உருவாக்குவதற்கான ஒன்றிணைந்த கருத்துக்கள் ஒருமேசையில் பேசவேண்டும்.

எமது இனத்தின் விடுதலைக்காக மற்றுமொரு கதவைத் திறக்கும் தீர்மானம் எடுக்கப்படவேண்டும். அது தவறும் பட்சத்தில் எங்களுடைய மக்கள் அநாதரவாகத் தள்ளப்பட்டும் நிலை ஏற்படும். இதற்காகப் பன்னாடுகளில் வாழ்கின்ற புலம்பெயர் பிரதிநிதிகளுடன் நாங்கள் பேசுவதற்கான ஒழுங்குகள் செய்யப்படவேண்டும் என்று அவர் மேலும் தெரிவித்தார். (த-21)

## கற்றல் உபகரணங்கள் மாணவருக்கு அன்பளிப்பு

முல்லைத்தீவு, ஜூலை 29

புதுக்குடியிருப்பு தேவிபுரம் கிராமத்தில் போரால் பாதிக்கப்பட்ட பெண் தலைமைத்துவக் குடும்பங்களைச் சேர்ந்த 10 பிள்ளைகளுக்கு 20 ஆயிரம் ரூபா பெறுமதியான கற்றல் உபகரணங்கள் வழங்கி வைக்கப்பட்டன.

முல்லைத்தீவு பழனியானந்தன் சனசமூக நிலையத்தின் 'மேழியூர் கரங்கள்' செயற்றிட்டத்தின் ஊடாக புதுக்குடியிருப்பு பிரதேச செயலகத்துக்கு உட்பட்ட பெண்கள்தொழில் முயற்சியாளர் கூட்டுறவுச் சங்கத்தின் வேண்டுகோளின் பிரகாரம் இதற்கான நிதி அமரர் பொ.தெட்சணாமூர்த்தியின் ஞாபகார்த்தமாக லண்டனில் வசிக்கும் தி.மோகனச்செல்வம் வழங்கினார். இந்த வருடம் நடத்தப்பட்ட மாட்டு வண்டிச் சவாரி மூலம் கிடைக்கப்பெற்ற இலாப நிதியையும் பயன்படுத்தி இந்த செயற்றிட்டம் முன்னெடுக்கப்பட்டுள்ளது என்று தெரிவிக்கப்பட்டது. (த-222)

## ஊர்காவற்றுறை சின்னமடு திருவிழா நான்காம் திகதி

கொழும்புத்துறை, ஜூலை 29

ஊர்காவற்றுறை, சரவணை சின்னமடு புனித செபமாலை அன்னையாத்திரைத்தல திருவிழா எதிர்வரும் 4ஆம் திகதி நடைபெறவுள்ளது. அதற்கான சகல ஏற்பாடுகளும் நிறைவடைந்துள்ளன என்று ஆலயப் பங்குத் தந்தை தெரிவித்துள்ளார்.

திருவிழாவன்று நேர்த்திகளுக்காக உணவுகள் வழங்கவுள்ளோர் சமைத்த உணவுகளைத் தவிர்த்து வெதுப்பக உணவுகளை வழங்குமாறும் சமைத்த உணவுகள் வழங்குவதெனின் அண்மையில் பொதுச் சுகாதார பரிசோதகரின் அனுமதி பெற்றிருக்க வேண்டும் என்றும் அறிவிக்கப்பட்டுள்ளது.

பிளாஸ்ரிக், பொலித்தீன் பைகள் ஆலய வளவில் தடை செய்யப்பட்டுள்ளதுடன் தேவையற்ற பொருள்கள், பொதிகளை எடுத்துவர வேண்டாமெனவும் அறிவுறுத்தப்பட்டுள்ளது.


நவநாள் வழிபாடுகள் தினமும் மாலை 4.30 மணிக்கு இடம்பெறும்.

நற்கருணைப் பெருவிழா ஓகஸ்ட் 3ஆம் திகதி சனிக்கிழமை பிற்பகல் 5 மணிக்கு செபமாலையுடன் ஆரம்பமாகும். திருவிழாத் திருப்பலி 4ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை காலை 6.30 மணிக்கு இடம்பெற்று அன்னையின் திருச்சொரூப பவனியும் நடைபெறும் என்றும் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ம-135)

## மாவிட்டபுரம் கந்தசுவாமி ஆலய புதிய தேர் நேற்று வெள்ளோட்டம்

யாழ்ப்பாணம், ஜூலை 29

வரலாற்றுச் சிறப்பு மிக்க மாவிட்டபுரம் கந்தசுவாமி ஆலயத்தின் தேர்த் திருவிழா எதிர்வரும் செவ்வாய்க்கிழமை இடம்பெறவுள்ள நிலையில் அதற்காக 45 அடி உயரத்தில் புதிதாக அமையப்பெற்ற முக உத்தர திருத் தேரின் வெள்ளோட்டம் நேற்று இடம்பெற்றது. அழகிய விசாலமான அற்புதமான தோற்றத்துடனும், ஏராளமான சிற்ப வேலைப் பாடுகளுடனும் இந்தத் தேர் அமைக்கப்பட்டிருந்தது. வெள்ளோட்டத்தைக்காண நூற்றுக்கணக்கான பக்தர்கள் நேற்றையதினம் மாவிட்டபுரத்துக்குப் படையெடுத்திருந்தனர். (ம-21)





## அனுமதியின்றி மணல் ஏற்றிய ஹன்டர் சாரதி கைதானார்



கொடிகாமம், ஜூலை 29

அனுமதிப்பத்திரமின்றி மணல் ஏற்றிச் சென்றார் என்ற குற்றச்சாட்டில் ஹன்டர் வாகனச் சாரதி கைது செய்யப்பட்டார். அவரை 2 லட்சத்து 50 ஆயிரம் ரூபா ஆள்ப்பிணையில் விடுவித்து வழக்கை ஒத்திவைத்தது நீதிமன்று.

அனுமதிப் பத்திரமின்றி சில நாள்களுக்கு முன்னர் இரவு நேரம் மணல் ஏற்றிச் சென்றார் என்று சிறப்பு அதிரடிப்படையினரால் அவர் கைது செய்யப்பட்டார். நீதிமன்ற நடவடிக்கைக்காக அவர் வாகனத்துடன் கொடிகாமம் பொலிஸாரிடம் ஒப்படைக்கப்பட்டிருந்தார்.

கடந்த வெள்ளிக்கிழமை சாவகச்சேரி நீதிமன்றில் வழக்கு விசாரணைக்கு எடுக்கப்பட்டபோது சாரதி குற்றத்தை ஏற்றுக்கொண்டார். தண்டனைத் தீர்ப்புக்காக அவர் ஆள்ப்பிணையில் விடுவிக்கப்பட்டார். (த-159)




## சான்றிதழ் வழங்கும் நிகழ்வு

சாவகச்சேரி, ஜூலை 29

சாவகச்சேரி டிபிஎம்எஸ் கணினி கற்கை நிலையத்தின் ஏழாவது சான்றிதழ் வழங்கும் நிகழ்வு சாவகச்சேரி கலைமன்ற கலாசார மண்டபத்தில் நேற்று நடைபெற்றது.

நிறுவன முகாமைத்துவப் பணிப்பாளர் எம்.றுக்சாந் தலைமையில் நடைபெற்ற நிகழ்வுக்கு முதன்மை விருந்தினராக சாவகச்சேரி நகர சபை தவிசாளர் திருமதி சிவமங்கை இராமநாதன் கலந்து கொண்டார். சிறப்பு விருந்தினர்களாக தென்மராட்சி கல்வி வலய ஆரம்பக் கல்வி உதவிக் கல்விப் பணிப்பாளர் சோ.திருக்குமரன், மட்டுவில் தெற்கு அ.மி.த.கவித்தியாலய முன்னாள் அதிபர் வே.சுந்தரலிங்கம் ஆகியோர் கலந்து கொண்டனர். நிகழ்வில் கற்கை நெறியைப் பூர்த்தி செய்த 210 மாணவர்களுக்கு விருந்தினர்களால் சான்றிதழ்கள் வழங்கப்பட்டன. (ம-9)

## மோதலில் ஒருவர் படுகாயம்

யாழ்ப்பாணம், ஜூலை 29

அயல் வீட்டினருடன் ஏற்பட்ட தகராறில் காயமடைந்த நிலையில் ஒருவர் யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனையில் சேர்க்கப்பட்டுள்ளார்.

யாழ்ப்பாணம் குப்பிளானில் வசிக்கும் பெற்றோருக்கும், அயல் வீட்டினருக்கும் இடையே முரண்பாடு ஏற்பட்டுள்ளது. அது தொடர்பாக மன்னாரில் வசிக்கும் தமது மகனுக்குப் பெற்றோர்கள் தகவல் வழங்கியுள்ளனர். அதையடுத்து அங்கிருந்து யாழ்ப்பாணம் வந்த மகன் அயல் வீட்டினருடன் தர்க்கத்தில் ஈடுபட்டுள்ளார். வாய்த்தர்க்கம் மேதலாக மாறியதில் அயல் வீட்டில் உள்ள பெண் ஒருவர் இவரைத் தடியால் தாக்கினார் என்று கூறப்படுகின்றது.

தாக்குதலில் படுகாயமடைந்தவர் கடந்த வெள்ளிக்கிழமை தெல்லிப்பழை மருத்துவமனையில் சேர்க்கப்பட்டுள்ளார். அதன்பின்னர் அவர் மேலதிக சிகிச்சைக்காக யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனைக்கு மாற்றப்பட்டார். காயமடைந்தவர் 38 வயதுடையவர் என்றும் - தாக்குதலில் அவரது கழுத்துப் பகுதி பாதிப்படைந்துள்ளது என்றும் - தெரிவிக்கப்படுகின்றது. (எ-105)

### யாழ்.மாவட்டத்தில் இம்முறை

# 11,300ஹெக்டேயரில் பெரும்போக நெற்செய்கை

யாழ்ப்பாணம், ஜூலை 29

யாழ்ப்பாண மாவட்டத்தில் இந்த ஆண்டின் பெரும்போக நெற்செய்கையின்போது விவசாயிகள் 11ஆயிரத்து 300 ஹெக்டேயர் நிலப்பரப்பில் செய்கையில் ஈடுபடுவதற்கு திட்டமிடப்பட்டுள்ளதாக மாவட்ட விவசாய திணைக்களம் தெரிவித்தது. வலிகாமம் மேற்கு, கிழக்கு, தென்மராட்சி, வடமராட்சி, தீவுப்பகுதி அடங்கலாக செய்கையாளர்கள் இந்த நெற்செய்கையில் ஈடுபடுத்துவதற்குத் தற்போது தயாராகி வருகின்றனர்.

கடந்த வெள்ளிக்கிழமை இரவு பெய்த மழையை பயன்படுத்தி விவசாயிகள் சிலர் தமது வயல் நிலங்களை உழுது சீர்செய்தும் வருகின்றனர்.

பெரும்பாலும் செப்ரெம்பர் மாதத்திலேயே இந்த பெரும்போக நெற்செய்கைக்கான விதை நெல் விதைக்கும் பணிகள் ஆரம்பித்து வைக்கப்படும் என்று விவசாய திணைக்களம் தெரிவித்தது.

மழை கூடுதலாக பெய்ய ஆரம்பித்த பின்னரே குடாநாட்டில் இந்த நெற்செய்கைக்கான பணிகள் யாவும் ஆரம்பமாகும். (ஜ-17)

## தரம் 5 புலமைப் பரிசில் மாணவர் கருத்தமர்வு

முல்லைத்தீவு, ஜூலை 29
எதிர்வரும் தரம் 5 புலமைப் பரிசில் பரீட்சைக்குத் தோற்றவுள்ள மாந்தை கிழக்கு கல்விக் கோட்டத்துக்குட்பட்ட பாடசாலை மாணவர்களுக்கு வழிகாட்டல் கருத்தமர்வு நேற்று முன்தினம் நடைபெற்றது.
முல்லைத்தீவு பாலிநகர் குமாரசாமி தமிழ் வித்தியாலய மண்டபத்தில் இது இடம்பெற்றது. மல்லாவி கல்விக்கான கரங்கள் அமைப்பின் ஒழுங்குபடுத்தலில் துணுக்காய் வலயக்கல்விப்பணிப்பாளரின் அனுமதியுடன் இது நடத்தப்பட்டது. வளவாளராக துணுக்காய் வலயக் கல்வி அலுவலக ஆரம்பப் பிரிவு கல்வி ஆலோசகர் திருமதி சந்திரமாலா கலந்துகொண்டார். (து-222)



## பாதிக்கப்பட்ட குடும்பத்துக்கு உதவிகள்

வவுனியா, ஜூலை 29
தீயால் முற்றாக எரிந்த வீட்டின் உரிமையாளருக்கு உலர் உணவுப் பொதிகள் மற்றும் மாணவர்களுக்கான கற்றல் உபகரணங்கள் என்பன வழங்கி வைக்கப்பட்டன.
வவுனியா ஓமந்தை பறநட்டகல் பகுதியிலுள்ள தற்காலிக வீடு ஒன்று கடந்த வியாழக்கிழமை முற்றாக எரிந்து நாசமாகியது. இந்த நிலையில் பாதிக்கப்பட்ட குறித்த குடும்பத்துக்கு லண்டனில் புலம் பெயர்ந்து வசித்து வரும் தாயக உறவு ஒருவரின் நிதிப்பங்களிப்பில் வவுனியா 'தமிழ் விருட்சம்' அமைப்பால் இந்த உதவிகள் வழங்கி வைக்கப்பட்டன. (ஐ)

## பயிற்சி நெறி

முல்லைத்தீவு, ஜூலை 29
"உரிமைகளைப் பெற்றுக் கொடுப்போம்" நிகழ்ச்சித் திட்டத்தின் கீழ் அரச திணைக்கள தொழில் நுட்ப அலுவலர்களுக்கான பயிற்சிநெறி அண்மையில் நடைபெற்றது.
முல்லைத்தீவு மாவட்ட சமூக சேவை அலுவலகமும் முன் சிறுவர் நிதியமும் இணைந்து, முல்லைத்தீவு மாவட்ட சமூக சேவை அலுவலகத்தில் இந்தப் பயிற்சியை நடத்தின. நிகழ்வில் வளவாளராகச் சிறுவர் நிதியத் திட்ட முகாமையாளர் ஜோசப் சுதர்சன் கலந்துகொண்டார். (ஐ-222)

# நானாட்டான் அச்சங்குளத்தில் சட்டவிரோத மணல் அகழ்வு

## தடுத்து நிறுத்துமாறு மக்கள் கோரிக்கை

**மன்னார், ஜூலை 29**
**நானாட்டான், அச்சங்குளம் கிராமத்தில் கடற்கரைப் பிரதேசமான கீரிமோட்டை மற்றும் அருவியாற்று ஓடை மணல் திட்டுக்களில் சட்டவிரோத மணல் அகழ்வு நடைபெறுகின்றது என்று மக்கள் குற்றஞ்சாட்டுகின்றனர். அந்தப் பகுதிகளில் மணல் அகழ்வதற்கு நீதிமன்று தடை விதித்துள்ள போதும், இரவு வேளைகளில் பெருமளவு மணல் அகழ்ந்து செல்லப்படுகின்றது என்றும் அந்தப் பகுதி மக்கள் கூறுகின்றனர்.**



2017ஆம் ஆண்டு காலப்பகுதியில் அந்தப் பகுதியில் நடந்த மணல் அகழ்வால் கடல்நீர் உள்வந்து நன்னீர் உப்பாகும் நிலைமை காணப்பட்டது.
இது தொடர்பாக பொதுமக்கள் தெரியப்படுத்தியதை அடுத்து அப்போதைய மன்னார் மாவட்ட நீதிவான் அலெக்ஸ் ராஜா அந்த இடங்களுக்குச் சென்று நேரடியாக நிலைமைகளை ஆராய்ந்திருந்தார். அந்தப் பகுதிகளில் மணல் அகழக் கூடாது என்றும் உத்தரவு பிறப்பித்திருந்தார். ஆனாலும் தற்போது அந்தப் பகுதிகளில் மணல் அகழ்வு நடைபெறுகின்றது என்று அந்தப் பகுதி மக்கள் குற்றஞ் சாட்டுகின்றார். அச்சங்குளம் பிரதேசத்தில் ஆறு அடிக்கும் மேல் ஆழமான குழிகள் மணல் அகழ்வால் உருவாகியுள்ளன. கீரிமோட்டைப் பகுதியில் மணல் அகழ்வால் கற்றாளைச் செடிகள் கூட முற்றாக அழிக்கப்பட்டுள்ளன. அச்சங்குளம், அருவியாறு பிரதேசங்களில் மணல் அகழ்வைத் தடை செய்ய நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று அந்தக் கிராம மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.
கிராம மக்களின் கோரிக்கை தொடர்பாக மன்னார் மாவட்டச் செயலர் சி.ஏ.மோகன்றாஸைக் கேட்டபோது.



நீதிமன்றக் கட்டளையையும் மீறி மணல் அகழ்வு செய்கின்றனர். இது தொடர்பாக கொழும்பு கனிமவளத் திணைக்களத்துக்குக் கடிதம் அனுப்பப்பட்டது. நேரடியாகவும் பேசப்பட்டது. ஆனால் தொடர்ந்து மணல் அகழ்வு நடக்கின்றது. அது தொடர்பாக எந்த நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை. என்றார். (எ-213)



## உயர்தரப் பரீட்சைக்கான அனுமதி அட்டைகள் வழங்கப்பட்டன

கொடிகாமம், ஜூலை 29
அடுத்த மாதம் நடைபெறவுள்ள க.பொ.த. உயர்தரப் பரீட்சைக்குத் தோற்றவுள்ள கிளிநொச்சி இந்துக் கல்லூரியின் உயர்தர மாணவர்களுக்கான அனுமதி அட்டை வழங்கும் நிகழ்வு கடந்த வியாழக்கிழமை முற்பகல் கல்லூரியின் மண்டபத்தில் அதிபர் கி.விக்கினராஜா தலைமையில் நடைபெற்றது.
பிரதி அதிபர், உப அதிபர், உயர்தர பகுதித் தலைவர், ஆசிரியர்கள், மாணவர்கள் ஆகியோர் கலந்து கொண்டனர். அதிபர் மற்றும் ஆசிரியர்களின் ஆசீர்வாதத்துடன் மாணவர்கள் அனுமதி அட்டைகளைப் பெற்றுக் கொண்டனர். (து-159)





## கதிர்காம முருகன் ஆலய ஆடி வேல் உற்சவம்

யாழ்ப்பாணம், ஜூலை 29
யாழ்ப்பாணம் நாவாலி சிறி கதிர்காம முருகன் ஆலய ஆடி வேல் உற்சவம் நாளை செவ்வாய்க்கிழமை கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி தொடர்ந்து 16 நாள்கள் நடை பெறவுள்ளது. எதிர்வரும் 13 ஆம் திகதி பிற்பகல் 3 மணிக்கு பூசை ஆரம்பமாகி கிராமிய ஊர்வலம் வருதல் நடைபெற்று இரவு 7 மணிக்குத் தெய்வநாயகி அம்பாள் தரிசனம் இடம்பெறும். 14 ஆம் திகதி புதன்கிழமை காலை 7.15 மணிக்கு பூசைகள் ஆரம்பமாகித் தொடர்ந்து தீர்த்த உற்சவம் இடம்பெற்று மாலை 6.30 மணியளவில் கொடியிறக்கம் இடம்பெறும் என்று ஆலயத்தினர் அறிவித்துள்ளனர். (ஐ)

## சிறிமகாவிஷ்ணு முன்பள்ளியின் 'செயற்பட்டு மகிழ்வோம்' நிகழ்வு

கொடிகாமம், ஜூலை 29
கைதடி நாவற்குழி தெற்கு சிறி மகாவிஷ்ணு முன்பள்ளியின் 'செயற்பட்டு மகிழ்வோம்' நிகழ்வு நாளை செவ்வாய்க்கிழமை பிற்பகல் 2.30 மணிக்கு கடற்கரை மைதானத்தில் முகாமைக்குழுத் தலைவி திருமதி தவராசா கவிதா தலைமையில் நடைபெறவுள்ளது.
இந்த நிகழ்வில் முதன்மை விருந்தினராக யாழ்ப்பாணம், கிளிநொச்சி மாவட்டங்களின் நாடாளுமன்ற உறுப்பினர் ஈ.சரவணபவன் கலந்து கொள்வார்.
சிறப்பு விருந்தினர்களாக கைதடி நாவற்குழி தெற்கு அ.த.க. பாடசாலை அதிபர் சி.சோமசுந்தரம், ஜே/297 கைதடி நாவற்குழி கிராம அலுவலர் த.மாதுங்கன், சங்கானை சிவப்பிரகாச மகா வித்தியாலயத்தின் ஆசிரியரும் நாடாளுமன்ற உறுப்பினரின் இணைப்பாளருமான செ.பிரதாப் ஆகியோர் கலந்து கொள்ளவுள்ளனர்.
மதிப்புறு விருந்தினர்களாக நாவற்குழி குடும்ப இணைப்பாளர் திருமதி வி.சயந்தா சிறிமகா விஷ்ணு கடற்றொழில் சங்க தலைவர் சீ.கஜேந்திரன் ஆகியோர் கலந்து சிறப்பிக்கவுள்ளனர். (ம-159)

## சாவகச்சேரியில் வாகனங்களின் ஆவணங்கள் திடீர் சோதனை

சாவகச்சேரி, ஜூலை 29
சாவகச்சேரி நகரில் சகல வீதிகளிலும் நேற்றுக் காலை சாவகச்சேரி பொலிஸார் வாகனங்களின் அவணங்களைச் சோதனையிட்டனர்.
பொலிஸ் நிலையத்தில் தலைமைக் காரியாலய பரிசோதகர், உதவிப் பொலிஸ் பரிசோதகர்கள் உட்பட அனைத்துத்தரப்புப் பொலிஸ் அலுவலர்களும் வாகன பரிசோதனையில் ஈடுபட்டிருந்தனர்.
அதன்போது, பதிவு இலக்கமின்றி சாவகச்சேரி சந்தைக்கு உந்துருளியில் வந்திருந்த இளைஞரைப் பொலிஸார், பொலிஸ் நிலையத்துக்குக்கொண்டு சென்றனர். (து-9)

## 25 மாணவருக்கு கற்றலுக்கான உபகரணங்கள்

முல்லைத்தீவு, ஜூலை 29
முல்லைத்தீவு குமுழமுனை கிராமத்தைச் சேர்ந்த 25 மாணவர்களுக்கு கற்றல் உபகரணங்கள் வழங்கப்பட்டன. 'உயர்த்தும் கரங்கள்' செயற்றிட்டத்துக்கு முல்லைத்தீவு குமுழமுனைக் கிராமத்திலிருந்து விடுக்கப்பட்ட வேண்டுகோளுக்கு இணங்க அந்தப் பகுதியைச் சேர்ந்த 25 மாணவர்களுக்கு தலா 30 ஆயிரம் ரூபா பெறுமதியான பாடசாலைக் கற்றல் உபகரணங்கள் அண்மையில் வழங்கப்பட்டன.
இதற்கான நிதியில் ஒருபகுதியை சிறிசங்கரசர்மா வழங்கினார். மேலதிக நிதி உயர்த்தும் கரங்கள் சேமிப்பு நிதியிலிருந்து பெறப்பட்டிருந்தது. (து-222)

## வீதியில் சென்றோரை கருங்குளவிகள் துரத்திக் கொட்டியதில் ஐந்து பேர் பாதிப்பு

சாவகச்சேரி, ஜூலை 29
கூடு கலைந்ததால் பறந்து வந்த கருங்குளவிகள் வீதியில் நடந்து சென்ற நால்வரைத் துரத்திக் கொட்டியுள்ளன. பாதிக்கப்பட்ட அவர்களைக் காப்பாற்றச் சென்ற குடும்பப் பெண் ஒருவர் அதன்போது வீதியில் வீழ்ந்து தலையில் காயமடைந்தார். கருங்குளவிகளால் பாதிக்கப்பட்ட 39 வயதுப் பெண் மேலதிக சிகிச்சைக்காக யாழ்ப்பாணப் போதனா மருத்துவமனைக்கு மாற்றப்பட்டார்.
இந்தச் சம்பவம் மட்டுவில் தெற்கில் நேற்றுமுன்தினம் இடம்பெற்றது. பாதிக்கப்பட்ட ஏனைய நால்வரும் சாவகச்சேரி ஆதார மருத்துவமனையில் சேர்க்கப்பட்டுள்ளனர். இதே இடத்தைச் சேர்ந்த 28, 39,19 மற்றும் 50 வயதுகளையுடையவர்களே சாவகச்சேரி மருத்துவமனையில் யில் உள்ளனர். (து-9)

# நீர் இறைக்கும் இயந்திரங்கள் மானிய விலையில் வேண்டும்

## அரச தலைவரிடம் விவசாயிகள் கோரிக்கை

**யாழ்ப்பாணம், ஜூலை 29**

**மானிய விலையில் தண்ணீர் இறைக்கும் இயந்திரம் வேண்டும் என்ற விவசாயிகளின் கோரிக்கை அரச தலைவர் செயலகத்துக்கு தற்போது அனுப்பிவைக்கப்பட்டுள்ளதாக மாவட்டச் செயலக விவசாயப் பிரிவு தெரிவித்துள்ளது.**

இது பற்றி மேலும் தெரிவிக்கப்பட்டள்ளதாவது:

விவாசாயிகளின் தேவைகள் பிரச்சினைகள் தொடர்பில் மாவட்ட விவசாயக் குழுக் கூட்டத்தில் ஆராயப்பட்டன. விவசாயிகளின் தேவைகள் தொடர்பில் முன் மொழிவுகளைப் பிரதேச செயலகம் ஊடாக மாவட்டச் செயலகத்துக்கு அனுப்பி வைக்குமாறு விவசாயப் பிரிவு தெரிவித்திருந்தது. அதற்கு அமைவாக தண்ணீர் இறைக்கும் இயந்திரம் மானிய விலையில் வேண்டும் என்று விவசாயிகள் கோரிக்கை முன்வைத்திருந்தனர்.

மின்சாரத்தில் தொழிற்படும் தண்ணீர்ப் பம்பிகளைப் பயன் படுத்தி அதிக பரப்புள்ள பயிர்க் காணிகளுக்கு தண்ணீர் பாய்ச்ச முடியாது. மின் பம்மி சூடாகி பழுதடைவதுடன் மின்சாரக் கட்டணம் அதிகமாக காணப்படும். பயிர் செய்யும் நிலங்கள் வீட்டுக்கு அண்மையில் இருப்பது குறைவு. தொலைவான இடங்களில் இருப்பதால் மின்சாரம் பெற்றுக் கொள்வதும் கடினம். ஆகவே எண்ணெயில் இயங்கக் கூடிய 'ரொபின்' வகை தண்ணீர் இறைக்கும் இயந்திரங்களை அரசு தர வேண்டும். முழு விலையையும் கொடுத்து தண்ணீர் இறைக்கும் இயந்திரத்தைப் பெற்றுக்கொள்வதற்கு விவசாயிகளால் முடியாது. ஆகவே மானிய அடிப்படையில் அரை மானிய விலையில் இந்த இயந்திரங்களைப் பெற்றுத் தர வேண்டும்.

சோலரில் இயங்கும் தண்ணீர்ப் பம்பிகள் அறிமுகப்படுத்தப்பட்டாலும் அதனைக் கொள்வனவு செய்வதற்கு பெருந்தொகைப் பணம் செலுத்த வேண்டும். அது சார்ந்த தொழில் நுட்ப அறிவும் சற்றுத் தேவை. ஆகவே இது தொடர்பான நிலமைகளை விவசாயிகளுக்கு வழங்க வேண்டும் என்று விவசாயிகள் கோரிக்கையை முன்வைத்திருந்தனர். சுமார் 30 தண்ணீர் இறைக்கும் இயந்திரங்கள் தேவை என்ற முன் மொழிவு கிடைத்திருந்தது. அந்தக் கோரிக்கை அரச தலைவர் செயலகத்துக்கு அனுப்பிவைக்கப்பட்டுள்ளது என்று தெரிவிக்கப்பட்டது.

அரை மானிய விலையில் உருளைக் கிழங்கு வேண்டும் என்ற கோரிக்கை விவசாயிகள் முன்வைத்து அரச தலைவர் செயலகம் ஊடாக அதற்கான ஒப்புதல் கிடைத்திருந்தது. (த-7)



## தற்காலிக வீடுகள் அமைக்க பொருள்கள்

பளை, ஜூலை 29

பளைப் பிரதேச செயலக பிரிவுக்குட்பட்ட வேம்பொடுகேணி கிராம அலுவலர் பிரிவில் அண்மையில் மீளக்குடியமர்த்தப்பட்ட 43 குடும்பங்களில் 20 குடும்பங்களுக்கு இத்தாவிலில் இயங்கும் ரஹமா நிறுவனத்தினர் தற்காலிக வீடுகள் அமைப்பதற்கான பொருள்களை அண்மையில் வழங்கினர். தற்காலிக வீட்டுக்குரிய தூண்கள், மரங்கள், தகரங்கள், அரிவுகற்கள், சீமெந்து, மணல் போன்ற பொருள்களையே வழங்கியுள்ளனர். இந்தக் குடும்பங்களுக்கு கிணறு மற்றும் மலசலகூடம் அமைப்பதற்கான பொருள்கள் விரைவில் வழங்கப்படும் என்று தெரிவிக்கப்பட்டது. (த-9)

## சட்டவிரோதமாக மணல் ஏற்றினரென கொடிகாமத்தில் இருவர் கைது

கொடிகாமம், ஜூலை 29

தென்மராட்சி, கொடிகாமம் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட பகுதியில் சட்டவிரோதமாக மணல் ஏற்றினர் என்ற குற்றச்சாட்டில் இருவர் கைது செய்யப்பட்டனர். மணலைக் கொண்டு செல்வதற்குப் பயன்படுத்தப்பட்டது என்று கருதப்படும் டிப்பர் வாகனமும் பொலிஸாரால் கைப்பற்றப்பட்டது.

நேற்றுமுன்தினம் சனிக்கிழமை இரவு 8 மணியளவில் வரணி நாவற்காடு பகுதிக்கும் வடக்கு காடு பகுதிக்கும் இடையில் இந்தச் சம்பவம் நடைபெற்றது. மேலதிக விசாரணைகளை கொடிகாமம் பொலிஸாரால் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. (ம-159)



## சூசையப்பருக்கு புதிய ஆலயம் காத்தான்குளம் பகுதியில் திறப்பு

மன்னார், ஜூலை 29

மன்னார் மறைமாவட்ட காத்தான்குளம் பங்கில் புதிதாக அமைக்கப்பட்ட புனித சூசையப்பர் ஆலய அர்ச்சிப்பு விழாவும், ஆலயத் திறப்பு விழாவும் நேற்றுமுன்தினம் நடைபெற்றது.

மன்னார் ஆயர் இம்மானுவேல் பெர்னாண்டோ ஆண்டகை கத்தோலிக்க திரு அவையின் திரு வழிபாட்டுத் திரு மரபுக்கு ஏற்ற முறைப்படி ஆலயத்தைத் திறந்து வைத்தார். ஆலயத்தின் நுழை வாயிலையும், ஆலயத்தையும், பலிப் பீடத்தையும், நற்கருணைப் பேழையையும் அர்ச்சித்துப் புனிதப்படுத்தினார்.

இந்தப் பங்கின் முதல் பங்குத் தந்தையாக நியமிக்கப்பட்ட அருட்பணி. செ.வசந்தக்குமார் அடிகளாரின் பணிக்காலத்தில் முன்னாள் ஆயர் இராயப்பு யோசேப் ஆண்டகையின் காலத்தில் அனுமதியோடு அடிக்கல் நட்டு ஆரம்பிக்கப்பட்டது. (த-56,213)

## வர்ம சிகிச்சை பயிற்சிகளை இந்திய நிபுணர்கள் வழங்கினர்

யாழ்ப்பாணம், ஜூலை 29

வடக்கு மாகாணத்தில் வர்ம சிகிச்சை முறையைச் சிறப்பாக முன்னெடுத்துச் செல்வதற்கு அது தொடர்பான பயிற்சிகள் இந்தியாவில் இருந்து வருகை தந்த துறை சார்ந்த நிபுணர்களால் தற்போது வழங்கப்பட்டுள்ளன என்று மாகாண சுதேச மருத்துவ திணைக்களம் தெரிவித்துள்ளது.

இது பற்றி மேலும் தெரிவிக்கப்பட்டதாவது:

வர்ம சிகிச்சை என்பது நரம்பு, எலும்பு சார்ந்த செயற்படாத உடற் பாகங்களைத் தூண்டல் மூலம் குணப் படுத்தும் ஒரு சிகிச்சை முறையாகும். இந்தச் சிகிச்சை முறையை அனைத்து மாவட்டத்தில் உள்ள சித்த மருத்துவ மனைகளில் அறிமுகப்படுத்தவேண்டும். இந்தச் சிகிச்சை தற்போது வடக்கு மாகாணத்தில் யாழ்ப்பாண மாவட்டத்தில் ஒரு சித்த மருத்துவ மனையில் மட்டும் வழங்கப்படுகிறது.

இதற்கான சிறப்புப் பயிற்சிகள் இந்தியாவிலிருந்து வரவழைக்கப்பட்ட துறை சார்ந்த நிபுணர்களால் வடக்கு மாகாணத்தில் சுமார் 40 பேருக்கு பயிற்சிகள் அண்மையில் வழங்கப்பட்டுள்ளன. அனைத்து சித்த மருத்துவ மனைகளிலும் இந்தச் சிகிச்சை முறையை வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது என்று தெரிவிக்கப்பட்டது. (த-7)



காரைநகர் தனியார் பேருந்து உரிமையாளர் சங்க கட்டடத் திறப்பு விழா நேற்று இடம்பெற்றது. சங்கத்தலைவர் சிங்கஅரியரட்ணம் தலைமையில் திறப்பு விழா நிகழ்வு இடம்பெற்றது. சங்கக் கட்டடத்தினை ஈ.எஸ்.பி. நாகரத்தினம் திறந்து வைத்தார். இதில் தனியார் பஸ் உரிமையாளர்கள், பொதுமக்கள் எனப் பலர் கலந்துகொண்டனர். (ம-21)

## யாகப்பர் ஆலய நற்கருணை விழா இன்று மாலையில்

கொழும்புத்துறை, ஜூலை 29

கொழும்புத்துறை வசந்தபுரம் புனித யாகப்பர் ஆலய வருடாந்த திருவிழா நடைபெற்று வருகின்றது. இன்று மாலை 5 மணிக்கு நற்கருணைப் பெருவிழா இடம்பெறவுள்ளது.

நாளை செவ்வாய்க்கிழமை காலை 6.30 மணிக்கு திருவிழாத் திருப்பலியும், திருப்பலியைத் தொடர்ந்து திருச்சொரூப பவனியும் இடம்பெறவுள்ளதாக பங்குத்தந்தை அருட்பணி செப்ஸ்ரியன் குரூஸ் அடிகள் அறிவித்துள்ளார். (ம-135)



## பாடசாலைக்கு சீருடைகள் அன்பளிப்பு

கிளிநொச்சி, ஜூலை 29

கிளிநொச்சி ஜயனார்புரம் பாடசாலையின் கரப்பந்து அணியினருக்குச் சீருடை மற்றும் பந்துகள் வழங்கப்பட்டன. 'கிளிநொச்சி மக்கள் அமைப்பு' கிளிநொச்சியைச் சேர்ந்த கி.விஜயராஜாவின் அனுசரணையில் இவற்றை நேற்றுமுன்தினம் வழங்கிவைத்தது. (த-222)

## நினைவஞ்சலியும் நிதி அன்பளிப்பும்

யாழ்ப்பாணம், ஜூலை 29

வெலிக்கடைச் சிறையில் வஞ்சகமான முறையில் கொல்லப்பட்ட ரெலோவின் தலைவர் தங்கத்துரை, தளபதி குட்டிமணி உட்பட 53 பேரின் ஞாபகார்த்தமாக 12 மாணவர்களுக்கு. தலா 500 ரூபா வழங்கப்பட்டு பணம் வங்கியில் வைப்பிலிடப்பட்டது.

ரெலொவின் மத்திய குழு உறுப்பினரும், வலி.கிழக்குப் பிரதேசசபை உறுப்பினருமான சிவாவின் ஏற்பாட்டில் புத்தூர் கிழக்குப் பகுதியில் அமைந் துள்ள இரண்டு சனசமூக நிலையங்களில் வைத்து வழங்கப்பட்டன.

கல்வி கற்பிக்கும் ஆசிரியர்களுக்குக் கொடுப்பனவும் அங்கு வழங்கப்பட்டது.

வலி.கிழக்கு பிரதேச சபைத் தவிசாளர் தி.நிரோஷ் தலைமையில் நடந்த இந்த நிகழ்வில், முதன்மை விருந்தினராக வடக்கு மாகாண சபை முன்னாள் உறுப்பினர் விந்தன் கனகரட்ணம் கலந்துகொண்டார்.

வலி.கிழக்குப் பிரதேச சபை உறுப்பினர், செல்வி எஸ். வேணுகாவும் இதில் கலந்துகொண்டார்.

வெலிக்கடைச் சிறைச்சாலையில் படுகொலை செய்யப்பட்டவர்களை நினைவு கூர்ந்து மெழுகுவர்த்தி ஏற்றி அஞ்சலி செலுத்தப்பட்டது. (கு)





பல வருடங்கள் இழுபறியின் பின்னர்

## கொடிகாமம் – பருத்தித்துறை வீதி சீரமைப்பு ஆரம்பிக்கப்பட்டுள்ளது

*தொலைத் தொடர்பு மற்றும் மின் கம்பங்களை பின்னகர்த்துமாறு மக்கள் கோருகின்றனர்*

தென்மராட்சி, ஜூலை 29

பல வருடங்கள் இழுபறியின் பின்னர் கொடிகாமத்திலிருந்து பருத்தித்துறை வரையான வீதிச் சீரமைப்பு ஆரம்பிக்கப்பட்டுள்ளது. வீதி அபிவிருத்தி அதிகார சபை இதைத் தார்க்கலவை வீதியாகச் சீரமைக்கும் பணிகளில் ஈடுபட்டுள்ளது.

வீதியோரத்தில் நடப்பட்டுள்ள மின்கம்பங்கள் மற்றும் தொலைத் தொடர்பு கம்பங்கள் இன்னமும் அந்தந்த இடங்களிலேயே காணப்படுகின்றன. இதனால் விபத்துக்கள் ஏற்பட வாய்ப்புகள் உள்ளன என்று பொதுமக்கள் தெரிவிக்கின்றனர்.

தென்மராட்சி,வடமராட்சி மக்கள் இந்த வீதியில் சிரமங்களுக்கு மத்தியிலேயே பல வருடங்களாகப் வாகனங்களில் பயணிக்கும் அவல நிலை நீடித்துக்கொண்டிருந்தது.

கொடிகாமம் - பருத்தித்துறை வீதியைத் தார்க்கலவை வீதியாக மாற்றவேண்டுமென்ற நீண்டகாலக் கோரிக்கையின் பயனாக வீதி தற்போது தார்க்கலவைச் சாலையாகச் சீரமைக்கப்பட்டு வருகிறது.

வீதி அமைப்பதற்கு சாவகச்சேரி பிரதேச சபை, வடமராட்சி தெற்கு மேற்கு பிரதேச சபை, பருத்தித்துறைப் பிரதேச சபை போன்றவற்றில் அனுமதி பெற்று அதன்பின்னர் சாலையின் அருகே வசிக்கும் குடியிருப்பாளர்களுடன் கலந்துரையாடி வீதி அகலிப்புக்கு வழங்கப்படும் காணி மற்றும் பயன்தரு மரங்களுக்குரிய இழப்பீடு வழங்குவது தொடர்பான சம்மதம் ஆகியவை பெறப்பட்ட பின்னர் வீதியைத் தார்க்கலவை வீதியாக மாற்றும் வேலைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

வேலைகள் ஆரம்பிக்க முன்னர் வீதியோரத்தில் உள்ள மின்கம்பங்கள் மற்றும் தொலைத் தொடர்பு கம்பங்கள் போன்றவை இன்னமும் அகற்றப்படாமல் உள்ளன. இதனால் விபத்துக்கள் இடம்பெற வாய்ப்பு உள்ளதென்றும் மக்கள் தெரிவிக்கின்றனர்.

வீதி உயர்த்தப்பட்டு அமைக்கப்படுவதால் வடிகாலமைப்புப் பணிகள் ஆரம்பிக்காததால் குடியிருப்புக் காணிகளில் வெள்ளம் தேங்கும் அபாயம் உள்ளது என்று பொதுமக்கள் தெரிவிக்கின்றனர்.

வீதி அமைக்கும் பணிகளை மழைக்காலம் ஆரம்பிக்க முன்னர் பூர்த்தி செய்ய முழுவீச்சில் வேலைகள் இடம்பெற்று வருகின்றன எனவும் மக்களின் குறைபாடுகள் நிவர்த்தி செய்த பின்னரே பொதுமக்கள் பாவனைக்கு வீதி விடப்படுமென்றும் அதிகார சபையால் தெரிவிக்கப்பட்டது. (த-9)

# தகுதியும் தரமும் உடைய வேட்பாளரை இறக்குங்கள்

*ஐ.தே.கவுக்கு டளஸ் கிண்டல்*



**கொழும்பு, ஜூலை 29**

**எம்முடன் போட்டிபோட தகுதியும் தரமும் உடைய ஒரு சிறந்த வேட்பாளரை அரச தலைவர் தேர்தலில் களமிறக்குமாறு ஐக்கிய தேசியக் கட்சியிடம் வினயமாக கேட்டுக் கொள்கின்றேன் என்று சிறிலங்கா பொதுமக்கள் முன்னணியின் நாடாளுமன்ற உறுப்பினர் டளஸ் தெரிவித்தார்.**

நேற்று இடம்பெற்ற பொதுமக்கள் முன்னணியின் பொதுக் கூட்டமொன்றில் கலந்துகொண்டு கருத்துத் தெரிவிக்கையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

கட்சியின் தலைவரா? உப தலைவரா? சபாநாயகரா என்பது எமக்குப் பிரச்சினையில்லை. சிறந்த போட்டியொன்றுக்கான ஒருவரே எமக்குத் தேவை - என்று நாடாளுமன்ற உறுப்பினர் டளஸ் மேலும் தெரிவித்தார்.

அரச தலைவர் தேர்தல் தொடர்பான அறிவிப்பு விரைவில் வெளியிடப்படும் என்று கருதப்படும் நிலையில், ஐ.தே.க, பொதுமக்கள் முன்னணி ஆகியவற்றுக்கு இடையிலான கருத்து மோதல்கள் தற்போது உச்சம்பெற்றுள்ளன. முன்னதாக நேற்றுமுன்தினம் கருத்துத் தெரிவித்த எதிர்க்கட்சித் தலைவர் மகிந்த ராஜபக்ச, அரச தலைவர் தேர்தல் தொடர்பான அறிவிப்பு வெளிவந்ததும், ஐக்கிய தேசியக் கட்சி மூன்றாகப் பிளவடைய வாய்ப்புக்கள் மிகமிக அதிகம். ரணில் விக்கிரமசிங்க, சஜித் பிரேமதாச, கருஜெயசூரிய ஆகியோருக்கு ஆதரவானவர்க்ள் தமக்குள் பிளடைவார்கள்.

சஜித் பிரேமதாசவை இந்தியாவும், கரு ஜெயசூரியவை அமெரிக்காவும் இயக்குகின்றன.

புலம்பெயர் புலிகளால் ரணில் இயக்கப்படுகின்றார் என்று விமர்சித்திருந்தமை குறிப்பிடத்தக்கது. (ம)

கிளிநொச்சி மாவட்டத்தில்

## சிறப்பாகச் செயற்பட்டிருந்த பொலிஸாருக்கு மதிப்பளிப்பு



கிளிநொச்சி, ஜூலை 29

கிளிநொச்சி மாவட்டத்தில் உள்ள 7 பொலிஸ் நிலையங்களிலும் சிறப்பாக சேவையாற்றிய பொலிஸ் அலுவலர்களை மதிப்பளிக்கும் நிகழ்வு நேற்று நடைபெற்றது.

கிளிநொச்சி கூட்டுறவுச் சபை மண்டபத்தில் பிற்பகல் 2 மணிக்கு இது நடைபெற்றது.

நிகழ்வில்வடக்குமாகாணமூத்தபொலிஸ்மா அதிபர் விஜயகுணரட்ண முதன்மை அதிதியாகக் கலந்துகொண்டார்.

மூத்த பொலிஸ் அத்தியட்சகர் கணேசநாதன் உள்ளிட்ட பலரும் இதில் கலந்துகொண்டிருந்தனர். (த-35)

## பரீட்சைக்கான அனுமதி அட்டைகள்

யாழ்ப்பாணம், ஜூலை 29

கொக்குவில் இந்துக் கல்லூரியில் க.பொ.த. உயர்தரம் கல்வி பயிலும் மாணவர்களுக்கான பொதுத் தகவல் தொழில்நுட்பப் பரீட்சைக்கான அனுமதி அட்டைகள் நாளை 30ஆம் திகதி செவ்வாய்க்கிழமை வழங்கப்படும். வருகை தரும்போது மாணவர்கள் பாடசாலைச் சீருடை அணிந்து தேசிய அடையாள அட்டையுடன் வரவேண்டும் என பாடசாலை அதிபர் அறிவித்துள்ளார்.

இந்தப் பரீட்சையானது ஒன்லைன் மூலமாக ஒக்ரோபர் மாதம் 14ஆம் திகதி தொடக்கம் 21ஆம் திகதி வரை இடம்பெறும். (ம)

## நினைவுப் பேருரை

கொடிகாமம், ஜூலை 29

அகில இலங்கை இந்துமாமன்றத்தின் முன்னாள் தலைவர் வே.பாலசுப்பிரமணியம் அமரத்துவமெய்திய இருபத்தெட்டாவது ஆண்டு நிறைவாக நடத்தப்படும் நினைவுப் பேருரை எதிர்வரும் சனிக்கிழமை காலை 10 மணிமுதல் பம்பலப்பிட்டி சரஸ்வதி மண்டபத்தில் அகில இலங்கை இந்துமாமன்றத்தின் தலைவர் மா.தவயோகராசா தலைமையில் நடைபெறவுள்ளது.

இந்த நிகழ்வில் முதன்மை விருந்தினராக யாழ்ப்பாண பல்கலைக்கழக விஞ்ஞான தொழில்நுட்பப் பீடங்கள் முன்னாள் பீடாதிபதி கணிதப் பேராசிரியர் சி.சிறி சற்குணராசா கலந்து சிறப்பிக்கவுள்ளார்.

அவர் வாழ்வின் ஆதாரங்கள் எனும் தொனிப் பொருளில் நினைவுப் பேருரை நிகழ்த்தவுள்ளார். (ம-159)

## போதையில் தண்டவாளத்தில் படுத்திருந்தவர் கைதானார்

*உயிரைமாய்க்க இருந்தேன் என்று அவரே தெரிவித்தார்*

கொடிகாமம், ஜூலை 29

கொடிகாமம் பகுதியில் போதையில் தொடருந்துத் தண்டவாளத்தில் படுத்திருந்தார் என்ற குற்றச்சாட்டில் கொடிகாமம் பொலிஸார் ஒருவரைக் கைது செய்தனர். நீதிமன்று அவரைச் சொந்தப் பிணையில் விடுவித்து வழக்கை ஒத்திவைத்தது. கடந்த புதன்கிழமை இந்தச் சம்பவம் இடம்பெற்றுள்ளது. உரும்பிராயிலிருந்து வந்த குடும்பத் தலைவரே அவர் என்று பொலிஸார் தெரிவித்தனர்.

அவர் தொடருந்துத் தண்டவாளத்தில் படுத்திருக்கிறார் என்று பொது மக்கள் தகவல் வழங்கினர். அதன்படி தொடருந்து நிலையத்துக்குச் சென்ற பொலிஸார் அவரைக் கைது செய்து சாவகச்சேரி நீதிமன்றில் மறுநாள் முற்படுத்தினர்.

தனது மனைவி தன்னை விட்டு வன்னியில் வசிக்கிறார். இரண்டு பிள்ளைகளும் நன்னடத்தை சிறுவர் இல்லத்தில் உள்ளனர். தனது பிள்ளைகளைச் சென்று பார்க்க முடியவில்லை. அதனால் உயிரை மாய்த்துக் கொள்ள முடிவெடுத்தேன் என்று கைது செய்யப்பட்டவர் கூறியுள்ளார். அதனையடுத்து பிள்ளைகளைப் போய்ப் பார்த்து விட்டு அடுத்த மாதம் 30ஆம் திகதி நீதிமன்றுக்குச் சமூகமளிக்கும்படி கூறிய நீதிமன்று அவரைச் சொந்தப் பிணையில் விடுவித்தது. (த-159)

## ‘என்ரபிறைஸ் சிறிலங்கா’ நடமாடும் சேவை யாழில்

*செப்ரெம்பர் மாதம் நடக்கவுள்ளது*

யாழ்ப்பாணம், ஜூலை 29

நிதி அமைச்சு முன்னெடுக்கும் 'என்ரபிறைஸ் சிறிலங்கா' நடமாடும் சேவை செப்ரெம்பர் மாதம் யாழ்ப்பாணத்தில் இடம்பெறும் என்று மாவட்டச் செயலர் நா.வேதநாயகன் தெரிவித்தார்.

இதன் இரண்டாவது நடமாடும் சேவை நேற்றுமுன்தினம் அநுராதபுரத்தில் இடம்பெற்றது. இதன்போதே யாழ்ப்பாணத்தில் நடத்துவதற்கான அறிவித்தல் விடுக்கப்பட்டது என்று செயலர் தெரிவித்தார்.

இதேநேரம் குறித்த நடமாடும் சேவை இடம்பெறும் மாவட்டத்திடம் அதற்கான அடையாளச் சின்னம் கையளிப்பது வழமை. அதற்கமைய அடுத்த நடமாடும் சேவையின் சின்னம் நேற்று (நேற்றுமுன்தினம்) அநுராதபுரத்தில் வைத்து எம்மிடம் கையளிக்கப்பட்டது.

இதன் முலம் குறித்த திட்டத்தின் மூலமாக மேற்கொள்ளும் அனைத்துத் திட்டத்தின் நன்மைகளையும் உடனடியாகவே குறித்த இடத்தில் இருந்து பெற்றுக்கொள்ள முடியும்.

இதன்போதுநிதிஅமைச்சுக்குஉட்பட்டதிணைக்களங்களும் அதனோடு இணைந்த அதிகாரிகளும் கலந்துகொள்வர். அமைச்சின் செயலர் மற்றும் அமைச்சர்களும் இதில் கலந்து கொள்ளவுள்ளனர்.

இருப்பினும் இதுவரையில் இடம் தேர்வு செய்யப்படவில்லை. விரைவில் இடம் தேர்வு செய்யப்படும் என்று மாவட்டச் செயலர் மேலும் தெரிவித்தார். (த-105)



## போதையில் சாரத்தியம்: தலா 25,000 தண்டம்

கொடிகாமம், ஜூலை 29

போதையில் உந்துருளி செலுத்தினர் என்ற குற்றச்சாட்டில் இருவர் கைது செய்யப்பட்டுள்ளனர் என்று கொடிகாமம் பொலிஸார் தெரிவித்தனர்.

சாவகச்சேரி நீதிமன்றில் இருவரும் கடந்த வெள்ளிக்கிழமை முற்ப டுத்தப்பட்டனர்.

இருவரும் குற்றத்தை ஏற்றுக் கொண்டனர். தலா 25 ஆயிரம் ரூபா வீதம் 50 ஆயிரம் ரூபா தண்டம் விதிக்கப்பட்டது. (த-159)

## கழிவுப் பொருள்கள் இறக்குமதி: தடுக்காதோர் மீது நடவடிக்கை!

கொழும்பு, ஜூலை 29

வெளிநாட்டுக் கழிவுகளின் இறக்குமதியை தடுக்காதவர்களுக்கு எதிராக சட்ட நடவடிக்கை எடுக்கப்படவுள்ளது என்று தெரிவிக்கப்படுகின்றது.

பிரிட்டனில் இருந்து சுமார் 5 ஆயிரம் மெற்றிக் தொன்னுக்கும் அதிகமான கழிவுகள் 241 கொள்கலன்களில் இலங்கைக்கு கொண்டு வரப்பட்டுள்ளன. இந்தக் கழிவுகளின் இறக்குமதியை தடுப்பதற்கு நடவடிக்கை மேற்கொள்ளாத அரச மற்றும் தனியார் நிறுவனங்களின் அதிகாரிகளுக்கு எதிராக கடும் சட்ட நடவடிக்கை மேற்கொள்ளப்படும் என சுற்றுச்சூழல் தொடர்பான மத்திய நிலையத்தின் நிறைவேற்றுப் பணிப்பாளர் ஹேமந்த விதாரணகே தெரிவித்துள்ளார்.

தேசிய சுற்றாடல் சட்டத்தின் கீழ் இது தொடர்பாக வழக்குத் தாக்கல் செய்யப்படும் எனவும் அவர் குறிப்பிட்டுள்ளார். இதனிடையே, கட்டுநாயக்க சுதந்திர வர்த்தக வலயத்தின் களஞ்சிய சாலையில் உள்ள கழிவுகளை ஓகஸ்ட் மாதம் 12ஆம் திகதிக்கு முன்னர் விரைவாக அப்புறப்படுத்துமாறு இலங்கை முதலீட்டுச் சபை ஹெய்லீஸ் பிறிஸ்சோன் நிறுவனத்திற்கு உத்தரவிட்டுள்ளது.

இது தொடர்பாக விரைவான நடவடிக்கை மேற்கொள்ளாவிட்டால் சட்ட நடவடிக்கை மேற்கொள்ளப்படும் எனவும் முதலீட்டுச் சபை தெரிவித்துள்ளது. அதேவேளை அந்தக் கொள்கலன் வைக்கப்பட்ட இடத்திலிருந்து கிருமிகள் பரவாமலிருக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது என்றும் - அதற்கான திட்டத்தை தனியார் நிறுவனம் ஒன்றுக்கு வழங்கவுள்ளதாகவும் ஹேமந்த விதாரணகே தெரிவித்துள்ளார். (எ)

## 'சிறிலங்கன் குளோரி' கப்பலை விரைந்து அகற்றுமாறு பணிப்பு



கொழும்பு, ஜூலை 29

நாட்டில் அண்மையில் நிலவிய சீரற்ற காலநிலை காரணமாக ஹினவட்டுன ருமஸ்வெல பகுதியில் விபத்துக்குள்ளான 'சிறிலங்கன் குளோரி' என்ற சரக்கு கப்பலை குறித்த இடத்தில் இருந்து நீக்குவதற்கான நடவடிக்கைகளை விரைவாக முன்னெடுக்குமாறு சமுத்திரவியல் சூழல் பாதுகாப்பு அதிகார சபை கடற்படைக்கு அறிவித்துள்ளது.

இந்தக் கப்பலை மீண்டும் செயற்பட வைத்து கரைக்கு கொண்டு வருவதென்பது சாத்தியமற்றது. கப்பலை உடைத்து அல்லது பாகங்களாக் பிரித்தால் மாத்திரமே கப்பலை அகற்ற முடியும் என்பதால் இது தொடர்பில் கடற்படைக்கு அறிவிக்கப்பட்டுள்ளது.

கடலில் பாறைகள் இருப்பதால் அதனை இயந்திரத்தின் மூலம் கடல்வழியாக நகர்த்தவும் முடியாது. சுற்றுச்சூழல் பாதுகாப்பு அதிகார சபையின் மேற்பார்வையின் கீழ் இந்தக் கப்பல் அப்புறப்படுத்தப்பட வேண்டும். இது தொடர்பில் சமுத்திரவியல் சூழல் பாதுகாப்பு அதிகார சபையால் அறிவுறுத்தல் வழங்கப்படும்.

எவ்வாறிருப்பினும் இந்த கப்பலை அப்புறப்படுத்துவதற்கு இன்னும் ஒரு மாத காலமேனும் தேவைப்படும். கடற் பாறைகளில் கப்பல் மோதியிருந்தால் அதன் அடிப்பாகத்தில் சிதைவுகள் ஏற்பட்டிருக்கக்கூடும். ஆனால் கப்பலின் உட்புறத்தில் சிதைவுகள் எதுவும் ஏற்படவில்லை. அதனால் அதிலுள்ள எரிபொருள் கசிந்து கடலில் கலப்பதற்கானவாய்ப்புக்கள் குறைவு. சமுத்திரவியல் சூழல் பாதுகாப்பு அதிகார சபை இது தொடர்பில் தொடர்ந்தும் அவதானத்துடன் செயற்பட்டு வந்ததால் எரிபொருள் கடலுடன் கலக்கவிருந்த ஆபத்து தடுக்கப்பட்டுள்ளது. எனவே தற்போது கப்பலை அந்த இடத்திலிருந்து நீக்கும் வேலை மாத்திரமே உள்ளது என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. (எ)

### அடுத்த நாடாளுமன்றத் தேர்தலில்

# தமிழ்த் தேசியக் கூட்டமைப்புக்கு மக்கள் நல்ல பாடம் புகட்டுவர்!

### அந்தக் கட்சி உறுப்பினர் சிறிகாந்தா இப்படித் தெரிவிக்கிறார்

முல்லைத்தீவு, ஜூலை 29

தற்போதைய அரசுக்கு ஆதரவு வழங்கிய தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு, குறிப்பிட்டுக் கூறுமளவுக்கு மக்களுக்கு எதனையும் செய்யவில்லை. அடுத்த நாடாளுமன்றத் தேர்தலில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்புக்கு மக்கள் நல்ல பாடம் புகட்டுவார்கள்.



இவ்வாறு முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினரும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பங்காளிக் கட்சிகளில் ஒன்றான தமிழீழ விடுதலை இயக்கத்தின் செயலருமான என்.சிறிகாந்தா தெரிவித்தார்.

வெலிக்கடையில் படுகொலைசெய்யப்பட்டவர்களின் 36ஆம்ஆண்டு நினைவேந்தல் முல்லைத்தீவு புதுக்குடியிருப்பில் நேற்றுமுன்தினம் நடந்தது. இதில்உரையாற்றும்போதே சிறிகாந்தா மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

கடந்த நான்கு வருடங்களாக நல்லாட்சி அரசை தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு காப்பாற்றி வந்திருக்கின்றது.

தொடர்ந்தும் இன்னும் ஒரு வருடம் தான் நாடாளுமன்றின் ஆயுள் காலம் உள்ளது. இன்னும்ஒருவருடம் தாராளமாக தமிழ்த்தேசியக் கூட்டமைப்பு அரசுக்கு ஆதரவை வழங்கட்டும்.

நாடாளுமன்றஉறுப்பினர் த.சித்தார்த்தன் கூறுகின்றார், "சிங்களப் பெரும்பான்மைக் கட்சிகள், இரண்டும் தீர்வு விடயத்திலே அக்கறையாக இல்லை, விசுவாசமாக இல்லை என்று. என்னுடைய கேள்வியெல்லாம் எதற்காக நாம் தொடர்ந்தும் முண்டு கொடுத்துக் கொண்டிருக்கின்றோம்" என்பதுதான்.

ராணுவ மயமாக்கல் தொடர்ந்தும் இடம்பெற்றுக்கொண்டிருக்கின்றது.

சின்னஞ்சிறிய முகாம்கள் அகற்றப்பட்டிருந்தாலும்கூட, இங்கு போர் முடிவடையும்போது இருந்த இராணுவத்தினரின் எண்ணிக்கை கணிசமான அளவில்கூட குறைக்கப்படவில்லை என எங்களால் திடமாகக் கூற முடியும். வேண்டுமானால் புள்ளிவிவரங்களை பன்னாட்டு ரீதியில் வெளியிடட்டும்.

காணாமல் ஆக்கப்பட்டவர்கள்யாருமே இல்லை என்று தலைமை அமைச்சர் ரணில் விக்கிரமசிங்க பல மாதங்களுக்கு முன்னரே அறிவித்திருந்தார்.

அடுத்தவருடம் நாடாளுமன்றப் பொதுத் தேர்தலிலே மக்கள் தகுந்த ஆணை வழங்குவார்கள். அதற்கு முன்பு அரச தலைவர் தேர்தலிலே தங்களுடைய கருத்தை வெளிப்படுத்துவார்கள். தமிழ் மக்கள் தங்களுடைய பிரதிநிதிகளுக்கு புதிய ஆணை வழங்குவார்கள்.

தமிழ் தேசம் ஒரு தனியான தேசம். இந்த யதார்த்தத்தை சிங்கள தேசம் ஏற்றால் மாத்திரமே ஒரு தீர்வைக் காணமுடியும்.

தமிழ்த்தேசியக்கூட்டமைப்பு எமது மக்கள் சார்ந்து அபிவிருத்தி மற்றும் அரசியல் தீர்வு தொடர்பில் பேசுகின்றதாகச் சொல்கின்றார்கள். "நீங்கள் தாராளமாக அவர்கள் அரசுடன் இணைந்து அமைச்சுப் பதவிகளையும் எடுங்கள். இன்னும் ஒருவருடம்தான். அதற்குள் உங்களால் முடிந்ததைச் செய்யுங்கள். அதற்குப் பின்பு மக்கள் உங்களுக்குச் சரியானதொரு ஆணையை வழங்குவார்கள்" - என்றார். (த-246)

### கூட்டணி குறித்து

## மகிந்தவை மைத்திரி தனியாக சந்திக்கிறார்

கொழும்பு, ஜூலை 29

சிறிலங்கா சுதந்திரக் கட்சிக்கும், சிறிலங்கா பொதுமக்கள் முன்னணிக்கும் இடையில் கூட்டணியை அமைப்பது குறித்து அரச தலைவர் மைத்திரிபால சிறிசேன, எதிர்க்கட்சித் தலைவர் மகிந்த ராஜபக்சவை சந்தித்துப் பேசவுள்ளார்.

அடுத்த சில நாள்களுக்குள் தனியாக இருவரும் சந்தித்து பிரச்சினைகளைத் தீர்த்துக் கொள்வது குறித்து கலந்துரையாடவுள்ளனர்.

இதுகுறித்து கருத்து வெளியிட்டுள்ள சுதந்திரக் கட்சியைச் சேர்ந்த நாடாளுமன்ற உறுப்பினர் மகிந்த அமரவீர, சில சர்ச்சைக்குரிய பிரச்சினைகளைத் தீர்ப்பதற்கு அடுத்த சில நாள்களுக்குள் இரு தலைவர்களும் சந்திக்கவுள்ளனர். புதிய கூட்டணியை அமைப்பதற்காக பொதுமக்கள் முன்னணியால் சமர்ப்பிக்கப்பட்ட வரைவு திட்டத்தை ஆராய நியமிக்கப்பட்ட குழுவின் இறுதி அறிக்கை அரச தலைவர் மைத்திரிபால சிறிசேனவிடம் சமர்ப்பிக்கப்படவுள்ளது. இந்த இறுதி அறிக்கையின் அடிப்படையில், இரு கட்சிகளின் தலைவர்களும் கலந்துரையாடவுள்ளனர், என்றும் அவர் தெரிவித்தார். (ஓ.5)

## மகாபொல நிதி மோசடி: வாக்குமூலம் பெற ஏற்பாடு

கொழும்பு, ஜூலை 29

2015 முதல் 2018 ஆம் ஆண்டு வரையான காலப்பகுதியில் மகாபொல புலமைப்பரிசில் நிதியத்தில் இடம்பெற்ற ஊழல் முறைகேடு தொடர்பில் வாக்குமூலம் வழங்க குறித்த காலப்பகுதியில் அமைச்சுப் பதவிகளை வகித்த இருவரை அழைக்க, கடந்த நான்கு வருடங்களில் அரச நிறுவனங்களில் இடம்பெற்ற ஊழல் முறைகேடுகள் தொடர்பில் ஆராயும் அரச தலைவர் ஆணைக்குழு தீர்மானித்துள்ளது.

அமைச்சர் காமினி ஜயவிக்ரம பெரேரா மற்றும் முன்னாள் அமைச்சர் கலாநிதி சரத் அமுனுகம ஆகியோரே அழைக்கப்படவுள்ளனர்.

மகாபொல புலமைப்பரிசில் நிதியத்தின் பொறுப்பாளர்கள் என்ற வகையில் அவர்களிடம் வாக்குமூலம் பெறப்படவுள்ளது என்று அரச தலைவர் ஆணைக்குழு தெரிவித்துள்ளது.

இதேவேளை- 2015 முதல் 2018 ஆம் ஆண்டு வரையான காலப்பகுதியில் மகாபொல புலமைப்பரிசில் நிதியத்தின் தலைவராக செயற்பட்ட முன்னாள் நீதியரசர் கே. ரீபவன், அரச தலைவர் ஆணைக்குழுவுக்கு எழுத்துமூலவாக்குமூலமொன்றை வழங்க இணக்கம் தெரிவித்துள்ளார். அவரிடம் வாக்குமூலம் பெறுவதற்காக ஆணைக்குழு மூன்று தடவைகள் முயற்சித்ததை தொடர்ந்து எழுத்துமூலம் வாக்குமூலம் வழங்க அவர் இணங்கியுள்ளார்.

2015 முதல் 2018 ஆம் ஆண்டு காலப்பகுதியில் மகபொல புலமைப்பரிசில் நிதியத்துக்கு சொந்தமான காணியொன்றை மாலபே தொழில்நுட்ப நிறுவனத்திற்கு குத்தகைக்கு வழங்கியமை உள்ளிட்ட பல்வேறு முறைகேடுகள் தொடர்பில் கிடைக்கப்பெற்றுள்ள முறைப்பாட்டிற்கு இணங்க இந்த விசாரணை முன்னெடுக்கப்படுகின்றது.

முன்னாள் அமைச்சர் கலாநிதி விஜயதாச ராஜபக்சவால் இந்த முறைப்பாடு முன்வைக்கப்பட்டுள்ளது.

இதேவேளை - மகாபொல புலமைப்பரிசில் நிதியத்துக்கு சொந்தமான காணியொன்றைமாலபேதொழில்நுட்ப நிறுவனத்துக்கு பெற்றுக்கொடுப்பதற்கு ஒப்பந்தமொன்றை தயாரிக்க உதவிய சட்டத்தரணி கடந்த வெள்ளிக்கிழமைஆணைக்குழுவில் முன்னிலையாகி சாட்சி வழங்கினார்.

மகாபொல புலமைப்பரிசில் நிதியத்தின் அப்போதைய தலைவர் முன்னாள் நீதியரசர் கே. சிறிபவன் முன்னிலையில் அந்த ஒப்பந்தத்தில் கைச்சாத்திடப்பட்டது என்று அவர் இதன்போது தெரிவித்துள்ளார். (எ)

## மைத்திரிக்கு எதிரான தீர்மானத்தில் கையெழுத்திட எம்.பிக்கள் தயக்கம்

கொழும்பு, ஜூலை 29

அரச தலைவர் மைத்திரிபால சிறிசேனவுக்கு எதிராகக் குற்றத் தீர்மானம் கொண்டுவர ஐக்கிய தேசியக் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர்கள் தீர்மானித்துள்ள நிலையில், அந்தத் தீர்மானத்தில் கையெழுத்திட நாடாளுமன்ற உறுப்பினர்கள் தயக்கம் காட்டுகின்றனர் என்று பதுளை மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் சமிந்த விஜயசிறி தெரிவித்துள்ளார்.

இந்தக் குற்றத் தீர்மானத்தில் இதுவரை 10 பேர் மட்டுமே கையொப்பமிட்டுள்ளனர் என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

அதேவேளை, கடந்த வருடத்தின் இறுதியில் அரசியல் நெருக்கடிநிலைமையை தோற்றுவித்து நாட்டில் குழப்ப நிலையை உருவாக்கியமை, ஏப்ரல் 21 ஆம் திகதி இடம்பெற்ற குண்டுத் தாக்குதல் சம்பவங்களை தடுத்து நிறுத்த நடவடிக்கை எடுக்காமை ஆகிய காரணங்களை மையப்படுத்தியே அரச தலைவர் மைத்திரிபால சிறிசேனவுக்கு எதிராகக் குற்றத் தீர்மானம் கொண்டுவரப்படவுள்ளது என்று தெரிவிக்கப்பட்டிருந்தது. (எ)

# இறக்குமதியான கழிவுகளால் புற்றுநோய் ஏற்படும் ஆபத்து!

## எச்சரிக்கின்றது அரச மருத்துவ அதிகாரிகள் சங்கம்

கொழும்பு, ஜூலை 29

நாட்டுக்குள் கப்பல் மூலம் கொள்கலன்களில் கொண்டுவரப்பட்டுள்ள கழிவுப்பொருள்களில் மருத்துவக் கழிவுகள் காணப்படின் அது பெரும் ஆபத்தை தோற்றுவிக்கும் என அரச மருத்துவ அதிகாரிகள் சங்கத்தின் செயலர் வைத்தியர் ஹரித அளுத்கே எச்சரித்துள்ளார்.

இது தொடர்பில் கொழும்பு ஊடகம் ஒன்றுக்கு அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது:

சுங்கத்திணைக்களம் சுற்றாடல் பாதுகாப்பு சுகாதார நடவடிக்கைகளில் அக்கறை செலுத்த தவறியுள்ளது. இந்தக் கழிவுப் பொருள்களால் ஏற்படக்கூடிய ஆபத்தை உணர்ந்து சுகாதார நடவடிக்கைகளை கண்காணிக்க அதிகாரியொருவரை நியமிக்க வேண்டும் என்று வேண்டுகோள்விடுக்கின்றோம்.

வெளிநாட்டு கழிவுகள் நாட்டுக்குள் கொண்டுவரப்பட்டுள்ளமை தொடர்பில் தற்போது பெரும்சர்ச்சைமூண்டுள்ளது. தடுத்துவைக்கப்பட்டுள்ள கொள்கலன்களில் மருத்துவக் கழிவுகளும் இருக்கின்றன என்று தகவல்கள் வெளிவருகின்றன. இது தொடர்பில் உரிய தரப்பினர் தகுந்த விசாரணைகளை மேற்கொள்ள வேண்டும். ஏனெனில் அவ்வாறான மருத்துவக் கழிவுகள் காணப்படின் அது மிகவும் ஆபத்தை ஏற்படுத்தக்கூடும். அதனை சாதாரணமான விடயமாக எடுத்துக்கொள்ள முடியாது.

கொண்டுவரப்பட்ட கழிவுப்பொருள்கள் தற்போது துறைமுகத்தில் கொள்கலன்களிலிருந்து வெளியில் அகற்றிய நிலையிலேயே காணப்படுகின்றன. வெயில், மழை போன்றவற்றால் அவை சேதமாவதுடன் சுற்றுச்சூழலுக்கு பங்கம் விளைவிக்கக் கூடிய நிலை காணப்படுகின்றது .

இவற்றால் புற்றுநோய், சுவாசப்பிரச்சினை மற்றும் வாந்திபேதி போன்ற நோய்கள் ஏற்படுவதற்கான வாய்ப்புக்கள் அதிகம் காணப்படுகின்றன. இது தொடர்பில் சுங்கத்திணைக்களம் அதீத கவனம் செலுத்த வேண்டியது அவசியமாகும். இது தொடர்பில் தகுந்த சுகாதார நடைமுறைகள் சுங்கத்திணைக்களத்தில் இல்லை. இவ்வாறான கழிவுப்பொருள்களினால் சுங்கத்திணைக்களத்தில் தொழில் புரிவோருக்கும் பாரதூரமான பாதிப்புக்கள்ஏற்படக்கூடிய ஆபத்து காணப்படுகின்றது.

சுகாதார நடவடிக்கைகள் தொடர்பில் கவனம் செலுத்த வேண்டும் என்று சுங்கத் திணைக்களத்திடம் கேட்டுக் கொண்டுள்ளோம். அரசு நாட்டுக்குப் பெரும் ஆபத்தை ஏற்படுத்தக் கூடிய சிங்கப்பூர் ஒப்பந்தத்தில் திருட்டுத்தனமாக கைச்சாத்திட்டது. அதன்விளைவாகவே இத்தகைய நிலை ஏற்பட்டுள்ளது. அதற்கு எதிராக அரச மருத்துவ அதிகாரிகள் சங்கம் உள்ளிட்ட அமைப்புக்கள் எதிர்ப்பை வெளியிட்டிருந்தன.

சுங்கத் திணைக்களத்தின் தரவுகளின்படி 241 கழிவுப்பொருள் கொள்கலன்கள் நாட்டுக்குள் கொண்டு வரப்பட்டுள்ளன. அவற்றில்130 கொள்கலன்கள் விடுவிக்கப்பட்டுள்ளன. எஞ்சிய 111 கொள்கலன்கள் கொழும்புத் துறைமுகத்தில் தடுத்து வைக்கப்பட்டுள்ளன.

இது தொடர்பில் பொறுப்புக்கூற வேண்டிய தரப்பினர், இந்தப் பிரச்சினையை திசை திருப்ப முயற்சிக்கின்றனர். 2013 ஜூலை 13 ஆம் திகதி வெளியிடப்பட்ட வர்த்தமானி அறிவித்தலைச் சுட்டிக்காட்டி கடந்த அரசின் மீது குற்றஞ் சாட்டுகின்றனர். இந்தவிடயம் தொடர்பில் விசாரணைகளை மேற்கொள்ள வேண்டியது அவசியமாகும்.

அரச தலைவர் இந்த விடயத்தில் கவனம் செலுத்தி பிரச்சினைக்கு தீர்வைப் பெற்றுத்தருவதுடன், அவர் சுற்றாடல் அமைச்சர் என்பதால் இது தொடர்பில் தகுந்த விசாரணைகளை மேற்கொள்ள அரச தலைவர் விசாரணை ஆணைக்குழுவை அமைக்க வேண்டும் - என்றார். (எ)

# மீண்டும் தெரிவுக் குழுவிடம் இராணுவத் தளபதி சாட்சியம்!

கொழும்பு, ஜூலை 29

உயிர்த்த ஞாயிறு தாக்குதல் தொடர்பாக விசாரணை மேற்கொள்ளும் நாடாளுமன்றத் தெரிவுக் குழுவுக்கு இராணுவத் தளபதி மகேஸ் சேனநாயக்க மீண்டும் அழைக்கப்படலாம் என்று தகவல்கள் வெளியாகியுள்ளன.

இவர் ஏற்கனவே தெரிவுக் குழுவில் சாட்சியம் வழங்கியுள்ள நிலையில் - நாளை மறுதினம் புதன்கிழமை மீண்டும் அழைக்கப்படுவார் என தகவல்கள் தெரிவிக்கின்றன. அதேவேளை தலைமை அமைச்சர் மற்றும் பிற அமைச்சர்களையும் ஒகஸ்ட் 6 ஆம் திகதி அழைக்கவும் தெரிவுக்குழு முடிவு செய்துள்ளது என்றும் தெரியவருகின்றது.

தலைமை அமைச்சர் ரணில் விக்கிரமசிங்க, இராஜாங்க அமைச்சர் ருவன் விஜயவர்தன, ரஞ்சித் மத்தும பண்டார, சாகல ரத்நாயக்க ஆகியோர் அழைக்கப்படுவார்கள் என தெரிவுக் குழு தகவல்கள் தெரிவிக்கின்றன. அரச தலைவர் மைத்திரிபால சிறிசேனவும் தெரிவுக்குழு முன் அழைக்கப்படுவார் என்றும் தெரிவுக் குழு வட்டாரங்கள் தெரிவித்தன.

எனினும்இதுவரைதலைமை அமைச்சர் ரணில் விக்கிரமசிங்கவுக்கு தெரிவுக்குழுவால் எவ்வித அழைப்பும் விடுக்கப்படவில்லை என அவரது அலுவலகம் தெரிவித்துள்ளது. (எ)

# மகிந்த தரப்பின் வேட்பாளர் கோத்தாவே என்பது உறுதி!

## கொழும்பு ஊடகம் தகவல்

கொழும்பு, ஜூலை 29

சிறிலங்கா பொதுமக்கள் முன்னணியின் (பெரமுன) அரசதலைவர் வேட்பாளராக முன்னாள் பாதுகாப்பு செயலாளர் கோத்தபாயராஜபக்சநிறுத்தப்படுவது உறுதியாகிவிட்டது எனக் கொழும்பு ஆங்கில ஊடகம் ஒன்று தெரிவித்துள்ளது.

எதிர்வரும் 11ஆம் திகதி இடம்பெறவுள்ள கட்சியின் மாநாட்டில் முன்னாள் அரச தலைவர் மகிந்த ராஜபக்ச கட்சியின் தலைமைப் பொறுப்பை உத்தியோகபூர்வமாக ஏற்றுக்கொள்வார் எனவும், அதன் பின்னர் அவர் அநேகமாக கட்சியின் அரச தலைவர் வேட்பாளரை அறிவிப்பார் எனவும் கூறப்படுகின்றது.

இது தொடர்பாக மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:

இந்த சந்திப்புக்கு முதல் நாள் சிறிலங்கா பொதுமக்கள் முன்னணியின் கட்சி தலைவர்களுக்கு மகிந்த ராஜபக்ச தனது முடிவை தெரிவிப்பார்.

முன்னாள் பாதுகாப்பு செயலர் கோத்தபாய ராஜபக்ச கடந்த புதன்கிழமை சிங்கப்பூரிலிருந்து மருத்துவ சிகிச்சையின் பின்னர் நாடு திரும்பியிருந்தார். அவரை வரவேற்பதற்கான நிகழ்வுகள் எதுவும் இடம்பெறாமலிருப்பதை உறுதி செய்ய மகிந்த ராஜபக்ச விரும்பினார்.

இன்னமும் கோத்தபாய குறித்த அறிவிப்பு உத்தியோகபூர்வமாக வெளியாகாததன் காரணமாகவே அவரது வருகைக்கு அதிக முக்கியத்துவம் வழங்கப்படவில்லை. கோத்தபாய ராஜபக்ச அரச தலைவர் வேட்பாளராக அறிவிக்கப்படும் நிகழ்வை பெருமளவில் முன்னெடுப்பதற்கான நடவடிக்கைகள் இடம்பெறுகின்றன என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. (எ)

# சு. கட்சியுடன் இணைவோர் தொடர்பில் கவலையில்லை

## பெரமுன கூறுகின்றது

கொழும்பு, ஜூலை 29



சிறிலங்கா பொதுமக்கள் முன்னணியில் இருந்து வெளியேறி சுதந்திரக் கட்சியுடன் இணைந்து கொள்பவர்கள் தொடர்பாக தமக்கு கவலையில்லை என்று மகிந்த ஆதரவு நாடாளுமன்ற உறுப்பினர் ரோகித அபேகுணவர்த்தன தெரிவித்துள்ளார்.

கொழும்பில் நேற்றுமுன்தினம் நடத்தப்பட்ட ஊடக சந்திப்பில் கருத்துத் தெரிவித்தபோதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

நாடாளுமன்ற உறுப்பினர் குமார வெல்கம மீண்டும் சுதந்திரக் கட்சியுடன் இணைந்து கொண்டமை எமக்கு எந்தவகையிலும் தாக்கத்தை ஏற்படுத்தவில்லை. சிறிலங்கா சுதந்திரக் கட்சியை நாம் என்றும் எதிரணியாகக் கருதியதே கிடையாது. இந்தக் கட்சியிலிருந்துதான் நாம் அனைவரும் இந்த இடத்துக்கு வந்துள்ளோம்.

சிறிலங்கா சுதந்திரக் கட்சியும், சிறிலங்கா பொதுமக்கள் முன்னணியும் அடுத்த தேர்தலில் கூட்டணி அமைத்துக்கொண்டு களமிறங்க வேண்டும் என்றே நாம் எதிர்ப்பார்க்கிறோம். சிறிலங்கா சுதந்திரக் கட்சிக்கு ஐக்கிய தேசியக் கட்சியுடன் இணைந்துகொள்ள முடியாது. இவை இரண்டும் பாம்பும் கீரியும் போன்றக் கட்சிகள். ஆனால் சுதந்திரக் கட்சியினருக்கு, எம்முடன் இணைவதில் எந்தச் சிக்கலும் இருக்காது என்பதே எமது கருத்தாகும்.

நாடாளுமன்ற உறுப்பினர் குமாரவெல்கம மீண்டும் சுதந்திரக் கட்சிக்கு சென்றமையானது எமக்கு பெரிதாக தாக்கத்தை ஏற்படுத்தவில்லை என்றே கூறவேண்டும். 2015ஆம் ஆண்டு ஜனவரி 9 ஆம் திகதி, மகிந்த ராஜபக்சவின் அரச தலைவர் பதவி இல்லாது போனது. அப்போது, அவர் அலரிமாளிகையிலிருந்து வெளியேறுகையில், அவருடன் 10 வருடங்களாக உடனிருந்த அமைச்சர்கள், புதிய அரசுடன் இணைந்துகொண்டார்கள்.

இவ்வாறு பிரிந்தவர்கள், தற்போது எந்த நிலைப்பாட்டில் இருக்கிறார்கள் என்பதைத்தான் கேட்க விரும்புகிறேன். எமது தரப்பிலிருந்து வெளியேறுபவர்கள் தொடர்பாககவலையடையத்தேவையில்லை- என்றார். (எ)

# மாணிக்க கல் அகழ்வு ஒருவர் கைது

கொழும்பு, ஜூலை 29

பொகவந்தலாவை பகுதியில் அனுமதியின்றி மாணிக்கக் கல் அகழ்வில் ஈடுப்பட்ட குற்றச்சாட்டில் 67 வயதுடைய நபர் பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளார்.

பொகவந்தலாவை கொட்டியாகல பகுதியில் பொலிஸாருக்குக் கிடைத்த தகவலுக்கமைய நேற்றுமுன்தினம் மேற்கொள்ளப்பட்ட சுற்றிவளைப்புக்களின்போதே இவர் கைது செய்யப்பட்டார் என்று பொலிஸ் ஊடகப்பிரிவு தெரிவித்தது.

அவரிடமிருந்து மாணிக்க கல் அகழ்விற்கு பயன்படுத்திய உபகரணங்களும் மீட்கப்பட்டன என்றும் தெரிவிக்கப்பட்டது.

பொகவந்தலாவை பொலிஸார் சந்தேக நபரை பிணையில் செல்ல அனுமதித்ததுடன், நாளை அவரை ஹற்றன் நீதிவான் நீதிமன்றத்தில் முன்னிலையாகுமாறும் அறிவுறுத்தியுள்ளனர். (எ)

# நாடாளுமன்றத் தெரிவுக் குழுவை ஷாபி தொடர்பாக அமையுங்கள்

## அத்துரெலிய ரத்ன தேரர் தெரிவிப்பு

கொழும்பு, ஜூலை 29

குருநாகல் மருத்துவர் மொஹமட் ஷாபி விவகாரம் தொடர்பாக நாடாளுமன்றில் தெரிவுக்குழுவொன்றை அமைத்து விசாரணைகளை மேற்கொள்ள வேண்டும் என நாடாளுமன்ற உறுப்பினர் அத்துரெலிய ரத்ன தேரர் கோரிக்கை விடுத்துள்ளார்.

நேற்றுமுன்தினம் கொழும்பில் ஊடகங்களுக்குக் கருத்துத் தெரிவித்தபோதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது:

இந்த விடயத்தில் பொலிஸார் மீது நம்பிக்கை இல்லை. குருநாகல் மருத்துவமனையில் பணிப்பாளர், 900 தாய்மார்களிடம் வாக்குமூலம் பெற்றுக்கொண்டு அவர்களுக்கு நேர்ந்த பல்வேறு அநீதிகளை தெரிவித்திருந்தார்.

இந்தப் பெண் அல்லது அவரது கணவரின் ஒப்புதல் இன்றி கருக்கலைப்பு செய்வதானது சிறைச்சாலைக்கு செல்லுமளவுக்கு பெரும் குற்றமாகவே கருதப்படுகிறது. இவ்வாறான பல கருக்கலைப்புக்கள் இடம்பெற்றுள்ளன.

இதுதொடர்பாக சாட்சியமளித்த குருநாகல் மருத்துவமனையின் மருத்துவர்கள் பல்வேறு நெருக்கடிக்கு உள்ளாகியுள்ளார்கள். மருத்துவர்கள் மொஹமட் ஷாபியூடாக, சிசேரியன் சத்திரசிகிச்சை செய்துகொண்ட முஸ்லிம் பெண்களுக்கு குழந்தை இருக்கும்போது, சிங்களப் பெண்களுக்கு மட்டும் குழந்தை எவ்வாறு இல்லாது போனது என்பது தான் எமது கேள்வியாக இருக்கிறது.

இதுதொடர்பாக தீர்க்கமான விசாரணைகள் மேற்கொள்ளவேண்டியது அவசியமாக இருக்கிறது. மருத்துவர் ஷாபியின் சொத்துக்கள் தொடர்பாக குற்றப்புலனாய்வுப் பிரிவினர் விசாரணைகளை மேற்கொள்ள வேண்டும். அதை அவர்கள் மேற்கொள்ளத் தவறுவார்களாயின், குருநாகல் பொதுமக்களுடன் இணைந்து நாம் அனைத்து விடயங்களையும் வெளிக்கொண்டுவருவோம் என்பதைக் கூறிக்கொள்கிறேன்.

அவரின் சொத்துக்கள், வருமானம், வங்கிக் கணக்கு குறித்த அனைத்து விவரங்களும் எம்மிடம் இருக்கின்றன. பொலிஸாரும் நீதிமன்றமும் பொதுமக்களுக்கு சட்டத்தை கையில் எடுக்க இடமளிக்கக்கூடாது. இது தொடர்பாக உரிய நடவடிக்கையை எடுக்க அதிகாரிகள் தவறுவார்களாயின், நாம் அனைத்து விவரங்களையும் அறிக்கையாகத் தயார் செய்து வெளியிடுவோம். இதனை எவராலும் தடுக்க முடியாது.

இதுதொடர்பாக நாடாளுமன்றில் சிறப்பு தெரிவுக் குழுவொன்றை அமைக்க வேண்டும் என்றும் நாம் கேட்டுக்கொள்கிறோம் - என்றார். (எ)

# நாட்டின் அடுத்த தலைவரை தெற்கு மக்கள் தீர்மானிப்பர்

## விமல் வீரவன்ச தெரிவிப்பு



கொழும்பு, ஜூலை 29

இலங்கையின் அடுத்த அரச தலைவரை கம்பஹா, குருநாகல், கண்டி மற்றும் கொழும்பு வாழ் மக்களே தீர்மானிப்பார்கள். இந்த நான்கு மாவட்டங்களிலும் வெற்றி பெறும் நபரே நாட்டின் அடுத்த அரச தலைவராக ஆட்சியமைப்பார்.

இவ்வாறு மகிந்த ஆதரவு நாடாளுமன்ற உறுப்பினர் விமல் வீரவசன்ச தெரிவித்துள்ளார்.

கொழும்பில் இடம்பெற்ற நிகழ்வொன்றில் கலந்துகொண்டு உரையாற்றும்போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

அரச தலைவர் தேர்தல்தான் தற்போது எமக்கு இருக்கும் ஒரே துருப்பாக காணப்படுகிறது. நாம் இந்த முறையும் தவற விடுவோமானால் நிச்சயமாக நாட்டுக்கும், நாட்டு மக்களுக்காகவும் மன்னிப்புதான் கோரவேண்டும்.

இந்த வெற்றி எமக்கு வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த வெற்றியாகவே கருதப்படுகிறது. அதற்காக நாம் ஆயத்தமாகிக்கொள்ள வேண்டும். கடந்த அரச தலைவர் தேர்தலின்போது எமக்கு கிழக்கு மாகாணத்தின் முஸ்லிம் வாக்குகள் 5 வீதத்தால் குறைவடைந்தன. ஆனால், அதனால் நாம் தோல்வியடையவில்லை. மாறாக கம்பஹா, குருநாகல் மாவட்டங்களில் குறைவான வாக்குகளை பெற்ற காரணத்தாலேயே நாம் தோல்வியடைந்திருந்தோம்.

இலங்கை வரலாற்றை எடுத்துக் கொண்டால், கம்பஹா, குருநாகல், கண்டி மற்றும் கொழும்பில் ஒரு வேட்பாளர் வெற்றி பெறுவாராயின், அவர்தான் அடுத்த அரச தலைவராக நாட்டை ஆட்சி செய்வார். எமது தற்போதைய இலக்கு இந்த மாவட்டங்களில் சிறப்பாக வெற்றி பெறவேண்டும் என்பதை நோக்கியே நகர்ந்துகொண்டிருக்கிறது. - என்றார். (எ)

# அரசமைப்பு உருவாக்கத்தில் முன்னேற்றம் எதுவும் இல்லை

## ஜயம்பதி விக்ரமரத்ன தெரிவிப்பு



கொழும்பு, ஜூலை 29

புதிய அரசமைப்பு உருவாக்கம் தொடர்பாக நிபுணர் குழுவின் அறிக்கை அரசமைப்பு பேரவையில் சமர்ப்பிக்கப்பட்ட பின்னர் எந்த முன்னேற்றமும் ஏற்படவில்லை என வழிநடத்தல் குழு உறுப்பினர் ஜயம்பதி விக்ரமரத்ன தெரிவித்துள்ளார்.

2016 ஆம் ஆண்டு உருவாக்கப்பட்ட வழிநடத்தல் குழுவின் அறிக்கை 2017 செப்ரெம்பர் மாதம் சமர்ப்பிக்கப்பட்டது. நிபுணர்கள் குழுவின் அறிக்கை 2019 ஜனவரி மாதம் சமர்ப்பிக்கப்பட்டது. இதன் பின்னர் வழிநடத்தல் குழு இறுதியாக 2019 ஜனவரியிலும் அரசமைப்புப் பேரவை இறுதியாக 11 ஜனவரி 2019 அன்று கூடி இருந்தன.

இந்த நிலையில் புதிய அரசமைப்புத் தொடர்பாகத் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினால் நாடாளுமன்றத்தில் தனிநபர் தீர்மானம் ஒன்று கொண்டுவரப்பட்டு இரண்டு நாள் விவாதம் நடைபெற்றுள்ள நிலையில் அது தொடர்பாக ஊடகம் ஒன்றுக்குக் கருத்து தெரிவித்தபோதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அவர் தெரிவித்துள்ளதாவது:

அனைத்து நகர்வுகளும் சரியான திசையில் சென்றிருக்குமாயின், நிபுணர் குழுவின் அறிக்கை தொடர்பாக அரசமைப்புப் பேரவையில் விவாதம் நடைபெற்றிருக்கும். விவாதத்தைத் தொடர்ந்து, புதிய அரசமைப்பின் வரைவை உருவாக்கி அதை முன்வைப்பது வழிநடத்தல் குழுவின் முக்கிய பணியாக இருந்திருக்கும்.

வழிநடத்தல் குழுவிற்கான நிபுணர் குழு தயாரித்த அறிக்கையை அரசமைப்புப் பேரவையில் கடந்த ஜனவரி மாதம் தலைமை அமைச்சர் ரணில் முன்வைத்தார். அப்போதைய சூழலில் தேர்தல் தொடர்பான பரபரப்புக்கள் காணப்பட்டமையால் அது தொடர்பான விவாதத்துக்கான நேரம் ஒதுக்கப்படவில்லை. அரசமைப்புச் செயன்முறையிலும் முன்னேற்றம் காணப்படவில்லை - என்றார்

அதுவேளை, புதிய அரசமைப்பை உருவாக்கும் செயல்முறையை முன்னோக்கி கொண்டு செல்ல வேண்டும் என தெரிவித்து தமிழ்த் தேசியக் கூட்டமைப்பால் கடந்த வாரம் நாடாளுமன்றத்தில் ஒரு தனிநபர் தீர்மானம் கொண்டுவரப்பட்டு இரண்டு நாள்கள் விவாதமும் இடம்பெற்றது.

இந்தத் தீர்மானத்தைக் கொண்டுவந்து உரையாற்றிய இரா. சம்பந்தன், புதிய அரசியலமைப்பு தற்போதைய நாடாளுமன்றத்தால் தயாரிக்கப்பட வேண்டும் என்றும் - அவ்வாறு செய்யத் தவறினால் அரசாங்கத்திற்கு கடுமையான விளைவுகள் ஏற்படும் என்று எச்சரித்திருந்தார்.

புதிய அரசமைப்பை உருவாக்குவதற்கான செயல்முறையை முன்னோக்கி நகர்த்துவதில் உறுதியாக உள்ளோம் என்று ரணில் அரசு கூறிவந்தபோதிலும் நடைமுறையில் அதற்கு தேவையான முயற்சிகள் மேற்கொள்ளப்படாத நிலையிலேயே தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு குறித்த தனிநபர் தீர்மானத்தை நாடாளுமன்றத்தில் கொண்டு வந்து பன்னாடுகளின் அவதானத்தைப் பெற்றுக்கொள்ள முயற்சிக்கின்றது என்று அரசியல் அவதானிகள் கருத்துத் தெரிவிக்கின்றனர். (எ)

# இளம் தலைமுறையினரில் ஒருவர் அரச தலைவராவதே எதிர்பார்ப்பு!

## அமைச்சர் ருவன் தெரிவிப்பு

கொழும்பு, ஜூலை 29

இந்த நாட்டை மிகச் சிறந்த முறையில் கொண்டு செல்வதற்கு, இளம் தலைமுறையினரில் ஒருவரே அரச தலைவராக வரவேண்டுமென்ற எண்ணம் அனைவரது மனதிலும் உள்ளது என்று அமைச்சர் ருவன் விஜேவர்தன தெரிவித்துள்ளார்.

கொழும்பில் இடம்பெற்ற நிகழ்வொன்றில் கலந்துகொண்டு கருத்துத் தெரிவிக்கும்போதே அமைச்சர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது:

ஐக்கிய தேசியக் கட்சி இன்னும் ஜனநாயகம் நிறைந்த கட்சியென்றே நான் நினைக்கின்றேன். இந்தக் கட்சிகளுக்குள் பல பிரிவுகள் தற்போது காணப்படுகின்றன. அதில் ஒரு பிரிவினர் தலைமை அமைச்சர் ரணில் விக்கிரமசிங்கவே எதிர்வரும் அரச தலைவர் தேர்தலில் வேட்பாளராகப் போட்டியிட வேண்டும் என்று நினைக்கின்றனர்.

அதேபோன்று மற்றும் சிலர், அமைச்சர் சஜித் பிரேமதாசவையே வேட்பாளராக நிறுத்த வேண்டுமென்று கருதுகின்றனர். இந்த விடயத்தில் நாம் முதலில் கலந்துரையாடலில் ஈடுபட்டு, அதனூடாகவே வேட்பாளர் யார் என்ற இறுதித் தீர்மானத்தை எடுக்கவுள்ளோம். எதிர்வரும் அரச தலைவர் தேர்தலில் எவ்வாறு வெற்றியடைவது என்பது குறித்த கலந்துரையாடலிலும் ஈடுபடவுள்ளோம்.

இதேவேளை- ஐக்கிய தேசியக் கட்சி, எதிர்வரும் ஒகஸ்ட் 5 ஆம் திகதி ஏனைய பல கட்சிகளுடன் இணைந்து புரிந்துணர்வு ஒப்பந்தத்தில் கையெழுத்திடுகின்றமையானது, அமைச்சர் சஜித் பிரேமதாசவுக்கு எதிரான நடவடிக்கை அல்ல. - என்றார். (எ)

# லக்ஸ்மன் கதிர்காமர் கொலை: குழப்பத்தில் புலனாய்வாளர்கள்

கொழும்பு, ஜூலை 29

முன்னாள் அயலுறவுத் துறை அமைச்சர் லக்ஸ்மன் கதிர்காமர் படுகொலை தொடர்பாக, ஜேர்மனியில் கைது செய்யப்பட்டுள்ள நபர் தொடர்பாக இலங்கைப் புலனாய்வுப் பிரிவுகள் குழப்பமடைந்துள்ளன என்று தகவல்கள் வெளியாகியுள்ளன.

2005ஆம் ஆண்டு கொழும்பில் லக்ஸ்மன் கதிர்காமர் படுகொலை செய்யப்பட்டிருந்தார். இந்தப் படுகொலை தொடர்பாக, கொழும்பு மேல்நீதிமன்றத்தில் சட்டமா அதிபர் திணைக்களத்தால் ஆறு பேருக்கு எதிராக வழக்குத் தாக்கல் செய்யப்பட்டிருந்தது.

விடுதலைப்புலிகளின் தலைவர் வே. பிரபாகரன், புலனாய்வுத்துறைப் பொறுப்பாளர் பொட்டுஅம்மான், புலனாய்வுத்துறையை சேர்ந்த சாள்ஸ் மாஸ்டர், மணிமேகலை ஆகியோருடன், முத்தையா சகாதேவன், இசிதர் ஆரோக்கியநாதன் ஆகியோருக்கு எதிராகவே வழக்குத் தாக்கல் செய்யப்பட்டிருந்தது.

இந்த வழக்கில் இருந்து இசிதர் ஆரோக்கியநாதன் விடுவிக்கப்பட்டிருந்த நிலையில், சகாதேவன் கடந்தமாதம் சிறையில் இருந்தபோது உயிரிழந்தார். ஏனைய நான்கு சந்தேகநபர்களும் இறந்துவிட்டதால், இந்த வழக்கை முடிவுக்குக் கொண்டு வரப்போவதாக மேல்நீதிமன்றம் கூறியிருந்தது.

இந்த நிலையில் லக்ஸ்மன் கதிர்காமர் கொலை வழக்கில் குற்றம்சாட்டப்பட்டவர்களின் பட்டியலில் இல்லாத ஒருவரே, கடந்த ஜனவரி மாதம், ஜேர்மனிப் பொலிஸாரால் கைது செய்யப்பட்டு வழக்குத் தொடரப்பட்டுள்ளது. 40 வயதுடைய, நவநீதன் என அழைக்கப்படுபவருக்கு எதிராகவே ஜேர்மனி சட்ட அதிகாரிகளால் ஸ்ரூட்காட் நீதிமன்றத்தில் வழக்குத்தொடரப்பட்டுள்ளது.

எனினும், ஜேர்மனியின் தனியுரிமை சட்டங்களின் அடிப்படையில் இவரது முழுப்பெயர் வெளியிடப்படவில்லை. அதனால் இலங்கை புலனாய்வு அதிகாரிகள் குழப்பமடைந்துள்ளனர். இலங்கைப் புலனாய்வுப் பிரிவுகளிடம் உள்ள பட்டியலில் நவநீதன் என்ற ஒரே ஒரு நபர் மாத்திரமே உள்ளார். ஜேர்மனியில் கைது செய்யப்பட்டுள்ளவர் அவரா என்பதை புலனாய்வாளர்களால் உறுதிப்படுத்த முடியவில்லை என்று கூறப்படுகின்றது. ஜேர்மனியில் கைது செய்யப்பட்டவர் கதிர்காமர் கொலைக்கு உதவியாக இருந்தவர் என்றும், தடைசெய்யப்பட்ட அமைப்பான விடுதலைப் புலிகள் இயக்கத்தில் 2000இல் இருந்து 2009 வரை உறுப்பினராக இருந்தார் என்றும், இறுதிப்போரின்போது, இலங்கையை விட்டு புலிகளின் முக்கிய தலைவர்கள் வெளியேறிச் செல்ல உதவினார் என்றும் குற்றச்சாட்டுகள் கூறப்பட்டுள்ளன.

சந்தேகநபர் 2012 ஆம் ஆண்டு ஜேர்மனிக்கு வந்திருப்பதாக அங்குள்ள இலங்கைத் தூதரக அதிகாரிகள் தகவல் வெளியிட்டுள்ளனர். அதேவேளை, விடுதலைப் புலிகள் இயக்க சந்தேக நபருக்கு எதிரான இந்த வழக்கை, உன்னிப்பாக கண்காணித்துக் கொண்டிருப்பதாக அயலுறவுத்துறை அமைச்சு தெரிவித்துள்ளது. இதுதொடர்பாக கருத்து வெளியிட்ட வெளிவிவகார அமைச்சின் பேச்சாளர் ஒருவர், இந்த வழக்கிற்குத் தேவையான சான்றுகள் மற்றும் ஏனைய ஆதாரங்களை இராஜதந்திர வழிமுறைகளின் ஊடாக வழங்கியுள்ளோம் என்று- கூறியுள்ளார். (எ)

# சபுகஸ்கந்த சுத்திகரிப்பு நிலையம் 17 பில். ரூபாவில் தரமுயர்த்தப்படும்

## சுனில் ஹெட்டியாராச்சி தெரிவிப்பு

கொழும்பு, ஜூலை 29

சபுகஸ்கந்த எண்ணெய் சுத்திகரிப்பு நிறுவனத்தை நவீனமயப்படுத்தும், பல பில்லியன் ரூபா பெறுமதியான ஒப்பந்தம், இலங்கை அரசால் அமெரிக்க நிறுவனம் ஒன்றுக்கு வழங்கப்பட்டுள்ளது என்று பெற்றோலிய வளங்கள் அமைச்சின் செயலர் சுனில் ஹெட்டியாராச்சி தெரிவித்துள்ளார்.

17 பில்லியன் ரூபா (100 மில்லியன் டொலர்) பெறுமதியான இந்த ஒப்பந்தத்தின் மூலம் தற்போது நாளொன்றுக்கு 50 ஆயிரம் பீப்பாய் என சுத்திகரிப்பு திறன் கொண்டுள்ள, சபுகஸ்கந்த எண்ணெய் சுத்திகரிப்பு நிறுவனம், நாளொன்றுக்கு 70 ஆயிரம் பீப்பாய் சுத்திகரிப்பு திறன் கொண்டதாக அவற்றின் இயந்திரங்கள் தரமுயர்த்தப்படவுள்ளன. அனைத்துலக அளவில் கேள்விப் பத்திரம் கோரப்பட்ட நிலையில், அமெரிக்க நிறுவனம் மாத்திரமே அதனை ஏலத்தில் எடுத்துள்ளது என்றும் அவர் கூறினார்.

அதற்கு இரண்டு வாரங்களுக்குள் அமைச்சரவையின் அனுமதி கோரப்படவுள்ளது.

சபுகஸ்கந்த எண்ணெய் சுத்திகரிப்பு நிறுவனத்தை நவீனமயப்படுத்துவதன் மூலம், இலங்கையின் எண்ணெய் இறக்குமதியை 70 வீதத்தில் இருந்து 50 வீதமாக குறைக்க முடியும். தற்போது நாட்டின் எண்ணெய் தேவையில் 30 வீதத்தை மாத்திரமே, சபுகஸ்கந்த நிறுவனம் சுத்திகரித்து வழங்குகிறது. இது நவீனமயப்படுத்தப்பட்ட பின்னர், மசகு எண்ணெயை பல்வேறு வகையில் சுத்திகரிக்கும். தற்போது, இரண்டு வகையாக மாத்திரமே சுத்திகரிக்கப்படுகிறது. (எ)

# குடாநாட்டை மட்டும் பார்ப்பதால் எல்லை உள்நோக்கி வருகின்றது!

## வடக்கு மாகாண சபை முன்னாள் அமைச்சர் விசனம்

வவுனியா, ஜூலை 29

எமது எல்லையோரங்கள் பற்றிய கவலை இல்லாமல் குடாநாட்டை மட்டும் பார்ப்பதாலேயே எல்லைகள் இன்று எம்மை நோக்கி வருகின்றன என்று வடக்கு மாகாண முன்னாள் விவசாய அமைச்சர் க. சிவனேசன் தெரிவித்தார்.

வெலிக்கடைச் சிறையில் படுகாலை செய்யப்பட்ட மருத்துவர் ராஜசுந்தரத்தின் நினைவுதினம் வவுனியா கோவில் குளத்தில் நேற்றுமுன்தின் நடைபெற்றது. அதில் கலந்து கொண்ட அவர் மேலும் தெரிவித்ததாவது:

அரசு அண்மையில் வெளியிட்ட கருத்தைப் பார்த்து ஆச்சரியமுற்றேன். கறுப்பு ஜூலையை எவ்வாறு வெள்ளை ஜூலையாக மாற்றுவது என்பதற்கான திட்டத்தை வைத்திருப்பதாகவே அந்தத் தகவல் காணப்பட்டது.

தமிழ் மக்களுக்கு அன்று இருந்த பிரச்சினைகளைவிட இன்று அதிகமாக உள்ளன. கறுப்பு ஜூலை திட்டமிடப்பட்ட ஒரு இனப்படுகொலை என்பது எல்லோராலும் ஏற்றுக்கொள்ளப்பட்டிருந்தது.

கறுப்பு ஜூலையில் இடம்பெற்ற இனப் படுகொலைக்குப் பின்னரான நிலைமைதான் எங்களின் இந்த நிலைமைக்குக் காரணம் என்று எண்ணத் தோன்றுகின்றது.

'அடிக்கு அடி பழிக்குப் பழி' என்ற ஒரேயொரு நோக்கத்தைக் கொண்டு பல்லாயிரக்கணக்கான இளைஞர்கள் இந்தப் போராட்டத்திலே இணைந்து கொண்டார்கள். அவ்வாறு வந்தவர்களில் ஆயிரக்கணக்கானவர்கள் வந்த வேகத்திலேயே மீண்டும் தங்களின் சொந்த வாழ்க்கைக்கே சென்றுவிட்டனர்.

ராஜசுந்தரம் வெலிக்கடையில் கொலை செய்யப்படும் நிலையில் இருக்காத போதிலும் அங்கிருந்த போராளிகள் கொலை செய்யப்படப்போவதனை அறிந்து நியாயம் கேட்கச்சென்ற போதே அவரும் கொலை செய்யப்பட்டார் என்று அறியமுடிகின்றது.

ராஜசுந்தரத்துடன் இருந்த சிலர் தப்பியிருந்தனர். அவர்களில் டேவிட் ஐயாவும் ஒருவர். அவர் எம்முடன் இணைந்து பயணித்தபோது எங்களது முகாம்களுக்கு வந்து அரசியல் வகுப்புக்களை நடத்தியிருந்தார். அவர் காந்தியத்தை நம்பிச் சென்றிருந்தவர். எள்ளளவும் காந்திய சிந்தனையில் இருந்து விலகாதவர். ஆனால் அவரும் அந்த சம்பவங்களைப் பார்த்த பின்னர் எந்தளவுக்கு மாறியிருந்தார் என்பதனை அனைவரும் அறிந்துகொள்ள வேண்டும்.



இதற்குமப்பால் இலட்சக்கணக்கான மக்களும் போராளிகளும் கொல்லப்பட்டுள்ளனர். இந்த நிலையிலும் கூட நாங்கள் நாங்களாக உள்ளோமா என்ற கேள்வி எங்களுக்குள் எழுகின்றது. இன்றும்கூட ஒற்றுமையை நோக்கிய பாதையில் செல்லச் சிந்திக்கின்றோமா என்ற கேள்வி எங்களுக்கு எழுகின்றது.

எங்களுடைய பிரச்சினையை எங்களின் சொந்தக்கரங்களில் எடுக்க வேண்டும். எங்களின் தலைவிதியை எங்களாலேயே தீர்த்துக்கொள்ளப்பட வேண்டுமேயொழிய எங்களுக்காகப் பன்னாடு வருகின்றது. இந்தியா ஆதரவளிக்கின்றது. இங்குள்ள பேரினவாதக் கட்சிகள் இணைந்துவிட்டால் உரிமையைக் கொடுத்துவிடுவார்கள் என்று கற்பனை காண்பதில் எந்தப் பயனும் இல்லை.

மாகாண சபையில் பல தடவைகள் எல்லையோரக் குடியேற்றங்களின் அவசியத்தைக் கூறியிருந்தேன். எல்லைகளில் நாம் குடியேற்றாவிட்டால் எல்லைகள் எம்மை நோக்கி வரும் என்று தெரிவித்திருந்தேன். ஆனால் அவர்களுக்கு அது விளங்கவில்லை. அவர்கள் மணலாறு என்றால் சின்ன இடமாகப் பார்க்கின்றனர். குடாநாட்டை விட இரண்டு மடங்கு பெரிய இடம் மணலாறு என்பதனைத் தெரிவித்தேன். ஆனால் இன்று பலருக்கு குடாநாடு மட்டும்தான் பெரிய விடயம். அதற்கு அப்பால் இல்லை. இதுவே இன்று இங்குள்ள மிகப்பெரிய பிரச்சினை.

அன்று ராஜசுந்தரத்தினால் திட்டமிட்டு எல்லையோரத்தில் ஏற்படுத்திய குடியேற்றங்களே இன்று எம்மைப் பாதுகாத்துக்கொண்டிருக்கின்றன. என்பதனை எவரும் உணர்வதாக இல்லை. ஆனால் உணர வேண்டிய தேவை உள்ளது - என்றார்.

வெலிக்கடை படுகொலை நிகழ்வு வவுனியா நகரசபை உறுப்பினர் ச.மோகன் தலைமையில் கோவில்குளத்தில் அமைந்துள்ள உமாமகேஸ்வரன் நூலகத்தில் நடைபெற்றது. வெலிக்கடைச் சிறைச்சாலையில் படுகொலை செய்யப்பட்ட காந்தீயம் அமைப்பின் செயலர் மருத்துவர் சோ.ராஜசுந்தரம் உட்பட ஏனைய இனப்பற்றாளர்களையும் இதன் போது நினைவு கூரப்பட்டது. வடக்கு மாகாண சபை முன்னாள் உறுப்பினர் ஜி.ரி.லிங்கநாதன், வவுனியா நகரசபை உறுப்பினர்கள், முல்லைத்தீவு மாவட்டத்தின் கரைதுறைப் பற்று தவிசாளர் தவராசா, தமிழீழ மக்கள் விடுதலைக் கழக உறுப்பினர்கள், பொதுமக்கள் எனப் பலரும் கலந்து கொண்டிருந்தனர்.

வவுனியாவில் புளொட் அமைப்பினரால் 36 வருடங்களின் பின்னர் முதற்றடவையாக வெலிக்கடைச் சிறைச்சாலையின் படுகொலை நிகழ்வுகள் நேற்றுமுன்தினம் கடைப்பிடிக்கப்பட்டது என்று தெரிவிக்கப்பட்டது.

(த-110)

# கொஹுவலையில் துப்பாக்கிச் சூடு: ஒருவர் சாவு; மற்றொருவர் படுகாயம்

கொழும்பு, ஜூலை 29

கொஹுவல ஜம்புகஸ் முல்ல மாவத்தையில் ஜீப் ஒன்றில் பயணித்துக் கொண்டிருந்த இருவர் மீது, அடையாளம் தெரியாதவர்கள் மேற்கொண்ட துப்பாக்கிச் சூட்டில் ஒருவர் உயிரிழந்துள்ளார்.

நேற்று அதிகாலை 1.10 மணியளவில் இடம்பெற்ற இந்தச் சம்பவத்தில் படுகாயமடைந்த இருவர் களுபோவில மருத்துவமனையில் சேர்க்கப்பட்ட பின்னர், அந்த ஜீப் வாகனத்தின் சாரதி உயிரிழந்துள்ளார் என்று பொலிஸ் ஊடகப் பிரிவு தெரிவித்துள்ளது.

38 வயதுடைய மாதிவலை பிரதேசத்தைச் சேர்ந்த 38 வயதுடைய ரணவக்க சுசில் ருவன் பெரேரா என்பவரே உயிரிழந்துள்ளார் என்று பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

படுகாயமடைந்த 40 வயதுடைய மற்றைய நபர், களுபோவில மருத்துவமனையில் சேர்க்கப்பட்டு மேலதிக சிகிச்சைக்காக கொழும்பு தேசிய மருத்துவமனைக்கு மாற்றப்பட்டுள்ளார்.

இந்தச் சம்பவத்துடன் தொடர்புடைய சந்தேகநபர்களைக் கைதுசெய்வதற்கான விசாரணைகளை கொஹுவலப் பொலிஸார் முன்னெடுத்துள்ளனர்.

(எ-22)

# பெரமுனவை விட்டு விலகி சு.கவுடன் சேரும் வெல்கம

கொழும்பு, ஜூலை 29



மகிந்தவுடன் இணைந்து செயற்பட்டு வந்த குமார வெல்கம அவ்வணியிலிருந்து விலகி சுதந்திரக்கட்சியின் நிகழ்வுகளில் பங்கேற்க ஆரம்பித்துள்ளார். நேற்றுமுன்தினம் கொலன்னாவையில் நடைபெற்ற சுதந்திரக்கட்சியின் கிளைத் திறப்பு விழாவிலும் அவர் அரசதலைவர் மைத்திரிபால சிறிசேனவுடன் இணைந்து பங்கேற்றிருந்தார்.

அதேவேளை, பொதுஜன முன்னணியின் முதலாவது தேசிய மாநாடு எதிர்வரும் மாதம் 11ஆம் திகதி நடைபெறவுள்ள நிலையில் அதில் பங்கேற்கப்போவதில்லை என்றும் நாடாளுமன்ற உறுப்பினர் குமார வெல்கம தெரிவித்துள்ளார்.

2015ஆம் ஆண்டு ஜனாதிபதி தேர்தல் நிறைவடைந்த பின்னர் நடைபெற்ற முதலாவது சுதந்திரக்கட்சியின் மத்திய குழுக் கூட்டத்தில் ஐக்கிய தேசியக் கட்சியுடன் கூட்டுஅரசைஅமைக்க அரச தலைவர் மைத்திரிபால சிறிசேன முடிவு எடுத்தபோது அதற்குக் கடுமையான எதிர்ப்புக்களைத் தெரிவித்து அக்கூட்டத்திலிருந்து குமார வெல்கம வெளியேறியிருந்தார்.

அதைத்தொடர்ந்து ஏற்கனவே நெருக்கமான உறவுகளைக் கொண்டிருந்த முன்னாள் அரச தலைவரும், எதிர்க்கட்சித்தலைவருமான மகிந்த ராஜபக்சவுடன் இணைந்து செயற்பட குமார வெல்கம ஆரம்பித்திருந்தார்.

தற்போது அரச தலைவர் வேட்பாளராக முன்னாள் பாதுகாப்புச் செயலர் கோத்தாபய ராஜபக்சவின் பெயர் முன்மொழியப்பட்டதையடுத்து கடுமையான அதிருப்திகளை குமார வெல்கம பகிரங்கமாக வெளியிட ஆரம்பித்திருந்தார். அதனால் மகிந்த அணியினருக்கும் அவருக்கும் இடையில் முரண்பாடுகள் ஏற்பட ஆரம்பித்திருந்தன.

ஏனைய உறுப்பினர்களின் முறைப்பாடுகளுக்கு அமைவாகக் கட்சி விடயங்களை பகிரங்கமாக விமர்சிப்பதைத் தவிர்க்குமாறு மகிந்த ராஜபக்ச குமார வெல்கமவைக் கோரியிருந்தார். இருப்பினும் தான் பொதுஜன முன்னணியின் உறுப்பினர் இல்லை என்ற வாதத்தை முன்னிலைப்படுத்திய குமாரவெல்கம தனது கருத்துக்களைத் தொடர்ந்தும் தெரிவித்து வந்தார். சுதந்திரக்கட்சியின் தலைமையகத்தில் நடைபெற்ற சமய நிகழ்விலும் திடீரெனக் கலந்து கொண்டார்.

எதிர்வரும் மாதம் 11ஆம் திகதி நடைபெறவுள்ள பொதுஜன முன்னணியின் தேசிய மாநாட்டில் மகிந்த ராஜபக்ச உத்தியோக பூர்வமாக அக்கட்சியின் தலைமைப் பொறுப்பை ஏற்கவுள்ள நிலையில், அந்தமாநாட்டில் பங்கேற்பது தொடர்பில் கருத்து வெளியிட்ட குமார வெல்கம, நான் சுதந்திரக் கட்சியின் உறுப்பினராகவே தற்போதும் உள்ளேன். நான் பொதுஜன முன்னணியின் உறுப்புரிமையையும் பெற்றிருக்கவில்லை. ஆகவே பிறிதொரு கட்சியின் மாநாட்டில் பங்கு பற்ற வேண்டிய அவசியம் இல்லைஎன்றுகூறியுள்ளார். அதேநேரம், சுதந்திரக்கட்சியுடன் தொடர்ந்தும் செயற்படுவீர்களா? என வினவிய போது, மத்திய குழுக் கூட்டத்தில் பங்கேற்பதற்கான அழைப்பு இன்னமும் எனக்கு விடுக்கப்படவில்லை. ஆனால் கட்சியின் உறுப்பினராக நான் தொடர்ந்தும் செயற்படுவேன் - என்றார்.

அதேவேளை, மகிந்த ராஜபக்சவையும் விரைவில் குமாரவெல்கம தனித்து சந்தித்துப் பேச்சில் ஈடுபடவுள்ளார் என்றும் அறிய முடிகின்றது.

(எ)

# அரசியலில் பெண்கள் பங்கேற்க வேண்டும்

## பழனி திகாம்பரம் தெரிவிப்பு

கொழும்பு, ஜூலை 29



அரசியலில் பெண்களின் பிரதிநிதித்துவமும், பங்கேற்றலும் அதிகரிக்கப்பட வேண்டும் என்று அமைச்சர் பழனி திகாம்பரம் தெரிவித்தார்.

கண்டியில் நேற்றுமுன்தினம் நடந்த நிகழ்வொன்றில் உரையாற்றும்போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

மக்களிடையே மாற்றத்தைக் கொண்டுவர வேண்டுமாகவிருந்தால் பெண்கள் அதிகமாக அரசியலில் கால் பதிக்க வேண்டும்.

மக்களின் கஷ்டங்களும் ஆண்களைவிடப் பெண்களுக்கே அதிகம் தெரியும் என்பதால், பெண்களில் அதிகமானோர் அரசியலில் களமிறங்கினால் மாற்றத்தை உருவாக்க முடியும் - என்றார்.

(எ)

# ஓகஸ்ட் 11க்கு முன்னர் சு.க - பெரமுன பேச்சு

கொழும்பு, ஜூலை 29




சிறிலங்கா பொதுமக்கள் முன்னணியுடன் (பெரமுன) 10 அரசியல் கட்சிகள் புரிந்துணர்வு ஒப் பந்தத்தில் கைச்சாத்திட்டுள்ளமை சிறிலங்கா சுதந்திரக் கட்சி, சிறிலங்கா பொதுமக்கள் முன்னணி ஆகியவற்றின் கூட்டணிக்குப் பாதகமாக அமையாது என்று நாடாளுமன்ற உறுப்பினர் மகிந்த அமரவீர தெரிவித்துள்ளார்.

இது தொடர்பாக அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது:

அரச தலைவர் மைத்திரிபால சிறிசேனவும், எதிர்க்கட்சித் தலைவர் மகிந்த ராஜபக்சவும் வெகு விரைவில் சந்தித்துக் கலந்துரையாடுவார்கள். ஓகஸ்ட் 11ஆம் திகதி நடைபெறவுள்ள சிறிலங்கா பொதுமக்கள் முன்னணியின் மாநாட்டில் அதன் அரச தலைவர் வேட்பாளர் அறிவிக்கப்படுவார். அதற்கு முன்னதாக சிறிலங்கா சுதந்திரக் கட்சியுடன் அடுத்த கட்டப் பேச்சு நடைபெறும். அதில் தீர்க்கமான முடிவொன்று எடுக்கப்படும் - என்றார்.

(எ)



## வவுனியா வளாகத்தில் தீ

வவுனியா, ஜூலை 29
யாழ்ப்பாணப் பல்கலைக் கழகத்தின் வவுனியா வளாகத்தில் நேற்று மதியம் தீ ஏற்பட்டுள்ளது. கடும் பிரயத்தனத்துக்கு மத்தியில் கட்டுப்படுத்தப்பட்டுள்ளது.
வவுனியா வளாகத்துக்கு என்று ஒதுக்கப்பட்ட பகுதியில் பற்றைக் காடுகளாக காணப்பட்ட பிரதேசத்திலேயே தீ பரவத் தொடங்கியிருந்தது. கடும் காற்று மற்றும் வெயில் காரணமாக தீ வேகமாக பரவியுள்ளது.
அதனைக் கட்டுப்படுத்துவதற்காக வவுனியா நகரசபையின் தீ அணைப்பு பிரிவுக்கு தகவல் வழங்கப்பட்டது. கடும் பிரயத்தனத்துக்குப் பின்னர் தீ கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வரப்பட்டது. தீ விபத்துக் காரணமாக காட்டின் ஒரு பகுதி அழிவடைந்துள்ளது. (ஒ.5,110,ரி4)

# மக்கள் ஆணை வழங்காவிட்டால் கிழட்டு அரசியல் செய்யமாட்டேன்

## கூறுகிறார் தேவானந்தா எம்.பி.

யாழ்ப்பாணம், ஜூலை 29
அடுத்துவரும் தேர்தல்களில் மக்கள் எமக்கு ஆணை வழங்கத் தவறினால் அரசியலில் இருந்து நிரந்தரமாக ஓய்வு பெறலாம் என்று நினைக்கிறேன். மக்கள் ஆணை வழங்காமல் வலிந்து கிழட்டு அரசியல் செய்யும் விருப்பம் அல்லது தேவை எனக்கில்லை. இவ்வாறு ஈழமக்கள் ஜனநாயக கட்சியின் செயலரும், நாடாளுமன்ற உறுப்பினருமான டக்ளஸ் தேவானந்தா தெரிவித்தார்.
யாழ்ப்பாணத்தில் அமைந்துள்ள கட்சி அலுவலகத்தில் நேற்று ஞாயிற்றுக்கிழமை மாலை நடைபெற்ற பத்திரிகையாளர் சந்திப்பிலேயே மேற்கண்டவாறு கூறினார்.
அவர் மேலும் தெரிவித்ததாவது:
இலங்கை தமிழர்களின் இனப்பிரச்சினை விடயத்தில் இந்தியா 13 ஆவது திருத்தச் சட்டத்தை மட்டும் முழுமையாக நடைமுறைப்படுத்தினால் போதும் என்ற நிலைப்பாட்டிலேயே உள்ளது. இந்தியாவில் எந்தக் கட்சி ஆட்சிக்கு வந்தாலும் எந்த மாற்றங்களும் ஏற்படவில்லை. எதிர்காலத்திலும் இதில் மாற்றங்கள் ஏற்படாது. அண்மையில் கூட ஐ.நா. மனித உரிமை சபையில் இலங்கை தொடர்பான இனப்பிரச்சினை விடயத்தில் 13 ஆவது திருத்தச் சட்டத்தை முழுமையாக நடைமுறைப் படுத்துங்கள் என்று இலங்கை அரசுக்கு இந்தியா வலியுறுத்தியிருந்தது.
இதேவேளை, தமிழ் மக்களி காணி விடுவிப்பு, ஒரு இலட்சம் தமிழ் இளையோருக்கான வேலைவாய்ப்பு, 13 திருத்தச் சட்டத்தை முழுமையாக நடைமுறைப்படுத்தல் போன்றவற்றை 6 மாதகாலத்துக்குள் எந்த தரப்பு நிறைவேற்றுவதாக உறுதிமொழி தருகின்றதோ அவர்களுக்கு ஈழமக்கள் ஜனநாயகக் கட்சி ஆதரவை வழங்கும். மேலும், எந்த அரசானாலும் ஆட்சிக்கு வந்து ஆறு மாதக காலத்திற்குள் கொடுத்த தேர்தல் வாக்குறுதிகளை நிறைவேற்றவேண்டும். தவறும் பட்சத்தில் அது ஆறின கஞ்சி பழைய கஞ்சி என்ற நிலையேற்படும்.
இங்குள்ள அரசியல்வாதிகள் மக்களுக்கு சாத்தியமான விடயங்கள் தொடர்பில் சிந்திக்காது, தேர்தல் காலங்களில் மக்களை ஏமாற்றி வாக்குகளை அபகரிக்கும் நோக்குடன் சாத்தியமில்லாத பொய்யான வாக்குறுதிகளை வழங்கிவிட்டு, அது நிறைவேற்றப்படாத சந்தர்ப்பங்களில் கிழட்டு அரசியல்வாதிகள், சிங்கள அரசுகள் தம்மை ஏமாற்றி விட்டது என மக்கள் மத்தியில் நாடகமாடுகின்றனர்.
அரசுக்கு இத்தனை வருடங்களாக முண்டுகொடுத்துவிட்டு தேர்தல் நெருங்குகின்றது என்றவுடன் 72 நிமிடங்கள் நின்று உரையாற்றியதாக முழக்கமிடுகின்றனர். ஆனால் நாடாளுமன்றத்திலே பதிலளிக்க வேண்டிய தலைமை அமைச்சர், அமைச்சர்கள் இல்லாத வெற்றுக் கதிரைகளுக்கே உரையாற்றினர். 72 நிமிடங்கள் பேசியமையானது, தமிழ் மக்களுக்கு 72 வருடமாக செய்த பாவங்களுக்கு பரிகாரம் தேடுவதற்கோ தெரியவில்லை என்றார். (ஒ.5,106,ரி1)

## தந்தை வழியில்...

அந்த அரசியல் இளைஞனுக்கு கூறிக்கொள்ள விரும்புவதாக எதிர்க்கட்சித் தலைவர் மகிந்த ராஜபக்ச தெரிவித்துள்ளார். தங்காலை கால்டன் இல்லத்தில் நேற்று இடம்பெற்ற நிகழ்வில் கலந்துகொண்டு உரையாற்றும் போதே மேற்கண்டவாறு கூறினார்.
அவர் மேலும் தெரிவித்ததாவது:
அரச தலைவர் தேர்தலை பிற்போடுவதற்கும், சிறிலங்கா சுதந்திரக் கட்சிக்கும் பொதுமக்கள் முன்னணிக்கும் இடையிலான கூட்டணியைத் தோல்வியடையச் செய்யவும் தற்போது அரசியல் சதிகள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன. இந்தச் சதிகளை அனைவரும் ஒன்றிணைந்து தோற்கடித்தால் உத்தேச தேர்தல்களில் அமோக வெற்றி பெறலாம்.
ஐக்கிய தேசியக் கட்சி தலைமையிலான அரசை ஏற்படுத்த 2015 ஆம் ஆண்டு வெளி நாடுகள் ஒத்துழைப்பை வழங்கின. இந்த நிலமை இம்முறை தொடராது. நாட்டின் உள்ளக இறையாண்மையில் தலையிடுவதற்கு எந்த நாட்டுக்கும் உரிமை கிடையாது. அதற்கு ஒருபோதும் அனுமதி வழங்கவும் முடியாது.
நாட்டின் ஒழுக்கத்தை பாதுகாக்கக் கூடிய தலைவரொருவர் நியமிக்கப்பட வேண்டும். தேர்தலில் நாம் வெற்றி பெற வேண்டும். இல்லையெனில் இந்த நாட்டு மக்கள் அழிவடைந்து விடுவர் - என்றார். (ஒ.5)

## மாவிட்டபுரத்தில்...

யோரத்தில் கைக்குண்டு ஒன்று கண்டெடுக்கப்பட்டது.
நேற்று மாலை 6 மணியளவில் வீதியோரத்தில் கைக்குண்டு இருப்பதனை அவதானித்த பொதுமக்கள் காங்கேசன் துறைப் பொலிஸாருக்குத் தெரிவித்தனர். அதையடுத்து சிறப்பு அதிரடிப்படையின் உதவியுடன் நேற்று பி.ப 8 மணியளவில் பழைய கைக்குண்டு ஒன்று மீட்கப்பட்டதாகப் பொ்லிஸார் தெரிவித்தனர். (ஒ.5,26)

## நெல்லியடியில்...

திருந்தனர் என்ற குற்றச்சாட்டில் நேற்று மாலை இருவர் கைது செய்யப்பட்டுள்ளனர். அரச புலனாய்வுப் பிரிவுக்கு கிடைத்த இரகசியத் தகவலையடுத்து சிறப்பு அதிரடிப்படையினர் மேற்கொண்ட சோதனை நடவடிக்கையின்போது இருவர் கைது செய்யப்பட்டனர். புத்தளம் மற்றும் வடமராட்சி நவிண்டிலைச் சேர்ந்த 43 வயதுடையவர்களே இவ்வாறு கைது செய்யப்பட்டுள்ளனர். (ஒ.5,26,422)

## தமிழ்...

கிளிநொச்சி மத்திய மகா வித்தியாலய மைதான முற்றத்தில், வானொலி ஒன்றின் அறிமுக விழாவில் நேற்று மாலை கலந்து கொண்டு உரையாற்றுகையிலேயே மேற்கண்டவாறு கூறினார்.
அவர் மேலும் தெரிவித்ததாவது:
இனவழிப்பு போர் நிறைவடைந்து பத்து ஆண்டுகள் நிறைவடைந்துள்ள நிலையிலும் தமிழ் மக்களின் நீதியானதும் நியாயமானதுமான கோரிக்கைகளுக்கான தீர்வுத்திட்டத்தை முன்வைப்பதிலும் அதனை நடைமுறைப்படுத்துவதிலும் கரிசனை காட்டாது இலங்கையின் ஆளும் அதிகாரவர்க்கம் தொடர்ந்தும் ஏமாற்றி வருகின்ற செயற்பாடு அவர்களின் உள்ளக்கிடக்கையை தெட்டத்தெளிவாக வெளிக்கொண்டு வருகின்றது.
வலிந்து காணாமலாக்கப்பட்டோருக்கான நீதி கிடைக்கவில்லை. நிலவுரிமை மற்றும் மரபுரிமைப் போராட்டங்கள் தொடர்ந்து கொண்டே இருக்கின்றன. தமிழ் அரசியல் கைதிகளுக்கான விடுதலை பற்றி எந்த உத்தரவாதமும் கிடைக்கவில்லை.
கன்னியாவில் ஒரு இந்து மதப் பெரியார் மீது வேண்டுமென்றே ஒரு சிங்கள - பௌத்தர் சுடு தேநீரை அவர் முகத்தில் வீசியுள்ளார். 'சமாதானமாகப் போங்கள்' என்கின்றார்கள் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பும் பொலிஸாரும். ஒரு பிக்கு மீது தமிழர் ஒருவர் சுடுநீர் வீசியிருந்தாரானால் அவரைச் 'சமாதானமாகப் போ' என்பார்களா? குறைந்தது பகிரங்கமாக எமது சுவாமியின் காலில் விழுந்து மன்னிப்புக் கேட்டால்தான் சுவாமி அவர்கள் சமாதானத்தை நாட வேண்டும். இவ்வாறான சம்பவங்கள் ஏராளம்.

**மக்கள் உணர்கின்றனர்**

கண்ணீர்க் களமாக காட்சியளிக்கின்றது எமது நிலம். ஒரு மாபெரும் இனப்படுகொலைக்கு உள்ளாக்கப்பட்டு இன நீதி மறுக்கப்பட்டுள்ள எமது மக்களின் வாக்குகளைப் பெற்றுக் கொண்ட தமிழ் அரசியல் பிரதிநிதிகளின் நிபந்தனைகளேதுமற்ற ஆதரவை ஆதாரமாகக் கொண்டு பன்னாட்டு போர்க் குற்ற விசாரணைகளில் இருந்து இலங்கை தன்னை விடுவித்துக்கொண்டுள்ளதோடு திட்டமிட்டே வேண்டுமென்று தமிழர்களின் பூர்வீக அடையாளங்களை அழித்து தமிழர் மண்ணில் விகாரைகளை அமைப்பதிலும் சிங்களக் குடியேற்றங்களை நிறுவுவதிலும் முனைப்போடு எந்தவித பதட்டமும் இல்லாது செயற்பட்டு வருகின்றது.
எமது மக்கள் தமது விரல்களாலேயே தங்களது கண்களைக் குத்திக்கொண்டுள்ளதை இப்பொழுது நன்கு உணரத்தொடங்கியுள்ளார்கள். எமது மக்களின் உள உணர்வுகளை உதாசீனம் செய்து தொடர்ந்தும் அரச இயந்திரங்களின் ஒத்தோடிகளாக இருக்கின்ற இன்றைய தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நிலைப்பாட்டை நான் வேதனையுடன் இங்கு தெரிவிக்க வேண்டி இருப்பதையிட்டு கவலையடைகின்றேன்.

**அனுதாபம் தேடுகிறார்கள்**

எமக்கு இப்பொழுது நாடாளுமன்றத்தில் இருக்கும் பலத்தை வைத்து பலதையும் அரசிடமிருந்து பெற்றிருக்கலாம். இவ்வாறான பலம் இனி எமக்குக் கிடைக்குமோ தெரியாது. அவ்வாறு தமது பலத்தைப் பாவியாது இருந்தமை எப்பேற்பட்ட குற்றம் என்பதை இப்பொழுது உணர்ந்துள்ளனர் கூட்டமைப்பினர். அதனால்தான் தாம் வஞ்சிக்கப்பட்டுள்ளதாக இப்போது கூறத்தொடங்கியுள்ளனர். கூட்டமைப்பின் தலைவர்கள் இவ்வாறு கூறி மக்களின் அனுதாபத்தைப் பெறலாம் என்று யோசிக்கின்றார்கள் போலும். ஆனால் இதுகாறும் இருந்த பலத்தை எமது மக்களின் நன்மைக்காகப் பாவியாது விட்டமை எவ்வளவு பெரிய தவறு என்பதை இப்போது உணர்ந்திருப்பார்கள் என்று நம்புகின்றேன். ஆகவே, தான் தமிழ் மக்களின் பேரம் பேசும் சக்தியாக கட்சி பேதங்கள் இன்றி ஒரு மாபெரும் மாற்று அணியினைக் கட்டியெழுப்ப வேண்டிய காலத்தின் கட்டாயம் இன்று எழுந்திருக்கின்றது. அவ்வாறானதொரு அரசியல் கூட்டிணைவை விட எம்மை காக்கப்போவது வேறொன்றுமில்லை. இவ்வாறு இணைவதானால் கட்சிகள் சுயநலம் களைவது அவசியம். கட்சிகளின் சுயநல சிந்தனைகள் தமிழ் மக்களின் விடிவுக்கு இடம்கொடுக்க மாட்டா என்பதை நாம் புரிந்து கொள்ள வேண்டும்.

**ஓரணி**

எமது மக்கள் மீது சமகாலத்தில் கட்டவிழ்த்துவிடப்பட்டுள்ள அரசியல் சூழ்ச்சிகளை உடைத்தெறிந்து, எமது மக்களுக்கான தைரியமான அரசியலை முன்னெடுத்துச் செல்லக் கூடிய சக்திகள் யாவும் ஓரணியில் இணைந்து செயற்பட வேண்டும் என்ற கருத்தை மீண்டும் வலியுறுத்துகின்றேன். இதனையே நான் முன்னரும் பல்வேறு சந்தர்ப்பங்களில் கூறி வந்திருக்கின்றேன். தனிப்பட்ட கட்சி நலன்களைத் தாண்டி தினம் துன்பச்சிலுவைகளைச் சுமந்து வாழும் எமது மக்களின் நலன்களுக்காக கடந்து போன காலங்களை நியாயப்படுத்துவதை விடுத்து நிகழ்காலத்தின் யதார்த்தங்களைக் கருத்திற்கொண்டு ஒருமித்த ஏற்றுக்கொள்ளப்பட்ட கொள்கைகளின் அடிப்படையில் இணைந்து செயலாற்றுவதற்கு அனைவரையும் அழைத்து நிற்கிறேன் - என்றார். (ஒ.5)

## 7ஆம் திகதி...

நேற்றுமுன்தினம் இடம்பெற்றது. இந்தக் கூட்டத்தில் எடுக்கப்பட்ட முடிவுகள், தமிழ் மக்கள் பேரவையால் உத்தியோக பூர்வமாக நேற்று இரவு ஊடகங்களுக்கு அனுப்பி வைக்கப் பட்டன.
அந்த ஊடக அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டதாவது:
தமிழர் தாயகத்தில் தொடர்ந்து இடம்பெற்றுவரும் திட்டமிட்ட அரச ஆதரவு பௌத்த - சிங்கள ஆக்கிரமிப்பு நடவடிக்கைகளைக் கண்டித்தும், இனப்பிரச்சினைக்கான தீர்வை முன்வைக்காமல் காலம் கடத்தும் அரசின் கபடத்தனத்தை பன்னாட்டுச் சமூகத்துக்குத் தெரியப்படுத்தவும், காணாமல் போனவர்களின் விவகாரம் மற்றும் தமிழ் அரசியல் கைதிகளின் விடுதலை என்பன தொடர்பில் பன்னாட்டுச் சமூகத்தின் தலையீட்டை வலியுறுத்தியும், மாபெரும் மக்கள் எழுச்சிப் பேரணியை எதிர்வரும் செப்ரெம்பர் மாதம் 7ஆம் திகதி சனிக்கிழமை நடத்துவதென தமிழ் மக்கள் பேரவையின் மையக் குழு கூடித் தீர்மானித்துள்ளது.
வடக்கு-கிழக்கு மாகாணம் உள்ளிட்ட தமிழர் தாயகம் தழுவியதாக எதிர்வரும் செப்ரெம்பர் மாதம் 7 ஆம் திகதி சனிக்கிழமை யாழ்ப்பாணத்தில் இடம்பெறவுள்ள மாபெரும் மக்கள் எழுச்சிப் பேரணியில் ஒட்டுமொத்தத் தமிழ் மக்களும் பங்கேற்கும் வகையில் தமிழர் தாயகத்திலுள்ள அனைத்துப் பொது அமைப்புக்கள், தொழிற்சங்கங்கள், விவசாய, கடற்றொழில் அமைப்புக்கள், பெண்கள் அமைப்புக்கள் உள்ளிட்ட சமூக அமைப்புக்கள் என்பவற்றின் பிரதிநிதிகளுடனான சந்திப்பு எதிர்வரும் ஓகஸ்ட் மாதம் 10 ஆம் திகதி பிற்பகல் 3 மணியளவில் யாழ்ப்பாணம் பொதுநூலக கேட்போர் கூடத்தில் இடம்பெறவுள்ளது என்று அந்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ஒ.5)

## ஒட்டுசுட்டானில்...

துள்ளன. டிப்பர் வாகனச் சாரதி பொலிஸாரால் கைது செய்யப்பட்டுஎதிர்வரும் 31ஆம் திகதி வரையில் விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளார்.
இந்தச் சம்பவம் நேற்றுமுன்தினம் இரவு இடம்பெற்றுள்ளது: மாங்குளம் - ஒட்டுசுட்டான் வீதியில் கல்குவாரிக்கு அண்மித்த பகுதியில் வீதியில் நின்ற எருமை மாடுகளே உயிழந்துள்ளன. டிப்பர் வாகனத்துக்கு சிறியளவில் சேத மேற்பட்டுள்ளதுடன் வாகனத்தில் பயணித்தவர்களுக்கு எவ்வித பாதிப்புக்களும் ஏற்படவில்லை.
சம்பவம் தொடர்பில் எருமை மாடுகளின் உரிமையாளர் ஒட்டுசுட்டான் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்தார். முறைப்பாட்டைத் தொடர்ந்து டிப்பர் வாகனச் சாரதியைப் பொலிஸார் கைது செய்தனர். முல்லைத்தீவு மாவட்ட நீதிவான் நீதிமன்றத்தின் பதில் நீதிவானின் இல்லத்தில் நே[illegible] டுத்தியபோது அவரை நாளை மறுதினம் புதன் கிழமை வரையில் விளக்கமறியலில் வைக்குமாறு உத்தரவிட்டார்.
ஒட்டுசுட்டான் பிரதேசத்தில் மேய்ச்சல் தரவை இல்லாத காரணத்தால் கால்நடைகளை ஒட்டுசுட்டான் மாங்குளம் வீதியில் மேய்ச்சலுக்காக சாய்த்து வருகின்றார்கள். இந்த நிலையில் ஒட்டுசுட்டான் கற்குவாரியில் இருந்து அதிகளவான டிப்பர்கள் நாள்தோறும் கருங்கற்களை ஏற்றிச் செல்கின்றன. இவை வேகமாகச் செல்வதாலேயே இத்தகைய விபத்துக்கள் இடம் பெறுவதாக மக்கள் சுட்டிக்காட்டுகின்றனர். (ஒ.5,ரி3)

# சிரியாவில் நீடிக்கிறது கடும் போர் குழந்தைகள் உட்படப் பலர் சாவு

## ஐ. நா. கண்டனம் தெரிவிப்பு




டமஸ்காஸ், ஜூலை 29

சிரியாவின் வட மேற்குப் பகுதியில் உள்ள மருத்துவமனைகள், பள்ளிகள், சந்தைகள் மற்றும் வெதுப்பகங்களைக் குறிவைத்து நடத்தப்பட்ட வான் தாக்குதலில் 26 குழந்தைகள் உட்பட 100க்கும் அதிகமானோர் சாவடைந்தனர். ஆயுததாரிகளின் வசம்: இருக்கும் குறித்த பகுதியில் நடத்தப்பட்ட தாக்குதலுக்குச் சிரிய அரசும், அதன் கூட்டாளியான ரஷ்யாவுமே காரணம் எனத் தெரிவித்தார் ஐக்கிய நாடுகள் சபையின் மனித உரிமைகள் தலைவர் மீசெல் பச்சலெட். இந்தத் தாக்குதல் வெளிப்படையான பன்னாட்டு அலட்சியத்தால்' நடைபெற்றுள்ளது. இட்லிப்பில் அதிகரித்து வரும் சாவுகள் குறித்து யாரும் கண்டுகொள்ளவில்லை. பன்னாட்டுக் கட்டுப்பாட்டை மீறி இந்தப் போர் சென்றுவிட்டது. இதனால் ஐக்கிய நாடுகள் பாதுகாப்புச் சபையால் எதுவும் செய்ய முடியாத நிலை ஏற்பட்டுள்ளது. பொதுமக்களுக்கு எதிராக நடத்தப்படும் தாக்குதல்கள் போர்க் குற்றங்களாகும். பொதுமக்கள் மீது தாக்குதல் நடத்துபவர்கள் மீது போர்க் குற்றங்கள் சுமத்தப்பட வேண்டும். அந்தத் தாக்குதலுக்கு ஆணையிட்டவர்கள். அல்லது நடத்தியவர்கள்தான் பொறுப்பு என்று மீசெல் பச்சலெட் மேலும் தெரிவித்தார். இட்லிப் பகுதியில் தாங்கள் நடத்திய வான் தாக்குதலில் பொது மக்களை இலக்கு வைக்கவில்லை எனச் சிரியாவும் அதன் கூட்டாளியான ரஷ்யாவும் மறுத்துள்ளன.

**சிரியப் போர்**

சிரியாவில் கடந்த 8 ஆண்டுகளாக உள்நாட்டு போர் நடக்கிறது. இட்லிப் மாகாணம், ஹமா மாகாணத்தின் வடக்குப் பகுதி, அலெப்போ மாகாணத்தின் மேற்குப் பகுதி ஆகியவை சிரிய அரசுக்கு எதிரான தரப்பினரின் வலுவான இடங்களாக இருக்கின்றன. சிரியாவில் போர் தொடங்குவதற்கு முன்னரே, அந்த நாட்டு அதிபர் பஷார் அல் அசாத் ஆட்சியில் அங்கு வேலையில்லாத நிலையும், ஊழல், அரசியல் சுதந்திரம் அற்ற நிலை நீடித்தது. அயல்நாடுகளில் எழுந்த அரபு வசந்தத்தால் சிரியாவின் தெற்கு நகரான டெராவில் போராட்டங்கள் வெடித்தன. போராட்டக்காரர்களை ஒடுக்க அரசு முயன்றபோது, அதிபர் பதவி விலக வேண்டும் என்ற கோரிக்கை நாடு முழுதும் எழுந்தது. பதற்றநிலையும் அதிகரித்தன. அரசுக்கு எதிரானவர்கள் தங்கள் கைகளில் ஆயுதங்களை எடுத்தனர். முதலில் அவர்களைக் காத்துக்கொள்ள அவர்கள் ஆயுதங்களை ஏந்தினர். அதன்பின் தங்கள் பகுதிகளில் உள்ள அரசுப் பாதுகாப்பு படைகளை அழிக்க ஆயுதங்களை ஏந்தினர். வெளிநாடுகளின் ஆதரவு பெற்ற பயங்கரவாதம் என்றும் இதைக் குறிப்பிட்ட அதிபர் அசாத் இதை ஒடுக்குவதாக உறுதி எடுத்தார். எதிர்த் தரப்பில் அல் கெய்தாவுடன் தொடர்புடைய போராட்டக்காரர்கள் ஆயுதமேந்திப் போராடுகிறார்கள். ரஷ்ய அரசின் ஆதரவுடன் சிரியப் படை அவர்களைத் தாக்குகிறது.



*சீனாவின் தன்னாட்சிப் பிரதேசமான ஹொங்கொங்கில் உள்ள ஒரு மருத்துவமனையில் தனது காயங்களைக் காட்டுகிறார் 23 வயதான கால்வின் சோ. வெள்ளை மேலாடையை அணிந்த ஒரு குழுவினர் போராட்டக்காரர்கள் மீது கடந்த வாரம் தாக்குதல் நடத்தினர். அந்தத் தாக்குதலிலேயே இவர் இவ்வாறு காயப்பட்டார். அரச எதிர்ப்பு ஆர்ப்பாட்டக்காரர்களையும், வழிப்போக்கர்களையும் தாக்குதலில் இருந்து பாதுகாக்கத் தவறியதற்காக ஹொங்கொங் பொலிசார் விமர்சனங்களை எதிர்கொண்டனர்.*

### சிரியப் போரின் எதிரொலி

## 4 லட்சம் பேர் இடப்பெயர்வு

டமஸ்காஸ், ஜூலை 29

சிரியாவில் கடந்த மூன்று மாதங்களாகப் போராளிகளின் வசமுள்ள பகுதிகளைக் குறிவைத்து நடத்தப்பட்ட தாக்குதல்கள் காரணமாக சுமார் 4 லட்சம் பேர் இடம்பெயர்ந்துள்ளனர் என்று ஐக்கிய நாடுகள் சபை தெரிவித்தது. சிரியாவில் போராளிகளின் வசம் உள்ள கடைசிப் பகுதியான இட்லிப் மாகாணத்தில் சிரிய அரச படைகள் மற்றும் ரஷ்யப் படைகள் தொடர் தாக்குதலை நடத்தி வருகின்றன.

இதில் 700க்கும் மேற்பட்ட பொதுமக்கள் கொல்லப்பட்டதாகவும், 4 லட்சம் மக்கள் இடம்பெயர்ந்து வேறு இடத்துக்குச் சென்றுள்ளதாகவும் ஐக்கிய நாடுகள் சபை தெரிவித்தது.

மருத்துவமனை, பாடசாலைகள் மீது சிரிய ஆதரவுப் படைகள் தாக்குதல் நடத்தி வருகின்றன என்று சிரியக் கண்காணிப்புக் குழுவும் முறைப்பாடளித்தது.


## அமெரிக்காவின் தாக்குதலில் 20 தலிபான்கள் உயிரிழப்பு!

காபூல், ஜூலை 29

ஆப்கானிஸ்தானில் அமெரிக்கா தலைமையிலான கூட்டுப் படையினர் நடத்திய வான்வழித் தாக்குதலில் 20 தலிபான்கள் கொல்லப்பட்டனர்.

ஆப்கானிஸ்தான் நாட்டில் தலிபான் பயங்கரவாதிகளை ஒடுக்குவதற்காக அந்த நாட்டு அரசுடன் இணைந்து அமெரிக்கா தலைமையிலான கூட்டுப்படையினர் தாக்குதலில் ஈடுபட்டு வருகின்றனர். ஆனாலும், இந்தத் தாக்குதலில் அப்பாவிப் பொதுமக்களும் கொல்லப்பட்டு வருகின்றனர்.

இதையடுத்து, போரை முடிவுக்குகொண்டுவரும் வகையில் அமெரிக்கா தலைமையில் தலிபான் ஆயுதக் குழுவுடன் பேச்சு நடத்தப்பட்டுவருகிறது. கடந்த 2 நாள்களாக இந்தப் பேச்சு நிறுத்தி வைக்கப்பட்டது. இந்த நிலையிலேயே கூட்டுப்படையால் மேற்படி தாக்குதல் நடத்தப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (ம)

## மிகப் பெரிய எலும்பு

பிரான்ஸின் தென்மேற்குப் பகுதியில் உள்ள விஞ்ஞானிகள் அகழ்வாராய்ச்சி ஒன்றில் மிகப்பெரிய டைனோசர் எலும்பு ஒன்றைக் கண்டுபிடித்தனர்.

டைனோசரின் தொடை பகுதி எலும்பாக இருக்கும் எனக் கருதப்படும் அந்த எலும்பு ஒரு தசாப்தத்திற்கும் மேலாக மண்ணில் புதைந்து கிடந்துள்ளது.

இரண்டு மீற்றர் உடைய அந்த எலும்பு தாவரங்களை உண்ணும் நீண்ட கழுத்துடைய டைனோசர் எலும்பாக இருக்கலாம் என்று ஆராய்ச்சியாளர்கள் தெரிவிக்கின்றனர்.

டைனோசர் காலத்தின் பிந்தைய பகுதியில் இந்தத் தாவரங்களை உண்ணும் டைனோசர்கள் அதிகமாகக் காணப்பட்டன.

அவை நிலத்தில் வாழும் மிருகங்களில் மிகப்பெரிய மிருகமாகவும் கருதப்பட்டது. இந்த டைனசர்கள் 140 மில்லியன் வருடங்களுக்கு முன் வாழ்ந்திருக்கலாம் என்று தெரிவிக்கப்படுகிறது.

## மெக்சிக்கோ இடையே எல்லைச் சுவர் அனுமதியளித்தது அமெரிக்க நீதிமன்றம்



மெக்சிக்கோ - அமெரிக்கா இடையே சுவர் கட்டுவதற்கு அமெரிக்க நீதிமன்றம் அனுமதி அளித்து உத்தரவிட்டது. அமெரிக்க அதிபர் ட்ரம்ப்புக்குச் சாதகமான இந்தத் தீர்ப்பை ஐந்து நீதிபதிகள் தலைமையிலான குழு கடந்த வெள்ளிக்கிழமை வழங்கியது. மேலும் அமெரிக்கா மெக்சிக்கோ இடையே அமைக்கப்படும் எல்லைச் சுவருக்குத் தேவையான நிதியைப் பெறுவதற்குப் பாதுகாப்பு அமைச்சகத்தைப் பயன்படுத்திக் கொள்ளலாம் என்று நீதிபதிகள் தெரிவித்தனர். இந்தத் தீர்ப்புக்கு ட்ரம்ப் பெரும் வரவேற்பைத் தெரிவித்தார்.

**பின்னணி**

அமெரிக்காவுக்குள் அகதிகள் நுழைவதைத் தடுப்பதற்காக மெக்சிக்கோ - அமெரிக்கா எல்லையில் சுவர் கட்டுவதாகத் தேர்தல் பரப்புரையின்போது வாக்குறுதியளித்துப் பதவிக்கு வந்தார் ட்ரம்ப். இதற்காக 500 கோடி டொலர் நிதி ஒதுக்குமாறு அமெரிக்க நாடாளுமன்றைக் கோரினார். ஆனால், அமெரிக்க நாடாளுமன்றத்தின் இரண்டு சபைகளிலும் ட்ரம்ப்பின் கோரிக்கைக்கு ஜனநாயகக் கட்சி உறுப்பினர்கள் ஒத்துழைக்க மறுத்தனர். இதன் காரணமாக சுவர் கட்டுவது முடியாமல் போனது. இந்த நிலையில் சுவர் எழுப்புவதற்குக் குறிப்பிட்ட அளவு நிதியை வழங்குவதற்கு குறித்த உறுப்பினர்கள் பச்சைக் கொடிகாட்டினர். பின்னர் நீதிமன்றத்தை நாடிய ட்ரம்புக்கு அனுமதி அளிக்கப்பட்டுள்ளது.



# பாகிஸ்தானுக்குப் போர் வானூர்தி இந்தியாவுக்கு உலங்கு வானூர்தி

## வழங்குகிறது அமெரிக்கா

வோஷிங்டன், ஜூலை 29
பாகிஸ்தானுக்கு 12.50 கோடி டொலர் மதிப்பிலான அதிநவீன எவ்16ரகபோர் வானூர்திகளை விற்பனை செய்வதற்கு ஒப்புதல் அளித்துள்ளது அமெரிக்கா. அதேவேளை அதிநவீன ஆயுதங்கள் கொண்ட, தாக்குதல் அம்சம் கொண்டஅப்பாச்சிஏ-64இரகஉலங்கு வரனூர்திகள் நான்கை இந்திய வான் படைக்குவழங்கியது அமெரிக்காவின் போயிங் நிறுவனம். பாகிஸ்தானுக்கு வழங்கப்பட்டுள்ள போர் வானூர்திகள் பயங்கரவாத ஒழிப்புக்கும், கண்காணிப்புக்கும் பயன்படுத்துவதற்கு விற்பனை செய்யப்பட்டுள்ளது. இது 12.50 கோடிஅமெரிக்கடொலர்மதிப்பிலானது என்று தெரிவிக்கப்படுகிறது. அதேசமயம் அப்பாச்சி ஏ-64இ ரக உலங்குவானூர்திகளை இந்தியாவுக்கு வழங்கி, மேலும் குறித்த ரக உலங்கு வானூர்திகள் நான்கை இந்தியாவுக்கு வழங்கவுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

அயல் நாடுகளாகவும் பரம எதிரிகளாகவும்இருந்துவருகின்றஇந்தியா-பகிஸ்தானுக்குப் பரஸ்பரம் போர்க் கருவிகளை அமெரிக்கா வழங்கியிருக்கின்றமை குறித்துப் பன்னாட்டு மட்டத்தில் விவாதிக்கப்படுகிறது.

இந்தநிலையில் அமெரிக்காவின் அதிநவீன எவ் 16 ரக போர் விமானத்தை பாகிஸ்தான் ராணுவம், இந்தியாவுக்கு எதிராகத்தான் பயன்படுத்தி வருகிறது. இந்தவிமானங்களைதீவிரவாதஒழிப்புக்கும், கண்காணிப்புக்கும் மட்டுமே பயன்படுத்த வேண்டும் என்று அமெரிக்கா நிபந்தனை விதித்தபோதி லும், பாகிஸ்தான் ராணுவம் பாலகோட் தாக்குதலின்போது பயன்படுத்தி இருந்தமை குறிப்பிடத்தக்கது.

பாகிஸ்தானுக்குவிற்பனைசெய்யப்பட உள்ளபோர்வானூர்திகள் பிராந்தியத்தில் உள்ள மற்றைய நாடுகளின் இராணுவப் பலத்தைச் சமன் செய்வதற்காக விற்கப்படவில்லை என்று அமெரிக்கப் பாதுகாப்புத்துறை தெரிவித்தாகவும் அமெரிக்கா வழங்கிய போர்வானூர்திகளைக் கடந்தகாலங்களில் இந்தியாவுக்கு எதிராகப் பாகிஸ்தான் பயன்படுத்தியதாகவும் இந்திய ஊடகங்கள் சுட்டிக்காட்டிச் செய்தி வெளியிட்டன.

## இந்தியா, மியன்மார், பங்களாதேஷ், நேபாளம் மழை காரணமாக 600 பேர் சாவு

### ஐ.நா. தெரிவிப்பு

இந்தியா, பங்களாதேஷ், நேபாளம், மியன்மார் ஆகிய ஆசிய நாடுகளில் வெள்ளம் காரணமாக 600 பேர் சாவடைந்தனர்.

கிட்டத்தட்ட 2கோடிக்கும் அதிகமான மக்கள்பாதிக்கப்பட்டனர்என்றுஐக்கிய நாடுகள் சபை தெரிவித்தது.

மேற்குறித்த நாடுகளில் பருவமழை ஆரம்பித்துள்ளதால் அங்கெல்லாம் கடும் மழை பெய்துள்ளது.

இதன் காரணமாக வெள்ளப் பெருக்கு, மண்சரிவு என்பன ஏற்பட்டு பெரும் பாதிப்பு ஏற்பட்டுள்ளது.

இந்தியாவைப்பொறுத்த வரை மழையால் மிகவும் பாதிக்கப்பட்ட மாநிலங்களாகஅசாம்,பிஹார், உத்தரப் பிரதேசம் ஆகியன காணப்படுகின்றது. 1கோடி மக்கள் முகாம்களில் தங்க வைக்கப்பட்டுள்ளனர்.

மியன்மாரில் சுமார் 40 ஆயிரம் பேர் பாதிக்கப்பட்டுவேறுஇடங்களுக்கு மாற்றப்பட்டுள்ளனர். பங்களாதேஷில் 40 லட்சம் மக்கள் பாதிக்கப்பட்டுள்ளனர்.



## பிலிப்பைன்ஸில் தொடர்நிலநடுக்கம்; வீடுகள் இடிந்ததில் 8 பேர் சாவு

பிலிப்பைன்ஸில்நேற்றுமுன்தினம் அதிகாலை ஏற்பட்ட நிலநடுக்கத்தில் 8 பேர் சாவடைந்தனர்.

60க்கும் மேற்பட்டவர்கள் காயமடைந்தனர். வடக்குப் பிலிப்பைன்ஸ் தீவுகளில் இந்த நிலநடுக்கம் ஏற்பட்டது. அதிகாலையில் நிலநடுக்கம் ஏற்பட்டதால் உறங்கிக் கொண்டிருந்தபலரும் பாதிக்கப்பட்டனர். பல இடங்களில் வீடுகள் இடிந்துவிழுந்தன. அந்த இடங்களில் வீடுகள் குலுங்கின.

காயமடைந்தவர்களில் பலரின் நிலை கவலைக்கிடமாக உள்ளதால் சாவுகள் அதிகரிக்கலாம்என்றுஅஞ்சப்படுகிறது.

இதுகுறித்து அமெரிக்கப் புவியியல்ஆய்வுமையம்குறிப்பிடும்போது,

பிலிப்பைன்ஸின் லூசன் தீவின் வடக்கே படேன்ஸ் மாகாணத்தில் அடுத்தடுத்து நிலநடுக்கங்கள் ஏற்பட்டன. அவை5.4மற்றும்5.9ரிக்டர் அளவில் இருந்தன.



## இன்றைய நாள்

**மேடம்:** கடந்தகால உழைப்புக்கு நற்பலன் கிடைக்கும். தொழில், வியாபாரம் செழித்து திட்டமிட்ட இலக்கை அடைவீர்கள். பெண்கள் புத்தாடை அணிகலன் வாங்க அனுகூலம் உண்டு. எதிர்பார்த்த செய்தி வந்து சேரும்.

**இடபம்:** சிலர் சுயலாபத்திற்காக உதவ முன்வருவர். அவசியமில்லாமல் கடன் பெற வேண்டாம். தொழில், வியாபாரத்தில் நடைமுறை மாற்றம் செய்வது அவசியம். லாபம் சுமாராக இருக்கும். உறவினரால் உதவி உண்டு.

**மிதுனம்:** உங்களின் சிறிய முயற்சியும் அதிக நன்மை தரும். தொழில், வியாபாரத்தில் வளர்ச்சிப்பணி நிறைவேறும். உபரி வருமானம் கிடைக்கும். நிறைவேற்றுவீர்கள்.

**கடகம்:** நண்பரிடம் மனம் விட்டுப் பேசுவீர்கள். எதிர்காலம் குறித்த நம்பிக்கை மேலோங்கும். தொழில் வியாபாரத்தில் அபரிமிதமான வளர்ச்சி ஏற்படும். இலாபம் திருப்திகரமாக இருக்கும்.

**சிம்மம்:** உங்களை சிலர் குறை சொல்லலாம். செயல்களில் சற்று சுறுசுறுப்பு அவசியம். தொழிலில் உள்ள நிலுவைப் பணி நிறைவேறும். எதிர்பார்த்த வருமானம் குறையலாம்.

**கன்னி:** வழக்கத்திற்கு மாறான பணிச்சுமை ஏற்படலாம். அரசின் சட்டத் திட்டத்தை மதித்து நடப்பது நல்லது. தொழிலில் அளவான மூலதனம் போதும். பெண்கள் நகை, பணம் இரவல் கொடுக்க வாங்க வேண்டாம்.

**துலாம்:** மனதில் மகிழ்ச்சி நிறைந்திருக்கும். தொழில், வியாபாரம் செழித்து வளர இஷ்ட தெய்வ அருள்பலம் துணை நிற்கும். ஆதாயம் அதிகரிக்கும். பணியாளர்கள் சலுகை கிடைக்கப் பெறுவர். பெண்கள் இஷ்ட தெய்வ வழிபாட்டில் ஈடுபடுவர்.

**விருச்சிகம்:** சந்தோச உணர்வு மனதை உற்சாகப்படுத்தும். தொழில், வியாபாரத்தில் உற்பத்தி விற்பனை அதிகரிக்கும். மாமன் மைத்துனருக்கு இயன்ற அளவில் உதவுவீர்கள்.

**தனுசு:** எதிர்மறையாக பேசுபவரிடம் விலகிச் செல்லவும். தொழில், வியாபார இலக்குகாலஅவகாசத்தில்நிறைவேறும். அளவான பணவரவு கிடைக்கும். சீரான ஓய்வு உடல்நலத்திற்கு அவசியம்.


**மகரம்:** சூழ்நிலை உணர்ந்து பேசுவது நல்லது. தொழில், வியாபாரத்தில் அளவான பணவரவு கிடைக்கும். பணியாளர்கள் விண்ணப்பித்த கடனுதவி கிடைக்கும்.

**கும்பம்:** உங்களை அவமதித்து பேசியவரும் அன்பு பாராட்டுவார். பெருந்தன்மையுடன் பிறருக்கு உதவு வீர்கள். தொழில், வியாபாரத்தில் வளர்ச்சிப்பணி நிறைவேறும்.

**மீனம்:** மனதில் இனம்புரியாத குழப்பம் ஏற்படலாம். நலம் விரும்புபவரின் ஆலோசனையை ஏற்பது நல்லது. தொழிலில் பணவரவை விட நிர்வாகச் செலவு அதிகரிக்கும். ஒவ்வாத உணவு உண்ண வேண்டாம்.

# 3ஆம் பிரிவு துடுப்பாட்டம் றைட்ரோன் காலிறுதியில்

யாழ்ப்பாணம், ஜூலை 29
இலங்கை துடுப்பாட்டச் சங்கத்தால் நடத்தப்பட்ட மூன்றாம் பிரிவு அணிகளுக்கு இடையிலான தொடரில் றைட்ரோன் அணி காலிறுதிக்குத் தகுதி பெற்றது.
அண்மையில் நடைபெற்ற இந்த ஆட்டத்தில் சாவகச்சேரி ரிபேர்க் ஸ்ரார் அணியை எதிர்த்து றைட்ரோன் விளையாட்டுக் கழக அணி மோதியது.
நாணயச் சுழற்சியில் வெற்றிபெற்ற சாவகச்சேரி ரிபேர்க் ஸ்ரார் அணி முதலில் துடுப்பெடுத்தாடத் தீர்மானித்தது.
இதன்படி முதலில் துடுப்பெடுத்தாடிய அந்த அணி 26.1 பந்துப்பரிமாற்றங்களில் 103 ஓட்டங்களில் சகல இலக்குகளையும் இழந்தது. அதிகபட்சமாக ரஜீவ் 20 ஓட்டங்களையும், சாகித்தியன் 15 ஓட்டங்களையும் பெற்றனர்.
பந்துவீச்சில் உதயசாந் 5 இலக்குகளையும் ரவிராஜ், சேந்திரன் தலா 2 இலக்குகளையும் விஸ்வா ஓர் இலக்கையும் வீழ்த்தினர்.
பதிலுக்குத் துடுப்பெடுத்தாடிய றைட்ரோன் அணி 12.4 பந்துப் பரிமாற்றங்கள் நிறைவில் 5 இலக்குகளை இழந்து 104 ஓட்டங்களைப்பெற்று வெற்றிபெற்றது. அதிகபட்சமாக உதயசாந் 32 ஓட்டங்களையும், விஸ்வா 25 ஓட்டங்களையும், அஜந் ஆட்டமிழக்காமல் 19 ஓட்டங்களையும் பெற்றனர். ரஜீவ் 3 இலக்குகளை வீழ்த்தினார். (ம-23)



# உபதலைவராக பென் ஸ்ரோக்ஸ்

ஆஷஸ் தொடருக்கான இங்கிலாந்து அணியின் உபதலைவராக பென் ஸ்ரோக்ஸ் பெயரிடப்பட்டுள்ளார்.
அண்மையில் முடிவடைந்த உலகக்கிண்ணத் தொடரை இங்கிலாந்து அணி கைப்பற்றுவதற்கு ஸ்ரோக்ஸ் முக்கிய காரணமாக அமைந்தார்.
இதையடுத்து டெஸ்ட் தொடருக்கான இங்கிலாந்து அணியில் மீண்டும் சேர்க்கப்பட்ட ஸ்ரோக்ஸ்க்கு உபதலைவர் பொறுப்பும் கொடுக்கப்பட்டுள்ளது.
இறுதியாக இடம்பெற்ற ஆஷஸ் தொடரின்போது ஸ்ரோக்ஸ் அணியில் இருந்து நீக்கப்பட்டிருந்தார். மதுபோதையில் நபரொருவருடன் கைகலப்பில் ஈடுபட்டிருந்தமைக்காக அவருக்கு எதிராக ஒழுக்காற்று நடவடிக்கை எடுக்கப்பட்டிருந்தது. (ம)

# மைக்கல் கழகம் இறுதிக்கு தகுதி!

யாழ்ப்பாணம், ஜூலை 29
பிரித்தானியா, சுவிட்சர்லாந்து ஒன்றியங்களின் ஏற்பாட்டில் நடைபெறும் அல்வாய் விளையாட்டு விழாவின் ஓர் அங்கமான துடுப்பாட்டத் தொடரில் மாலுசந்தி மைக்கல் அணி இறுதியாட்டத்துக்குத் தகுதி பெற்றது.
மாலுசந்தி மைக்கல் விளையாட்டுக் கழக மைதானத்தில் கடந்த வெள்ளிக்கிழமை இடம்பெற்ற முதலாவது அரையிறுதி ஆட்டத்தில் மைக்கல் அணியை எதிர்த்து அல்வாய் யுத் அணி மோதியது.
முதலில் துடுப்பெடுத்தாடிய மைக்கல் அணி நிர்ணயிக்கப்பட்ட 10 பந்துப் பரிமாற்றங்கள் நிறைவில் 103 ஓட்டங்களைப் பெற்றது. இதில் ரகுவரன் 39 ஓட்டங்களையும், அச்சுதன் 18 ஓட்டங்களையும், ராகவன் 13 ஓட்டங்களையும் பெற்றனர்.
104 ஓட்டங்களைப் பெற்றால் வெற்றியென பதிலுக்குத் துடுப்பெடுத்தாடிய அல்வாய் யுத் அணியினர் 10 பந்துப் பரிமாற்றங்கள் நிறைவில் 4 இலக்குகளை இழந்து 97 ஓட்டங்களை மட்டும் பெற்றனர். இதனால் 6 ஓட்டங்களால் மைக்கல் அணி வெற்றிபெற்றது. (ம-23)




# யாழ். மாவட்டச் செயலகம் பூப்பந்தாட்டத்தில் சம்பியன்

யாழ்ப்பாணம், ஜூலை 29
அரியாலை சரஸ்வதி சனசமூக நிலையத்தின் நூற்றாண்டு விழாவை முன்னிட்டு நடத்தப்பட்ட அரச அலுவலர்களுக்கு இடையிலான பூப்பந்தாட்டத் தொடரில் யாழ்ப்பாணம் மாவட்டச் செயலக கிண்ணம் வென்றது.
சரஸ்வதி சனசமூக நிலைய உள்ளக அரங்கில் நேற்றுமுன்தினம் சனிக்கிழமை மாலை 4 மணிக்கு நடைபெற்ற இறுதியாட்டத்தில் யாழ்ப்பாணப் போதனா மருத்துவமனை அணியை எதிர்த்து யாழ்ப்பாணம் மாவட்டச்செயலக அணி மோதியது. இதில் யாழ்ப்பாணம் மாவட்ட செயலக அணி 3:0 என்ற செற் கணக்கில் வெற்றிபெற்று கிண்ணம் வென்றது. (ம-23)

# இன்றைய மோதல்கள்

யாழ்ப்பாணம், ஜூலை 29

**தாச்சித் தொடர்**

கைதடி மத்தி குமரநகர் விளையாட்டுக் கழகத்தின் 63ஆவது ஆண்டு நிறைவை முன்னிட்டு யாழ்ப்பாண மாவட்ட ரீதியாக தாச்சித் தொடரொன்று நடத்தப்பட்டு வருகின்றது.
இந்தத் தொடரில் இன்று இரவு 7 மணிக்கு இடம்பெறும் ஆட்டத்தில் சண்டிலிப்பாய் உதயசூரியன் விளையாட்டுக் கழக அணியை எதிர்த்து நாவற்குழி சரஸ்வதி விளையாட்டுக் கழக அணி மோதவுள்ளது.
இரவு 8 மணிக்கு இடம்பெறும் ஆட்டத்தில் ஆலடி சிந்து விளையாட்டுக் கழக அணியை எதிர்த்து யுவசக்தி விளையாட்டுக் கழக அணி மோதவுள்ளது.

**கால்பந்தாட்டம்**

இணுவில் கலாஜோதி விளையாட்டுக் கழகம் நடத்தும் அப்புத்துரைதம்பிராஜா ஞாபகார்த்த வெற்றிக்கிண்ணத்துக்கான கால்பந்தாட்டத் தொடரின் ஆட்டங்கள் கழக மைதானத்தில் இடம்பெற்று வருகின்றன.
இந்தத் தொடரில் இன்று திங்கட்கிழமை இரவு 7 மணிக்கு இடம்பெறும் முதலாவது காலிறுதியாட்டத்தில் தாவடி காளியம்பாள் விளையாட்டுக் கழக அணியை எதிர்த்து அராலி ஏ.எல் விளையாட்டுக் கழக அணி மோதவுள்ளது. இரவு 8 மணிக்கு இடம்பெறும் இரண்டாவது காலிறுதியாட்டத்தில் நவாலி சென். பீற்றர்ஸ் விளையாட்டுக் கழக அணியை எதிர்த்து தெல்லிப்பழை நாமகள் விளையாட்டுக் கழக அணி மோதவுள்ளது. (ம-23)


# துடுப்பாட்ட பயிற்சி முகாம்

யாழ்ப்பாணம், ஜூலை 29
யாழ்ப்பாண மாவட்ட துடுப்பாட்டச் சங்கத்தின் ஏற்பாட்டில் துடுப்பாட்ட வீரர்களின் திறனை மேம்படுத்துவதற்கான பயிற்சி முகாம் யாழ்ப்பாணம் சென். பற்றிக்ஸ் கல்லூரி மைதானத்தில் இன்று திங்கட்கிழமை இடம்பெறவுள்ளது.
வீரர்களுக்கு பயிற்சிகளை வழங்குவதற்காக முன்னாள் இலங்கை தேசிய துடுப்பாட்ட வீரர்களான தரங்க பரணவிதான, கசந்த பெர்னாண்டோ, விமுத் தேசபிரிய, மனோச் சரத் சந்திர, கபில வீரசிங்க, நுவன் சொய்ச ஆகியோர் யாழ்ப்பாணம் வந்துள்ளனர். (ம-23)

# சமிக்கு நுழைவிசைவு

இந்திய கிரிக்கெட் அணியின் வேகப்பந்து வீச்சாளர் சமிக்கு நுழைவிசைவு வழங்குவதற்கு அமெரிக்கா மறுத்துவிட்ட நிலையில், இந்தியக் கிரிக்கெட் கட்டுப்பாட்டுச் சபையின் தலையீட்டை அடுத்தி தற்போது நுழைவிசைவு கிடைத்துள்ளது.
இந்தியா - மேற்கிந்தியத் தீவுகளுக்கு இடையிலான மூன்று வகையான தொடர்களும் அமெரிக்காவில் எதிர்வரும் மூன்றாம் திகதி ஆரம்பமாகின்றமை குறிப்பிடத்தக்கது. (ம)


# ஜேர்மனி செல்கின்றார் பற்றிக்ஸின் ஆர்னோல்ட்



யாழ்ப்பாணம், ஜூலை 29
யாழ்ப்பாண் சென். பற்றிக்ஸ் கல்லூரியின் 16 வயதுப்பிரிவு கால்பந்தாட்ட அணியின் தலைவர் அ.ஆர்னோல்ட் கால்பந்தாட்ட பயிற்சி முகாமொன்றில் பங்கெடுப்பதற்காக ஜேர்மனிக்குச் செல்லவுள்ளார்.
சிங்கப்பூரில் அண்மையில் இடம்பெற்ற ஆசிய பிராந்திய கால்பந்தாட்ட பயிற்சி முகாமில் ஆனோல்ட் பங்குகொண்டு தனது திறமையை வெளிப்படுத்தியிருந்தார்.
இதையடுத்தே அவர் ஜேர்மனியில் இடம்பெறவுள்ள கால்பந்தாட்ட பயிற்சி முகாமில் கலந்து கொள்ளவுள்ளார்.
ஓக்ஸ்ட் மாதம் 22ஆம் திகதி தொடக்கம் 30ஆம் திகதி வரை இந்தப் பயிற்சி முகாம் இடம்பெறவுள்ளது. (ம-23)

# ஆஷஸ் தொடரில் சிமித் மிரட்டுவார்

## வாஹ் நம்பிக்கை



ஓகஸ்ட் மாதம் முதலாம் திகதி ஆரம்பிக்கவுள்ள ஆஷஸ் தொடரில் ஆஸ்திரேலிய அணியின் வீரர் ஸ்ரீவ் சிமித் சிறந்த ஆட்டத்தை வெளிப்படுத்துவார் என்று தெரிவித்தார் அந்த அணியின் முன்னாள் தலைவர் வாஹ்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது:

இந்த வருட ஆஷஸ் தொடர் மிகமிகச் சிறப்பானது. இங்கிலாந்து அணி உலகக்கிண்ண தொடரின் உச்சத்துக்குப் ஆஷஸ் தொடரில் களமிறங்குகிறது. ஆஸ்திரேலியாவிடம் இருந்து உலகக் கிண்ணத்தை பறித்தெடுத்துள்ளது இங்கிலாந்து.

இதனால் ஆஷஸ் தொடரில் பதிலடி கொடுக்க,வேண்டிய நிலைமை ஆஸ்திரேலியாவுக்கு உள்ளது. ஆஸ்திரேலியாவின் தூணாக சிமித் இருப்பார். அவர் இந்தத் தொடரில் சிறந்த ஆட்டத்தை வெளிப்படுத்துவார். பந்தைச் சேதப்படுத்திய விவகாரத்துக்குப் பின்னர், இங்கிலாந்துக்கு எதிரான நீண்ட தொடரில் விளையாடவுள்ளார் சிமித். வோர்ணர், பான்குரொப்ட் ஆகியோரும் அத்தகைய நிலையிலேயே உள்ளன. இதனால் இவர்கள் மூவரும் இங்கிலாந்து வீரர்களாலும், ரசிகர்களாலும் சீண்டப்படலாம். ஆனால் அவர்கள் நிலைமையைக் கவனமாகவும் பொறுப்பாகவும் கையாள வேண்டும் என்றார். (ம)

## அசத்துவாரா ஆச்சர்?



ஆஷஸ் தொடருக்கான இங்கிலாந்து அணியில் சேர்க்கப்பட்டுள்ளார் வேகப்பந்து வீச்சாளர் ஜோப்ரா ஆச்சர். உலகக்கிண்ணத் தொடருக்கான இங்கிலாந்து அணியில் விளையாடிய ஆச்சர், அந்த அணி கிண்ணம் வெல்வதற்கு முக்கிய காரணமாக இருந்தார். இதையடுத்து இங்கிலாந்து டெஸ்ட் அணியில் ஆச்சருக்கு இடம் கொடுக்கப்பட்டுள்ளது. (ம)

ஜப்பான் பகிரங்க பூப்பந்து தொடர்;


# சிந்துவை வெளியேற்றி அரையிறுதியில் ஜமகுச்சி

ஜப்பான் பகிரங்க பூப்பந்தாட்ட காலிறுதியில் ஜப்பானிய வீராங்கனை ஜமகுச்சி இந்திய வீராங்கனையான பிவி சிந்துவை வெளியேற்றினார்.


ஜப்பான் பகிரங்க பூப்பந்தாட்டத் தொடர் டோக்கியோவில் நடைபெற்று வருகிறது. நேற்றுமுன்தினம் இடம்பெற்ற பெண்களுக்கான ஒற்றையர் பிரிவு ஆட்டமொன்றில் பிவி சிந்து ஜப்பானைச் சேர்ந்த அகானே ஜமகுச்சியை எதிர்கொண்டார்.

இதில் ஜமகுச்சி 21:18, 21:15 என்ற நேர்செற் கணக்கில் வெற்றி பெற்றார். இந்தத் தோல்வியின் மூலம் சிந்து இந்தத் தொடரில் இருந்து வெளியேறினார்.

கடந்த வாரம் நடைபெற்ற இந்தோனேசிய பகிரங்க பூப்பந்தாட்ட இறுதிப் போட்டியில் அகானே ஜமகுச்சி பிவி சிந்துவை வீழ்த்தி கிண்ணம் வென்றமை குறிப்பிடத்தக்கது. இந்தோனேசிய தோல்வியின் பின்னர் ஊடகங்களுக்கு தெரிவிக்கையில் ஜப்பானிய தொடரில் பதிலடி கொடுப்பேன் என்று குறிப்பிட்டு இருந்தார். ஆனால் இந்தத் தொடரில் மீண்டும் படு தோல்வியுடன் வெளியேறினார்.



24 மணி நேரமும்
உடனுக்குடன் செய்திகளை
அறிந்துகொள்ள
NEWUTHAYAN.COM



# எனது முன்மாதிரியாக நீங்கள் இருக்கிறீர்கள்

## மலிங்கவின் ஓய்வுக்கு பும்ரா வாழ்த்து

பங்களாதேஷ் - இலங்கை அணிகளுக்கு இடையிலான முதலாவது ஒருநாள் போட்டி கடந்த வெள்ளிக்கிழமை இடம் பெற்றது. இலங்கை அணியின் மூத்த வீரர் லசித் மலிங்க இந்தப் போட்டியுடன் ஒருநாள் போட்டிகளிலிருந்து ஓய்வு பெற்றுள்ளார். இதற்கு முன்னாள் கிரிக்கெட் வீரர்கள் பலர் தங்களது வாழ்த்துக்களை தமது ருவிற்றர் பக்கத்தில் பதிவிட்டிருந்தனர்.


கிரிக்கெட்டுக்கு நீங்கள் செய்த அனைத்துக்கும் நன்றி. உங்களை நான் முன்மாதிரியாக எப்போதோ ஏற்றுக்கொண்டிருக்கிறேன். அதனைத் தொடருவேன் என்று இந்திய வீரர் பும்ரா தெரிவித்தார்.

உங்கள் அற்புதமான பயணத்துக்கு எனது வாழ்த்துக்கள் யோர்க்கர் கிங், உங்களைப் போல கால்விரல்களை சேதப் படுத்தக்கூடியபந்துவீச்சாளர் இன்னொருவர் ஒருபோதும் வரப்போவதில்லை என யுவராஜ் சிங் தெரிவித்தார்.

உங்களுடன் ஒரே ஓய்வறையை பகிர்ந்துகொள்வதற்கான வாய்ப்பு கிடைத்தமை எனது அதிர்ஷ்டம், நீங்கள் பெரும் சாதனையாளன், உங்களிடம் உள்ள போராடும் குணம் அனைவருக்கும் புத்துணர்ச்சி அளிக்கக்கூடியது.ஒருநாள் கிரிக்கெட் உங்களை இழந்து தவிக்கப்போகின்றது. நீங்கள் என்றும் நினைகூறப்படுவீர்கள் என பங்களாதேஷின் முஸ்டபிசுர் ரஹ்மான் தெரிவித்தார்.

மும்பாய் இந்தியன் அணிக்காக கடந்த தசாப்தங்களில் விளையாடி போட்டியை வெல்லக்கூடிய ஒருவரை தெரிவு செய்யவேண்டுமென்றால் இவர் அந்தப் பட்டியலில் முன்னணியில் காணப்படுவார், அத்தோடு அணித்தலைவர் என்ற அடிப்படையில் நான் மிகவும் நெருக்கடியாக, பதட்டமாக காணப்பட்ட தருணங்களில் மலிங்க எனக்கு ஆறுதல் அளித்துள்ளார். அவர் ஒருபோதும் ஒரு பந்துவீச்சாளராக தனது பணியை நிறைவேற்ற தவறியதில்லை என்று ரோகித் சர்மா தெரிவித்தார்.

நீங்கள் உங்களுக்கு உண்மையாக இருந்துள்ளீர்கள். அனைத்தையும் விட நீங்கள் சிறந்த நண்பர். இலங்கையை பெருமிதம் அடையச்செய்தவர் என மகேலஜெயவர்த்தன தெரிவித்தார்.



மலிங்கவின் இறுதிப் போட்டியில் கலந்து கொண்டிருந்த எதிர்க்கட்சித் தலைவர் மகிந்த ராஜபக்ச மலிங்கவுக்கு வாழ்த்துக்களைத் தெரிவித்து **அவரது குடும்பத்தினருடன் சிறிது நேரம் உரையாடிச் சென்றார்.**

# பிரிட்டன் குடியுரிமைபெற மொகமட் அமீர் திட்டம்!

பாகிஸ்தான் அணியின் வேகப்பந்து வீச்சாளர் மொகமட் அமீர், தனது 27ஆவது வயதில் டெஸ்ட் கிரிக்கெட்டில் இருந்து ஓய்வை அறிவித்தமை பிரிட்டனில் நிரந்தரமாக குடியேறுவதற்கே என்று பாகிஸ்தான் கிரிக்கெட் வட்டாரங்களில் இருந்து தகவல் வெளிப்பட்டுள்ளது.

பிரிட்டன் குடியுரிமை பெற்ற நர்கிஸ் மாலிக் என்பவர்தான் சமீபத்தில் டெஸ்ட்டிலிருந்து ஓய்வு பெற்ற பாகிஸ்தான் இடது கை வேகப்பந்து வீச்சாளர் மொகமட் அமீரின் மனைவி ஆவார். இந்த நிலையில் தன் மனைவியுடன் இங்கிலாந்திலேயே வீடு கட்டி அங்கேயே நிரந்தரமாக குடியேற அமீர் முடிவெடுத்துள்ளதாக பாகிஸ்தான் கிரிக்கெட் வட்டாரங்கள் தெரிவிக்கின்றன. அமீர் இங்கிலாந்துக் கழகங்களுக்காக தொடர்ந்து விளையாடி வருகின்றமையும் குறிப்பிடத்தக்கது.

(ம)


## ஓடு, செங்கல் விற்பனைக்கு

தரமான நம்பர்வன் ஓடுகள், பல அளவுகளைக் கொண்ட செங்கல் விற்பனைக்கு உண்டு. வன்னி, யாழ்ப்பாணம் போன்ற பிரதேசங்களுக்கு விநியோகிக்கப்படும்.

பிரணவன் என்ரபிறைசஸ்
முத்திரைச் சந்தி, நல்லூர், யாழ்ப்பாணம்.
077 025 6640 (cs 15043) (13)

## ராசி அதிர்ஷ்டம்

| திகதி | வெற்றி வாரம் | வர்ணம் |
|---|---|---|
| 28.07.2019 | 2570 | ஊதா |

தனுசு
வெற்றி இலக்கங்கள்: 05 18 20 31
செவ்வாய்க் கிழமை வெற்றிப் பொதி: ரூ. 2,905,562/=
30.07.2019ம் திகதி செவ்வாய்க் கிழமை சிகப்பு நிற டிக்கட்டுக்களாகும்
வெற்றி பெற்ற சீட்டுக்கள் 6 மாதங்களுக்கு செல்லுபடியாகும்
தொ.பே: 011 4824824 Web: www.dlb.lk

## கோடிபதி ஷனிதா

சீட்டிழுப்பு வாரம்: 473 சீட்டிழுப்பு திகதி: 2019.07.26
வர்ணம்: செம்மஞ்சள் வெள்ளிக்கிழமை
H 42 56 59 76
பச்சை, இளஞ்சிவப்பு, செம்மஞ்சள் நிற டிக்கட்டுகள் முறையே ஞாயிற்றுக்கிழமை, செவ்வாய்க்கிழமை மற்றும் வெள்ளிக்கிழமை சீட்டிழுப்புக்கு செல்லுபடியாகும். வெற்றிபெறும் டிக்கட்டுகள் 6 மாதங்களுக்கு செல்லுபடியாகும்.
தொ.பே: 0112 333 546/47 Web: www.dlb.lk
SMS: DLB<space>LOT<space>KS என டைப் செய்து 1919 இற்கு அனுப்பவும்.

## அத கோடிபதி

சீட்டிழுப்பு வாரம்: 683
வர்ணம்: இளநீலம்
சீட்டிழுப்பு திகதி: 2019.07.28
இன்றைய ஜக்பொட் பரிசு ரூ. 74,202,665/-
வெற்றி இலக்கங்கள்: 12 28 44 64 ஆங்கில எழுத்து M
தொ.பே: 011 4062002 / 0114062062 Web: www.dlb.lk
SMS: DLB<space>LOT<space>AK என டைப் செய்து 1919 இற்கு அனுப்பவும்.
அல்லது துரித அழைப்பு - 0114 824 824, 0112 333 778

## SUPER BALL

சீட்டிழுப்பு வாரம் 1012
சீட்டிழுப்பு திகதி 2019.07.27 சனிக்கிழமை
G 55 62 66 72
ஊதா, பச்சை, நீலம், சிவப்பு நிற டிக்கட்டுகள் முறையே திங்கட்கிழமை, வியாழக்கிழமை, சனிக்கிழமை மற்றும் ஞாயிற்றுக்கிழமை சீட்டிழுப்புக்கு செல்லுபடியாகும். வெற்றிபெறும் டிக்கட்டுகள் 6 மாதங்களுக்கு செல்லுபடியாகும்.
தொ.பே: 0112 333 546/47 Web: www.dlb.lk
SMS: DLB<space>LOT<space>SB என டைப் செய்து 1919 இற்கு அனுப்பவும்.

## வீடு வாடகைக்கு தேவை

அரச உத்தியோகம் பார்க்கும் சிறிய குடும்பம் ஒன்றிற்கு நல்ல சூழலில் அமைந்த வீடு வாடகைக்குத் தேவை.
(யாழ்நகரை அண்மித்த பகுதி விரும்பத்தக்கது)
077 669 9902

## வேலையாள்கள் தேவை

கணினி வடிவமைப்பு
Coreldraw தெரிந்த அனுபவமுள்ள ஆண், பெண் வேலையாள்கள் தேவை.
இன்று 8 - 30 to 10.30 வரை நேரில் தொடர்புகொள்ளவும்
நியூ மைதிலி
இல.38,40 கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.
(in/10807)(13,17)

## யாழ்ப்பாணத்தில் 1 ஏக்கர், 2 ஏக்கர் காணிகள் விற்பனைக்கு
## கற்பகவனம் 2 எழுதுமட்டுவாழ்

உடனடி உறுதி மாற்றம் *
வங்கி கடன் வசதி செய்து தரப்படும்

**1 ஏக்கர் – 16 பரப்பு**
- 40 தென்னை
- 40 - 60 தேக்கு
- 20 கஜூ மரம்
- 10 - 15 மாமரம்
- கல் இருக்கை 1 தொகுதி
- சுற்று முட்கம்பிவேலி படலையுடன்

**28 இலட்சம்**
(5 வருட பராமரிப்பு உள்ளடங்கலாக)



**2 ஏக்கர் – 32 பரப்பு**
- 80 தென்னை
- 80 - 90 தேக்கு
- 40 கஜூ மரம்
- 20 - 30 மாமரம்
- கல் இருக்கை 1 தொகுதி
- சுற்று முட்கம்பிவேலி படலையுடன்

**53 இலட்சம்**
(5 வருட பராமரிப்பு உள்ளடங்கலாக)

- அனைத்து மரங்களும் நட்டு உரிய முறையில் **5 வருடங்கள் பராமரிப்பு** செய்து தரப்படும்!
- 30 அடி, 20அடி, 15 அடி அகல பாதை
- விடுமுறை வீடு அமைப்பதற்கான இடவசதி
- 24 மணிநேர பாதுகாப்பு
- விளைபொருட்களுக்கான சந்தை வசதி

**பொதுவான வசதிகள்**
பொது விடுதி · உணவகம் · செயற்கை மழைத் தடாகம் · விளையாட்டுத்திடல் · நடைபயிற்சிக்கான பாதை · மீன்பிடி குளம் · முந்திரிகை தோட்டம் · மூலிகைத் தோட்டம்

5 வருட பராமரிப்பு இயற்கை வழியில்
100% ORGANIC



சி. அனுராஜ்
உரிமையாளர், விற்பனையாளர்

078 284 5000  021 492 7778
55/A, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்
Good Gift Property Developers (Pvt) Ltd
Reg. No.: PV 115306

## வெளிநாடுகளுக்கான துரித தபால்கள், பொதிகள் சேவை

- அதி விரைவு, பாதுகாப்பு, நம்பகத்தன்மை
- கடலுணவு, இறைச்சி, எண்ணெய் வகை, மருந்துப் பொருள்கள், பழ வகைகள், பால் மா வகைகள் என்பவற்றையும் அனுப்பி கொள்ள முடியும்.
- நியாயமான கட்டணத்தில் நிறைந்த சேவை.

20 வருடகால அசைக்க முடியாத நம்பிக்கையை வென்ற நாம்

அருள் குளோபல் எக்ஸ்பிறஸ்
1, பிறவுண் வீதி, நாவலர் சந்தி, யாழ்ப்பாணம்.
021 222 6113


இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேற்) லிமிட்டெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361 ஆம் இலக்கத்தில் உள்ள அவர்களது பணிமனையில் 29.07.2019 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.